"மைந்தவோ எனும் மாமகனே எனும்
எந்தையோ எனும் என் உயிரே எனும்
முந்தினேன் உனை நான் உளனே எனும்
வெந்த புண்ணிடை வேல் பட்ட வெம்மையான்"

என்று இராவணன் புலம்புகிறான். போர்க்களத்திற்குச் சென்று தன் மகனின் உடலை எடுத்துக் கொண்டு இலங்கை நகருக்குள் வந்தான். உனது வல்லமையால் நினைத்ததை முடித்து வெற்றி பெற்ற நான் இப்போது நீ எனக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடனை நான் உனக்குச் செய்ய வேண்டிய தாயிற்றே என்று புலம்புகிறான்.

"சினத்தோடும் கொற்றம் முற்ற இந்திரன் செல்
வம் மேவ
நினைத்தது முடித்து நின்றேன் நேர் இழை
ஒருத்தி நீரால்
எனக்கு நீ செயத் தக்க கடன் எல்லாம் ஏங்கி
ஏங்கி
உனக்கு நான் செய்வது ஆனேன் என்னின்
யார் உலகத்து உள்ளார்"

என்பது கம்பன் கவிதையாகும்.

இந்திரசித்தனின் உடல் மீது விழுந்து மண்டோதரி புலம்புகிறாள். சீதை தானே இத்தனைக்கும் காரணம் என்று இராவணனுக்குக் கடுங்கோபம் ஏற்படுகிறது. சீதையைக் கொல்வேன் என்று வாளை உறுவிக் கொண்டு ஓடுகிறான். அப்போது முதலமைச்சன் மகோதரன் அவனைத் தடுத்து "உனது புகழுக்கு இது நல்லதன்று" என்று எடுத்துக் கூறி இராவணனைத் தடுத்து நிறுத்தினான்.

இங்கு மகோதரன் சில முக்கிய அரசியல் நெறிகளையும் பொது நெறிகளையும் எடுத்துக் கூறுவதைக் கம்பன் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

"நீர் உள தனையும் சூழ்ந்த நெருப்புள தனை
யும் நீண்ட

உலைவு இலாத்தருமம் பூண்டாய் உலகுள
 தனையும் உள்ளாய்,
தலைவன் நி உலகுக்கெல்லாம் உனக்கு
 அது தக்கதே, ஆல்
புலை உறு மரணம் எய்தல் எனக்கு இது
 புகழதே, ஆல்”

என்று கும்பகருணன் கூறுவதைக் கவிதை குறிப்பிடுகிறது.

“கருத்திலா இறைவன், தீமை கருதினால்
 அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றே திருத்தலாம்,
 தீராது ஆயின்
பொருத்துறு பொருள் உண்டாமோ? பொரு
 தொழிற்கு உரியர்ஆகி
ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு
 உரியது அம்மா.”

“அரசன் போதிய அறிவில்லாமல் தீமையைக் கருதினால், அதை எடுத்துக் கூறிச் சுட்டிக்காட்டித் தலைவனை அப்பொழுதே திருத்தலாம். திருத்த முயற்சிக்கலாம். அது முடியாமல் போய் விட்டால் அதற்காக அவனைக் கை விடுதல் ஆகாது. நம்மைப் போருக்காகத் தயார் படுத்திய பின்னர், நம்முடைய உயிர் அவருக்குரியதாகும். அவருக்கு முன்னர் சாவது நமது கடமையாகும்”என்று கும்பகருணன் கூறுகிறார். இங்குக் கம்பன் செஞ்சோற்றுக்கடன் பற்றிக் கும்பகருணன் மூலம் குறிப்பிட்டுக் கூறுகிறார் போலும்,

மகாபாரதக் கதையில், குந்தி கர்ணனிடம் சென்று தான் அவனது தாய் என்பதை நிரூபித்து விட்டு, அவனைத் தனது சகோதரர்களுடன் வந்து சேர்ந்து கொள்ளும்படி வேண்டிக் கொண்ட போது கர்ணன்,

“பெற்ற நீர் மக அன்பிலாமையோ அன்றிப்
 பெரும் பழி நாணியோ விடுத்தீர்,
அற்றை நாள் தொடங்கி என்னை இன்றள
 வும் ஆருயிர்த்துணையெனக் கருதி

கொற்றமா மகுடம் புனைந்து அரசளித்து
கூட உண்டு உரிய தம்பியரும்
சுற்றமானவரும் போற்றத் தோற்றமும் ஏற்ற
மும் அளித்தான்"

"மடந்தை பொற்றிரு மேகலை மணியுகவே
மாசறத்திகழும் ஏகாந்த
இடந்தனில் நான் அயர்ந்திருப்ப எடுக்கவோ
கோக்கவோ என்றான்
திடம் படுத்திடவே ராஜ ராஜனுக்குச் செரு
முனை சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதே எனக் கினிக் கருமமும்
தருமமும் என்றான்."

என்று கருணன் கூறியதை வில்லிபுத்தூரார் குறிப்பிடுவதும் இங்கு நினைவு கூறத் தக்கதாகும்.

"நமக்கு உணவூட்டி நெடிது நாள் வளர்த்து போர்க்கோலம் செய்து விட்ட பின்னர், அதில் தருமம் அதருமம் என்று பாராமல், எனது கடமையைச் செய்தலே, செய்து உயிர் கொடுத்தலே எனக்கு மேலானதாகும்" என்று கும்பகருணன் கூறியதைக் கம்பன் மிகவும் நுட்பமாக எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம். இன்னும்,

இராவணன், மூவுலகையும் ஆண்ட புகழ் பெற்ற மாமன்னன். அந்தப் பெருமன்னன் தனது சேனையோடும் கிளைகளோடும் தனது தம்பிகள் இல்லாமல் தன்னந்தனியே மண் மீது மாண்டு கிடப்பதா, அது எப்படி சரியாகும், என்றும் கும்பகருணன் கூறுகிறான்.

"தும்பி அம்தொடை யல் வீரன் சுடுகணை
துரப்பச் சுற்றும்
வெம்பு வெம் சேனையோடும் வேறுள
கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் காண ஒருவன் மூவுலகை
ஆண்டான்

தம்பியை இன்றி மாண்டு கிடப்பனோ தமை
யன் மண்மேல்,”

என்று கும்பகருணன் கூறுவதைக் கம்பன் மிகவும் சிறப்பாகவே எடுத்துக் காட்டுவதைக் காண்கிறோம்.

இன்னும் கும்பகருணன் சிறந்த தத்துவ ஞானக் கருத்தோடு கூடிய அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களையும் தனது அரக்கர் குண இயல்போடு இணைத்துத் தனது தம்பியிடம் எடுத்துக் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

“செம்பிட்டுச் செய்த இஞ்சித்திரு நகர்ச்
செல்வம் தேறி
வம்பு இட்ட தெரியல் எம்முன் உயிர் கொ
ண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னம் கொண்ட புண் உடை
நெஞ்சோடு ஐய!
கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றை
யும் ஆடல் கொண்டேன்”

“நிலையில்லாத அரசுச் செல்வத்தை நம்பி, நம்முடைய பகைவரை வாழ்த்தி நின்று, நமது உடம்பில் நமது நெஞ்சில் அந்தப் பகைவரின் அம்புகளால் பட்ட புண்களையுடைய உள்ளத்தோடு அவர்களைக் கும்பிட்டு நான் வாழ மாட்டேன், மரணத்தைக் கண்டும் நான் அஞ்ச மாட்டேன் என்று கும்பகருணன் கூறுகிறான் இக்கருத்து ஒரு தனித்தன்மையான அரசியல் நிலை பாடாகும். என்ன தான் இருந்தாலும் பகைவன் பகைவன் தான். போர்க்களத்தில் நின்று கொண்டு இடம் மாறுவது கேவலமானதாகும். எதிரிகளின் அம்புகள் பட்டு எங்கள் நெஞ்சுகள் எல்லாம் புண்ணாகி இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. நிலையில்லாத வாழ்க்கையை அரசைச் செல்வத்தை நம்பி நான் யாருக்கும் கும்பிட்டு வாழ மாட்டேன் என்று ஒரு தன்மான உணர்வோடும் சுய மரியாதையுள்ள விடுதலை உணர்வோடும் கும்பகருணன் மிகவும் உறுதியாகத் தனது கருத்தை எடுத்துக் கூறி வீடணனுடைய ஆலோசனையை மறுத்து விடுகிறான். இலங்கையின் அரசியலில் கும்பகருணனுடைய கொள்கை நிலையும் போர் உத்தியும் தனித்தன்மை கொண்டதாக

இருக்கிறது. அவன் தனது நிலையில் வெற்றி பெறவில்லை. ஆயினும் அவன் வரலாற்றில் தனி இடம் பெற்று விட்டான்.

மேலும் கும்பகருணன் தொடர்ந்து பேசுகிறான். நான் கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியுமானால் ஏற்றுக்கொள். அதில் ஒரு மாற்றத்தை நீ எதிர் பார்த்தால் அதில் பலன் இல்லை. நடக்கவும் நடக்காது. நீ போய் அவர்களுடன் சேர்ந்து கொண்டு நன்றாக இருப்பாயாக."

"தாழ்கிற்பாய் அல்லை, என்சொல் தலைக்
    கொளத் தக்கது என்று
கேட்கிற்பாய் ஆயின் எய்தி அவரோடும்
    கேழீய நட்பை
வேட்கிற்பாய் இனி ஓர் மாற்றம் விளம்பி
    னால் விளைவு உண்டு என்று
சூழ்கிற்பாய் அல்லை யாரும் தொழநிற்பாய்
    என்னச் சொன்னான் "

இன்னும்,

நீ பிழைத்திருப்பாயாக, இராமனை வேண்டி நின்று, நாங்கள் எல்லாம் மடிந்த பின்னர், வேத நூல்களின் படி எங்களுக்கு இறுதிக் கடன்களை ஆற்றி நாங்கள் நரகத்தை அடையாமல் காப்பாயாக என்றும் கூறுகிறான்.

"போதி நீ ஐய, பின்னைப் பொன்றினார்க்கு
    எல்லாம் நின்ற
வேதியர் தேவன் தன்னை வேண்டினர்
    பெற்று மெய்ம்மை
ஆதிநூல் மரபினானே கடன்களும் ஆற்றி
    ஏற்றி
மாதுயர் நரகம் நண்ணா வண்ணமும்
    காத்தி மன்னோ! "

என்று கூறி, முடிவாக,

நடப்பது நடக்கட்டும், நடப்பது நடந்தே தீரும். ஆவது ஆகட்டும், முடியும் காலத்தில் முடிவது முடிந்தே தீரும். அழியக் கூடியது அழிந்து சிதைந்து போவது உறுதி. அதை ஆண்டவனே வந்தாலும் தடுக்க முடியாது. அதைப் பற்றி உன்னைக் காட்டிலும் தெளிவாகத் தெரிந்தவர் வேறு யார் உளர். நீ வருந்த வேண்டாம். எனக்காக நீ இரக்கம் கொள்ளவும் வேண்டாம். நீ போகலாம் என்று கூறி வீடணனைக் கட்டித் தழுவிக் கண்ணீர் விட்டு அவனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டான்.

"ஆகுவது ஆகும் காலத்து அழிவதும் அழிந்து
 சிந்திப்
போகுவது அயலே நின்று போற்றினும் போதல்
 திண்ணம்
சேகு அறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்
 வருத்தம் செய்யாது
ஏகுதி எம்மை நோக்கி இரங்கலை என்றும்
 உள்ளாய்"

என்று கும்பகருணன் கூறி முடிக்கிறான். இத்துடன் கும்பகருணன் – வீடணன் உரையாடல் முடிகிறது.

வீடணன், கும்பகருணனிடம் பேசி விட்டு இராமனிடம் திரும்பி வந்து "சொல்வதெல்லாம் சொல்லிப் பார்த்தேன். அவன் அசைய வில்லை. அவன் குலத்து மானம் தீர்ந்திலன்" என்று கூறினான்.

"எய்திய நிறுதர் கோனும் இராமனை இறைஞ்சி
 எந்தாய்
உய்திறன் உடையார்க் கன்றோ அறன்வழி
 ஒழுகும் உள்ளம்
பெய்திறம் எல்லாம் பெய்து பேசினேன் பெய
 ரும் தன்மை,
செய்திலன் குலத்து மானம் தீர்ந்திலன் சிறி
 தும்" என்றான்.

திரும்பி வந்து அவ்வாறு கூறிய வீடணனிடம் இராமன் மிகவும் அமைதியாகவும் உருக்கமாகவும், "உன் கண் முன்னாலேயே

உனது அண்ணனைக் கொல்வது நல்லதல்ல என்னும் காரணத்தினால்தான் உன்னை அவனிடம் அனுப்பினேன். இனி வேறு வழியில்லை"என்று எடுத்துக் கூறி/கும்பகருணனை, வீடணன் கண் முன்னாலேயே கொல்வதற்கு ஒரு அரசியல் மற்றும் போர் உபாய நியாயத்தையும் இராமன் வகுத்துக் கொள்கிறான். வீடணனுக்கு இராமன் கூறிய கருத்தைக் கம்பன் தனது கவிதையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"கொய் திறச் சடையின் கற்றைக்
 கொந்தளக் கோலக் கொண்டல்
நொய்தினில் துளக்கி, ஐய!
 நின் எதிர் நும் முன்னோனை
எய்து உறத்து ணித்து வீழ்த்தல்
 இனிது அன்றென்று இனைய சொன்னேன்
செய்திறன் இனி வேறுண்டோ?
 விதியை யார் தீர்க்ககிற் பார்? "

அரசியலிலும் போர் நடவடிக்கைகளிலும் வெறும் மன உணர்ச்சிகளுக்குப் பொதுவாக இடமில்லை என்றாலும் இராமாயணப் போரில் இராமன் தனது வெற்றிக்காக மிகவும் நுணுக்கமாக, உபாயங்களையும், உத்திகளையும் கையாண்டு வியூகங்களை வகுத்துத் தனது போர் நடவடிக்கைகளை மிகவும் நிதானமாக நடத்திக் கொண்டு செல்கிறான். பாச உணர்வில் பாதிக்கப் பட்ட வீடணன், கும்பகருணப் போரின் போது களத்தில் காணப்படவில்லை. வேறு வேலைகளுக்காகப் போர்க் களத்தின் பின் அணியில் இருந்ததாகத் தெரிகிறது.

கும்பகருணன் நடத்திய போர் மிகக் கடுமையாக இருந்தது. அங்கதன் கும்பகருணனை எதிர்த்தான். அங்கதன் சோர்வடைந்தான். மாருதி தலையிட்டு கும்பகருணனுடன் மோதினான். அதிலும் அவன் கலங்கவில்லை. பின்னர் இலக்குவன் அவனை எதிர்த்து மோதினான். இராமன் தம்பியும் இராவணன் தம்பியும் போர்க் களத்தில் மோதினார்கள். அப்போது கும்பகருணன் இலக்குவனிடத்தில் "என் உடன் பிறந்தவள் ஒரு பெண் கொடி. அவள் ஒரு குற்றமும் செய்யவில்லை. அவளுடைய நாசியை அறுத்தாய். அவளுடைய கூந்தலைத் தொட்டு இழுத்து அவளுடைய

அங்கங்களை அறுத்து அவமானப் படுத்தினாய். உன்னுடைய அந்தக் கரங்களை வெட்டி வீழ்த்துகிறேன் பார்'' என்று வஞ்சினம் கூறி இலக்குவனை எதிர்த்து உக்கிரமாகப் போரிட்டான்.

"பெய் தவத்தின் ஒரு பெண் கொடி எம்முடன் பிறந்தாள்,
செய்த குற்றம் ஒன்றும் இல்லவள் நாசி வெம் சினத்தால்
கொய்த கொற்றவ, மற்றவன் கூந்தல் தொட்டு ஈர்த்த
கை தவத்திடைக் கிடத்துவேன் காக்குதி" என்றான்.

கும்பகருணனுடைய இந்தப் பொருள் பொதிந்த கேள்விக்கு இலக்குவனிடம் நேரடியான பதில் இல்லை. உனக்குச் சொல்லினால் பதில் கூற விரும்பவில்லை. வில்லினால் பதில் சொல்கிறேன் என்று இலக்குவன் கூறுகிறான்.

"அல்லினால் செய்த நிறத்தவன் அனையது பகர,
மல்லினால் செய்த புயத்தவன், மாற்றங்கள் நும்பால்
வில்லினால் சொல்லின் அல்லது, வெம்திறல் வெள்கச்
சொல்லினால் சொலக் கற்றிலும் யாம்'' எனச் சொன்னான்.

கம்பன் மிகவும் நயமாக இங்கு ஒரு கருத்தை இலை மறைவு காயாக எடுத்துக் காட்டுகிறான். சூர்ப்பனகை என்ன தவறு செய்தாள்? அவளைத் தொட்டுப் பிடித்து இழுத்து அவளுடைய அங்கங்களை அறுத்து அவமானப் படுத்தும் அளவுக்கு என்ன குற்றம் செய்தாள்? கும்பகருணனுடைய இந்த கேள்விக்கு இலக்குவனிடமிருந்து நேரடியான பதில் இல்லை. சொல்லினால் பதில் இல்லாமல் வில்லினால் பதில் சொல்கிறேன் என்று கூறிப் போரைத் தொடருகிறான். ஆயினும் சூர்ப்பனகையின் பாத்திரம் இராமாயணக் கதையில் உள்ள, பின்னலும் முடிச்சுமாகும். வாலியின் மீது மறைந்து நின்று அம்பெய்ததற்கு என்ன காரணம் என்னும் கேள்விக்கு எப்படி நேரடியான பதில் இல்லையோ அதே போல சூர்ப்பனகைக்குக் கொடுக்கப் பட்ட கொடும் தண்டனைக்கும் என்ன காரணம் என்னும் கேள்விக்குக் கேட்போர் கேட்கும் போது நேரடியான பதில் இல்லை. இதில் மறைவான ஒரு அரசியல் கருத்து அமைந்திருக்கிறது. வலுவுள்ளவர்கள் சிலர் நியாயமான கேள்விகளுக்குக் கூட அது அவர்கள் மீது எழுப்பப் பட்டால் அதற்கு நேரடியாகப் பதில் கிடைப்பதில்லை. அவர்களுடைய வலுதான் பதில் சொல்லும் என்பதும்

ஒரு வகை அரசியலாகும். அது வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதாகும், அல்லது அரசியல் தந்திரம் என்றும் கூறப்படும்.

கும்பகருணன் மிக்க வீரத்துடன் போர் புரிந்தான். அவனுடைய பயங்கரமான போரைக் கண்டு வானரப் படைகளும் பயந்து ஓடின. கும்பகருணனை எதிர்த்து அங்கதன், மாருதி, இலக்குவன், சுக்கிரீவன் ஆகியோரும் போர் புரிந்து சோர்வடைந்தனர். கடைசியில் அவனை எதிர்க்க இராமனே நேரடியாக வந்தான். கும்பகருணன், இராமனுடைய கணைகளால் தனது நாசியையும், காதுகளையும் இழந்து தனது படைகளும் அழிந்து தனியே நின்றான்.

எல்லாவற்றையும் இழந்து தனியே நிற்கிறாய். நீதி மானான வீடணனுடன் நீ உடன் பிறந்தவன். நீ பிழைத்துச் செல்லலாம் இல்லாவிட்டால் நீ போரில் மடிவாய் உன்னை நான் உன் தம்பி மூலம் என்னிடம் வரும்படி அழைத்தேன். நீ வரவில்லை. நீ உன் அண்ணனுடைய குருட்டுத் தனமான முரட்டுத்தனமான ஆணையின் வழியில் நின்றாய். நீ பிழைத்துப் போனால் இன்னும் நீண்ட காலம் உறங்கி, உழைத்துக் கடைசியில் மோட்ச மடைவாய் இல்லையேல் இப்போதே அழிவாய் என்று இராமன் கும்பகருணன் மீது தனது அரசியல் கணைகளை ஏவினான்.

"ஏதியோடு எதிர் பெரும் துணை
　　இழந்தனை, எதிர் ஒரு தனி நின்றாய்
நீதி யோனுடன் பிறந்தனை
　　ஆகலின் நின் உயிர் நினக்கு ஈவேன்
போதியோ? பின்றை வருதியோ?
　　அன்று எனில் போர் புரிந்து இப்போதே
சாதியோ? நினக்கு உறுவது
　　சொல்லுதி, சமைவுறத் தெரிந்து அம்மா!"

"இழைத்த தீவினை இற்றிலது
　　ஆதலின் யான் உனை இளை யோனால்
அழைத்த போதினும் வந்திலை
　　அந்தகன் ஆணையின் வழி நின்றாய்

பிழைத்ததால் உனக்கு அரும் திரு
நாளொரு பெருந்துயில், நெடுங்காலம்
உழைத்து வீடுவது ஆயினை
பின் உனக்கு உறுவது ஒன்று உரை என்றான்."

என்பது கம்பனுடைய கவிதையாகும்.

இராமனுடைய வார்த்தைகளுக்குக் கும்பகருணன் தனது நிலையிலிருந்து சரியான அரசியல் மறு மொழியைக் கூறுகிறான் என்றே சொல்லலாம்.

பெருமையும், மானமும், வீரத்தின் வழியில் வழுவாத அரசியல் நீதியும் குல தருமமாகக் கொண்டவர்கள் நீங்கள். நீ மூவுலகையும் ஆள்பவனாக இருந்தாலும் பழி எது, பாவம் எது என்பதைத் தெளிவாக உணர்ந்த ஒரு அரசன் அல்லவா? அந்தக் கடமையை நீ மறந்து விடக் கூடாது. நீ சரியான கருத்தைக் கூறவில்லை. நானும் எனது தங்கையைப் போல செவிகளையும் மூக்கையும் இழந்து என் முகத்தை வெளியில் காட்டி வாழ மாட்டேன்" என்று கும்பகருணன் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

"மற்றெலாம் நிற்க வாசியும்
மானமும் மறத்துறை வழுவாத
கொற்ற நீதியும் குல முதல்
தருமமும் என்று இவை குடியாகப்
பெற்ற நுங்களால் எங்களைப்
பிரிந்து தன் பெரும் செவி மூக்கோடும்
அற்ற எங்கை போல் என்முகம்
காட்டி நின்று ஆற்ற லேன் உயிர் "

என்றும்,

"ஒருத்தன் நீ தனி உலகு ஒரு
மூன்றிற்கும் ஆயினும் பழி யோரும்
கருத்தினால் வரும் சேவகன்
அல்லையோ? சேவகர் கடன் ஓராய்

> செருத்தின் வாளினால் திறத்திறன்
> உங்களை அமர்த்துறைச்சிரம் கொய்து
> பொருத்தினால் அது பொருந்துமோ
> தக்கது புகன்றிலை போல் என்றான்"

என்றும் கும்பகருணன் கூறுகிறான்.

கும்பகருணன் தொடர்ந்து வீரத்துடன் போர் புரிந்தான். இராமன் தனது கணைகளால் கும்பகருணனுடைய கரங்களைத் துண்டித்தான். பின்னர் அவன் தனது கால்களால் போரிட்டான். இராமன் அவனுடைய இரு கால்களையும் வெட்டினான். பின்னர் அவன் நெஞ்சால் தவழ்ந்து கொண்டு பற்களால் பெரும் கற்களைப் பற்றிக் கொண்டு அவைகளை ஊதி உருட்டிப் போரிட்டான். அவனுடைய இந்த பேராற்றல் மிக்க போர் ஆற்றலை இராமன் பக்கமிருந்த அனைவரும் வியந்து பாராட்டினர். பின்னர் அவனும் சோர்வடைந்தான்.

காதுகள், மூக்கு, கைகள், கால்கள் ஆகியவைகளை இழந்த கும்பகருணன் இராமனை நோக்கி, "என்னுடைய வினை தீர்ந்தது. எனது தம்பி நல்லவன். உன்னை அடைக்கலம் அடைந்துள்ளான். அவன் நீதியால் வந்த பெரு நெறியில்லாமல் சாதியால் வந்த சிறு நெறி அறியான். நீயோ அரசன் வடிவில் வந்துள்ள வேதியன். எனது அண்ணன் அவனைக் கண்டால் அவன் மீதுள்ள கோபத்தால் அவனைக் கொன்று விடுவான். எனவே உனது தம்பியையும் உன்னையும், அனுமனையும் என் தம்பி பிரியாமல் இருக்க அருள் புரிவாயாக" என்று கேட்டு வேண்டுகோள் விடுக்கிறான்.

"இலங்கையைப் பற்றிய இரகசியங்களையெல்லாம், இலங்கையின் வீரர்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் அவர்களுடைய பலம், பலவீனம், சாகசத்திறன், ஆயுதங்கள், ஆயுதப் பயிற்சிகள் முதலியவைகளைப் பற்றியெல்லாம் வீடணன் இராமனுக்கு விவரமாகச் சொல்லியிருப்பதால்தான் இராமனுக்கு இத்தனை வெற்றிகளும் கிடைக்கிறது என்பதை இராவணன் நன்கு அறிந்துள்ளான். அதனால் இராவணனுக்கு வீடணனைக் காணும் போது கடுங்கோபம் வரும். தனது அரசியல் துரோகியைக் கொல்லாமல் விட மாட்டான். எதிரில் பட்டால் நிச்சயம் அவனுக்கு

ஆபத்துத்தான். எனவே உன்னையும் உன் தம்பிகயையும் அனுமனையும் என் தம்பி வீடணன் பிரியாதிருக்கும் படியாகப் பார்த்துக் கொள்" என்று இராமனிடம் தனது தம்பிக்காக வேண்டுவது கும்பகருணனுடைய பாத்திரச் சிறப்பு மட்டுமல்ல அதில் ஒரு முக்கியமான அரசியல் நுட்பமும் அமைந்திருப்பதைக் காணலாம்.

"நீதியால் வந்தது ஒரு நெடும் தரும நெறி அல்லால்
சாதியால் வந்த சிறுநெறி அறியான் என் தம்பி
ஆதியாய்! உனை அடைந்தான், அரசன் உருக்
கொண்டு அமைந்த
வேதியா! இன்னம் உனக்கு அடைக்கலம் யான்
வேண்டினேன்"

"வெல்லுமா நினைக்கின்ற வேல் அரக்கன்
வேரோடும்
கல்லுமா முயல்கின்றான் இவன் என்னும்
கறுவுடையான்
ஒல்லுமாறு இயலு மேல் உடன் பிறப்பின் பயன்
ஓரான்
கொல்லுமால் அவன் இவனைக் குறிக் கோடி
கோடாதாய்,"

"தம்பியென நினைந்து இரங்கித்
தவிரான் அத்தகவு இல்லான்
நம்பி இவன் தனைக் காணின் கொல்லும்
இறை நல்கானால்
உம்பியைத்தான், உன்னைத்தான் அனு
மனைத்தான் ஒரு பொழுதும்
எம்பி பிரியானாக அருள்கி! யான் வேண்
டினேன்."

இவ்வாறு கும்பகருணன் தனது தம்பி வீடணனைக் காக்குமாறு இராமனிடம் வேண்டிக் கொண்டு தனது மூக்கில்லாத

முகத்தை மற்றவர்கள் காணா வண்ணம் தனது கழுத்தை நீக்கித் தலையைக் கடலுக்குள் போக்குவாய்" என்றும் அவனை வேண்டிக் கொண்டான்.

"மூக்கிலா முகம் என்று முனிவர்களும்
அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன் கணையால்
என் கழுத்தை,
நீக்குவாய், நீக்கிய பின் நெடும் தலையை
கரும் கடலுள்
போக்குவாய், இது நின்னை வேண்டுகின்ற
பொருள்" என்றான்.

கும்பகருணனுடைய வேண்டுகோளின் படி இராமன் தனது கணையால் கும்பகருணனுடைய தலையைக் கொய்து அதைக் கடலின் ஆழத்தில் கொண்டு போய் அழுத்தி விட்டான் என்று கம்பன் கவிதையில் அழகு படக் கூறியுள்ளார்.

"வரம் கொண்டான் இனி மறுத்தல் வழக்கு
அன்று என்று ஒரு வாளி
உரம் கொண்ட தடம் சிலையின் உயர் நெடு
நாண் உள் கொளுவாச்
சிரம் கொண்டான், கொண்டதனைத் திண்
காற்றின் கடும் படையால்
அரம் கொண்ட கரும் கடலின் அழுவத்துள்
அழுத்தினான்."

என்பது அக்கவிதையாகும். இத்துடன் கும்பகருணனுடைய கதை முடிவடைகிறது.

இலங்கையின் அரசியலில் மாவீரன் கும்பகருணனுடைய வரலாறு ஒரு முக்கியமான அத்தியாயமாகும். இராவணனுடன் மிகவும் நெருக்கமான பாசமும் பந்தமும் உள்ளவன். அவனிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டவன். தன் அண்ணனுக்காகவே உயிர் வாழ்ந்தவன். செஞ்சோற்றுக் கடன் கழித்தவன். கும்பகருணன்

மிகச் சிறந்த வல்லமை மிக்க வீரன். பலவான், துணிவு மிக்கவன், கடமைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன், நீதி அறிந்தவன், அறம் உணர்ந்தவன், சகோதர பாசமும் இரக்க குணமும் நிறைந்தவன்.

இந்த மாவீரனை இராமன் நன்கு புரிந்து கொண்டு, அரசியல் நுட்பத்துடனும், உத்திகளுடனும், அவனைக் கையாண்டு, அவனுடைய கடைசி விருப்பத்தையும் நிறைவேற்றுகிறான். வாலியைப் போலவே கும்பகருணனும் இராமனுடைய கணையால் ஞானமும் அருளும் பெற்று வீடு பெறுகிறான்.

கும்பகருணனுடைய முடிவுடன் இராம இராவண யுத்தத்தின் ஒரு அத்தியாயம் முடிவடைகிறது.

கும்பகருணன், போர்க்களத்தில் மாண்ட செய்தியைக் கேட்டு இராவணன் மிகுந்த துயரமடைந்தான். இதுவரை தோல்வியே கண்டறியாத ஒரு மாவீரன் தன் உடன் பிறந்தோன் தனது இரத்தத்துடன் இணைந்தவன், போர்க்களத்தில் ஒரு மனிதன் கணையால் மாண்டான் என்னும் செய்தி அவனை அதிகமாக வருத்துகிறது.

இராவணன் கும்பகருணனுடைய மரணத்தால் அடைந்த துயரத்தைப் பற்றிக் கம்பன் தரும் கவிதைகள் அற்புதமானவை.

“வல் நெஞ்சின் என்னை நீ, நீத்துப் போய்
வான் அடைந்தால்
இன்னும் சிலரோடு ஒரு வயிற்றில் யார்
பிறப்பார்?
மின் அஞ்சுவே லோய்! விழி அஞ்சி வாழ்
கின்றார்
தம் நெஞ்சம் தாமே தடவாரோ? வான
வர்கள்?”

“கல் அன்றோ நீராடும் காலத்து உல்கால் தேய்க்கும்
மல் ஒன்று தோளாய் வடமேரு? மானுடவன்
வில்லொன்று நின்னை விளித்துளது என்னும்
சொல் அன்றோ என்னைச் சுடுகின்றது தோன்றால்? ”

"செந்தேன் பருகித் திசை திசையும் நீ வாழ
உய்ந்தேன், இனியின்று நானும் உனக்கு ஆவி
தந்தேன், பிரியேன், தனிப் போகத் தாழ்க்கிலேன்,
வந்தென் தொடர மதக்களிறே வந்தேனால்? "

என்று இராவணன் பெரும் துயரம் அடைந்து பேசுவதைக் கம்பர் நயம் படக் கூறுகிறார்.

கல்லினும் வலுவான எனது நெஞ்சும் கலங்குகிறது. என்னைப் பிரிந்து நீ போய்விட்டாய் உன்னைப் போல் ஒரு வயிற்றில் பிறக்கும் சகோதரர் வேறுயார் உள்ளார்கள். உனது கூர்மையான வேல்களைக் கண்டு மின்னல்கூட அஞ்சும். வானோர்களுக்கும் இனி அச்சமி ல்லாமல் போய்விட்டது. நீ குளிக்கும்போது மலையே வந்து உன்கால்களைத் தேய்த்துவிடும். மேருமலையைப் போன்ற தோள்களையுடைய உன்னை, ஒரு சாதாரண மனிதனுடைய வில் அல்லவா உன் உயிரைக் குடித்துவிட்டது என்று கேட்கும் போதல்லவா எனது உள்ளம் சுடுகிறது.

நீ இருந்ததனால், நான் செந்தேன் பருகி மகிழ்ச்சியாக திசைகளிலெல்லாம் வெற்றி பெற்று வாழ்ந்தேன். இனி நான் என்ன செய்வேன். உனக்கு நானும் இன்று எனது உயிரைத் தந்துவிடுகிறேன். நீ தனியாக வானுலகு செல்ல நான் தாங்க மாட்டேன். நானும் உன்னோடு வருகிறேன், என்று இராவணன் துயரத்தால் கூறும் வார்த்தைகளைக் கம்பன் மிக அழகாகத் தனது கவிதை வரிகளில் வடித்துள்ளார்.

வலிய பெரிய சேனையோடும் படைகளோடும் சுற்றத்தோடும் உம்பரும்போற்ற மூவுலகையும் ஆண்ட மாவீரன் தம்பியின்றித் தனியாக மண் மீது மாண்டுகிடப்பானோ என்று இராவணனைப் பற்றிக் கும்பகருணனும், இனியின்று நானும் உனக்கு ஆவி தந்தேன், பிரியேன், தனிப் போகத் தாழ்க்கிலேன், வந்தேன் தொடர மதக்களிரே என்று கும்பகருணனைப் பற்றி இராவணன் கூறுவதும், சகோதர ஒற்றுமையின் உச்சமாகும். இலங்கை அரசின் அரசியலில் இந்த இரு சகோதரர்களும் மய்யமான சக்திகளாக இருந்தனர். அதன் வீழ்ச்சி இப்போது கும்பகருணனுடைய மரணத்தால் மேலும் வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டதைக் காண்கிறோம்.

## அதிகாயன்போர்

கும்பகருணன் நடத்திய வீரப்போர் முடிந்த பின்னர் வல்லமை மிக்க அதிகாயன் போருக்குப் புறப்பட்டான். அதிகாயன் இராவணனுடைய மகன், இந்திரசித்தனுக்கு அடுத்தபடியாக அதிகமான அளவில் வீரமும் புகழும் வெற்றிகளும் பெற்றவன். கும்பகருணனுடைய மரணத்தினால் அதிகமான அளவில் துயரத்தில் இருந்த இராவணனுக்கு ஆறுதல் தெரிவித்து கலக்கத்தை நீக்கி இலக்குவனைக் கொன்று வருகிறேன் என்று சூழுரைத்து, தூது அனுப்பி, பெரிய அளவில் ஆயுதங்களும் படைகளும் கொண்டு போருக்குப் புறப்படுகிறான்.

அதிகாயன் வீரத்திற்கும் சூரத்திற்கும் பெயர் போனவன். ஒருவனுடைய சூரத்தனத்தைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்கு அதிகாய சூரன் என்று அடைமொழியிட்டுக் கூறுவது வழக்கம். அத்தனை புகழும் வல்லமையும் மிக்க அதிகாயன் பெரும் படையுடன் வந்து வானரப்படையை மோதினான். இலக்குவனும், அனுமனும், அங்கதனும் மற்றும் பல வானர வீரர்களும் அதிகாயனையும் அவனது படைகளையும் வென்று கொன்று வெற்றி கண்டனர்.

அதிகாயனைப் பற்றிய விவரங்களைக் கூறும் போது வீடணன் குறிப்பிடுகிறான்.

"ஓவா நெடுமாதவம் ஒன்றுடையான்
தேவாசுரர் ஆதியர் செய் செருவில்,
சாவான், இறையும் சலியா வலியான்,
மூவா முதல் நான் முகனார் மொழியால்",

என்றும்,

"கற்றான் மறை நூலொடு கண்ணுதல் பால்
முற்றாதன தேவர் முரண்படைதாம்
மற்று ஆரும் வழங்கவலார் இலவும்
பெற்றான் நெடிது ஆண்மை பிறந்துடையான்"

என்றும்,

"அறன் அல்லது அல்லது மாறு அறியான்
மறன் அல்லது பல்பணி மற்று அணியான்
திறன் அல்லது ஓர் ஆருயிரும் சிதையான்
உறன் நல்லது பேர் இசை என்று உணர்வான்"

என்றும்

"காயத்து உயிரேவிடுகாலையினும்
மாயத்தவர் கூடி மலைந்திடினும்
தேயத்தவர் செய்குதல் செய்திடினும்
மாயத் தொழில் செய்ய மதித்திலன் ஆல்"

என்றும், அதிகாயனைப் பற்றிய பலவேறு விவரங்களையும் சூட்சுமங்களையும் நுட்பங்களையும் வீடணன் இலக்குவனுக்கு எடுத்துக் கூறுகிறான். எதிரியைப் பற்றிய நுட்பமான விவரங்கள், அவர்களுடைய பலம், பலவீனம், தந்திரங்கள், உபாயங்கள், பயிற்சி அளவு, இதுவரை நடத்தியுள்ள போர்கள், அடைந்துள்ள வெற்றிகள் வரங்கள், சாபங்கள், முதலிய விவரங்கள் கிடைக்கும்போது அவர்களை அறிந்து வெல்வது சுலபமாகிறது. அதில் அரக்கர்களுடைய போர்முறைகளைப் பற்றி அறிவதில் வீடணன், இராம இலக்குவர்களுக்குப் பெரிதும் உதவுகிறான்.

அதிகாயனுடன் எதிர்த்துப் போரிடவிருக்கும் இலக்குவனுடைய வீரம் ஆற்றல் பற்றியும் இராமன் வாய்மொழியாகக் கம்பன் மிகவும் சிறப்பாக விவரித்துக் கூறுகிறார் இந்தப் பரிமாற்றங்கள் போர் முறைகளின் பகுதியாகும்.

"தெய்வப் படையும் சினமும் திறனும்
மையற்று ஒழி மாதவம் மற்றும் எலாம்
எய்தற்கு உளவோ? இவன் இச்சிலையில்
கைவைப்பு அளவே இறல் காணுதியால்"

என்றும்,

"என் தேவியை வஞ்சனை செய்த எழுவான்
அன்றே முடிவான் இவன் அன்னவள் சொல்

குன்றேன் என ஏகிய கொள்கையினால்
நின்றான் உளன் ஆகி நெடுந்தகையாய்"

என்றும்,

"கொல்வானும் இவன், கொடியோரை எலாம்
வெல்வானும் இவன் அடல்விண்டுஎன
ஒவ்வானும் இவன் உடனே ஒரு நீ
செல்வாய் என ஏவுதல் செய்தனன் ஆல்"

என்றெல்லாம் இராமன் கூறுகிறான்.

அதிகாயன் போருக்குப் புறப்படும்போது இலக்குவனுக்கு தூது அனுப்புகிறான். உன்னுடன் எதிர்த்துப் போரிட்டு உன்னைக் கொல்ல வருகிறேன், என்று தூது அனுப்பிகிறான். இவ்வாறு தூது அனுப்பி சவால்விட்டுச் சூளுரைத்துப் போர் நடத்துவது அக்காலப்போர் மரபும் போர் உபாயமுமாகும். அப்போதுதான் வீடணன், அதிகாயனைப் பற்றிய விவரங்களைக் கூறுகிறான். எதிரியின் பலத்தைப் புரிந்து கொண்டு அதேசமயத்தில் அவ்வெதிரியை வெற்றிகொள்ளும் வகையில் தன் பக்கத்திலுள்ள வீரனின் பலத்தையும் விவரித்துத் தன் படைகளை ஊக்குவிப்பதும் போர்முறைகளில் கையாளும் உத்தியாகும். அந்த வகையில் இராமனும், இலக்குவனுடைய வீரத்தையும் வில்லாற்றலையும் போர் அனுபவங்களையும் எடுத்துக் கூறி, அவன் இராவணனையே கூட வெல்லக் கூடியவன், இந்த அதிகாயன் எம்மாத்திரம் என்று கூறி வானரப்படைத் தலைவர்களை உற்சாக மூட்டி, தன் படைகளுக்கு ஊக்கமூட்டுகிறான். அத்துடன் இராமன், அவ்வப்போது இலக்குவனுக்கு சில முக்கிய ஆலோசனைகளையும் தற்காப்பு, தாக்குதல் பற்றிய குறிப்புகளையும் கொடுத்து அவனைப் பக்குவப்படுத்துவதையும் தயார் நிலைப்படுத்துவதையும் காண்கிறோம். இலக்குவன் இராமனை வணங்கி அதிகாயனை எதிர்க்கப் போர்க்களம் புகுந்தான்.

இலக்குவன் அதிகாயனுடன் வீரமாகப் போர் புரிந்தான். இலக்குவனுக்குத் துணையாக வீடணன் அவனுக்கருகில் இருந்தான். அதிகாயனுடைய வீரப் போரைப்பற்றிக் கம்பன் தனது அழகிய கவிதை ஒன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"அங்கதன் நெற்றி மேலும், தோளினும் ஆகத்
துள் ளும்,
புங்கமும் தோன்றாவண்ணம் பொரு சரம்
பலவும் போக்கி
வெம்கணை இரண்டும் ஒன்றும் வீரன்மேல்
ஏவி, மேகச்
சங்கமும் ஊதி விண்ணோர் தலைபொதிர்
எரிய ஆர்த்தான்."

இலக்குவன் தொடுத்த கணைகளையெல்லாம் தடுத்துப் பதில் கணைகளையும் ஏவி அதிகாயன் ஆர்ப்பரித்தான் என்று கம்பன் குறிப்பிடுகிறார். கடைசியில் இலக்குவன் தன்னிடமிருந்து மிகவும் சக்தி வாய்ந்த கணையொன்றைத் தொடுத்தான். அந்தக் கணை அதிகாயனுடைய தலையை வாங்கிக் கொண்டு ஆகாயத்தின் வழி சென்றது என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

"நன்று என உவந்து வீரன் நான்முகன்
படையை வாங்கி
மின்தனி திரண்டது என்னச் சரத்தொடும்
கூட்டி விட்டான்
குன்றினும் உயர்ந்த தோளான் தலையினை
க் கொண்டு அவ்வாளி
சென்றது விசும்பின் ஊடு, தேவரும் தெரியக்
கண்டார்."

இலங்கையின் அரக்கர் படையும், வீரர்களும் மிக்க பல முள்ளவர்கள் தான். அவர்களுடைய ஆயுதங்களும் வலுவானவைகள் தான். ஆயினும் இராம இலக்குவனர்களிடமிருந்த ஆயுதங்கள் மிக நவீனமானதும் சக்தி மிக்கதுமாக இருந்தன. அத்துடன் இவர்களிடம் பயிற்சியும் குறித் திறனும் தற்காப்புத் திறனும், தாக்குதல் திறனும், அதிகமாக இருந்தது. அது சமுதாய வளர்ச்சியின் பாற் பட்டதாகும். மேலும் இராமனுடைய படைகளில் தர்மமும் நம்பிக்கையும் கூட்டு செயல் பாடுகளும் துணையாக இருந்தன. அதனால் இராமனிடம் வெற்றி அமைந்தது.

தன்மகன் அதிகாயன் போரில் மாண்டான் என்னும் செய்தியைக் கேட்டு இராவணன் மிகுந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தான்.

"ஏங்கிய விம்மல், மானம், இரங்கிய இரக்கம்
வீரம்
ஓங்கிய வெகுளி, துன்பம் என்று இவை ஒன்ற
ற்கு ஒன்று
தாங்கிய தரங்கம் ஆகக்கரையினைத்
தள்ளித் தள்ளி
வாங்கிய கடல்போல் நின்றான், அருவிநீர்
வழங்கும் கண்ணான்"

கடற்கரையில் கடல் அலைகள் ஒவ்வொன்றாய் வரிசையாய் வந்து மோதிக் கொண்டிருகின்றன. அலைகளிலிருந்து எழும் எதிர் அலைகளும் மோதிக் கொண்டேயிருக்கின்றன. அது ஒரு அரிய காட்சி, விம்மல், மானம், இரக்கம், வீரம், வெகுளி, துன்பம் ஆகிய இவையெல்லாம் அலை அலையாய் மோதல்கள், எதிர் மோதல்களாக இராவணனுடைய உள்ளத்தில் எழுந்தன. மோதின, கலங்கின என்பது கம்பன் கவிதை.

இன்னும் இராவணனுடைய சிந்தனையும் கலங்கிய கண்களும் எவ்வாறு இருந்தன.

"திசையினை நோக்கும் நின்ற தேவரை
நோக்கும், வந்த
வசையினை நோக்கும் கொற்ற வாளி
னை நோக்கும் பற்றிப்
பிசையுறும் கையை, மீசை சுறுக்கொள
உயிர்க்கும் பேதை
நசையிடைக் கண்டான் என்ன நகும்
அழும், முனியும் நாணும்"

இன்னும் இராவணனுடைய சிந்தனை எவ்வாறு இருந்தது,

"மண்ணினை எடுக்க எண்ணும்
வானினை இடிக்க எண்ணும்
எண்ணிய உயிர்களெல்லாம்
ஒரு கணத்து எற்ற எண்ணும்
பெண் எனும் பெயர எல்லாம்
பிளப்பெண் என்று எண்ணும், எண்ணிப்
புண்இடை எரிபுக்கு என்ன
மானத்தால் புழுங்கி நையும்."

தனது வீரமகன் அதிகாயன் போர்க்களத்தில் இலக்குவனால் கொல்லப் பட்ட செய்தியைக் கேட்ட இராவணனுடைய உள்ளம், பார்வை, சிந்தனை, எண்ணம், உணர்வு ஆகியவை எப்படி இருந்தன என்பதைக் கம்பன் எடுத்துக் கூறுவது மிகவும் அற்புதமான கவிதைகளில் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இலங்கையின் அரசியலும் இராவணனுடைய உள்ளத்தைப் போல பார்வையைப் போல சிந்தனையைப் போலச் சிக்கித் தவித்தது. ஆயினும் இராவணன் தனது பிடிவாதத்தைக் கைவிடவில்லை. தனியாண்மை பெயரவில்லை.

அதிகாயனுடைய அன்னை தானமாலை, தன் மகன் போர்க் களத்தில் மாண்ட செய்தியைக் கேட்டுப் புலம்புகிறாள். அந்தப் புலம்பலும் ஒப்பாரியும் கூட இலங்கையின் அரசியலை மிக நுட்பமாக வெளிப் படுத்துவதைக் கம்பன் கவிதைகளில் காணலாம்.

"அக்கன் உலந்தான், அதிகாயன் தான் பட்டான்,
மிக்க திறத்து உள்ளார்கள் எல்லாரும் வீடினார்
மக்களினில் இன்றுள்ளான் மண்டோதரி மகனே,
திக்கு விசயம் இனி ஒரு கால் செய்யாயோ!"

"ஏதையா சிந்தித்து இருக்கின்றாய் எண் இறந்த
கோதையார் வேல் அரக்கர் பட்டாரைக் கூவாயோ?
பேதையாய்க் காமம் பிடிப்பாய்! பிழைப்பாயோ?
சீதையால் இன்னும் வருவ சிலவோயோ?"

என்றவாறு புலம்பி இராவணனுடைய ஆட்சி எப்படி உள்ளது எனவும் கூறி அழுகிறாள்.

"உம்பி உணர்வுடையான் சொன்ன உரை கேளாய்
நம்பி குலக்கிழவன் கூறும் நலம் ஓராய்
கும்பகருணனையும் கொல்வித்து என் கோ மகனை
அம்புக்கு இரையாக்கி ஆண்டாய் அரசு ஐயா!"

என்று கூறும் தானமாலையின் அழுகுரல் இலங்கையின் அரசியல் அவலத்தை வெளிப் படுத்துகிறது.

அட்சயனும், அதிகாயனும், கும்பகருணனும் மற்றும் பல எண்ணற்ற மாவீரர்களும் மடிந்து பட்டார்கள். சீதையின் மீதான காமத்தால் இத்தனை அழிவுகளும் ஏற்பட்டன. அறிவிற் சிறந்த வீடணன் எத்தனையோ நீதி நெறிகளை எடுத்துரைத்தான். குலக் கிழவன் மாலியவான் எத்தனையோ அறிவுரைகளையும் நல்லுரைகளையும் எடுத்துக் கூறினான். எதையும் நீ கேட்கவில்லை. கும்பகருணனையும் கொல்வித்தாய். இப்போது என் கோமகனையும் அம்புக்கு இரையாக்கினாய். உன்னுடைய அரசின் ஆட்சியின் அலங்கோலம் இப்படியிருக்கிறது என்று இராவணனுடைய ஆட்சியைக் குறிப்பிட்டு தானமாலை அழுதாள்.

## இந்திர சித்தன்

அடுத்து மேகநாதன் போருக்கு எழுந்து கடும்போர் நடத்தியதைக் கம்பனுடைய காவியம் விவரித்துக் கூறுகிறது. இந்திர சித்தன்ஒரு மாவீரன். அவனுடைய போர்த்திறனும் சாகசங்களும் தனி வரலாறு கொண்டவை. அவன் போருக்கு எழுந்ததைக் கம்பன் " எழிலித்தனி ஏறென, இந்திரசித்து எழுந்தான், மேகத்தின் ஒப்பற்ற இடியேற்றைப் போல இந்திரசித்தன் எழுந்தான்" என்று குறிப்பிடுகிறார். " இன்னும் வில்லாளரை எண்ணின் வீரற்கு முன் நிற்கும் வீரன்" என்றும், "நெடிதுன்னி முனிந்து நெருப்பு உயிர்ப்பான்" என்றும் கம்பன் சிறப்பித்துக் குறிப்பிடுகிறார்.

போருக்கெழுந்துப் பொங்கி வரும் இந்திர சித்தனை இவன் யார் என்று இலக்குவன் வீடணனைக் கேட்டான். "யார் இவன் வருபவன் இயம்புவாய்" என்று வீர வெம் தொழிலினான் வினவ,

வீடணன் "ஆரிய இவன் இகல் அமரர் வேந்தனைப் போர் கடந்தவன், இன்று வலிது போர்", என்றான் எனக் கம்பன் குறிப்பிடுகிறார்.

அதிகாயனை இலக்குவன் கொன்று விட்டான் என்னும் செய்தியைக் கேட்ட மேகநாதன், கோபம் கொண்டுத் "தன்னை ஏன் அனுப்பவில்லை, எதிரிகளின் பலத்தை அறியாமல் இப்படி அதிகாயனைக் கொல்வித் தாயே என்று இலங்கை மன்னனின் அரசியல் பலவீனத்தை மறை பொருளாகக் குறிப்பிட்டு இந்திர சித்தன் பேசுகிறான்.

"அக்கப் பெயரோனை நிலத்தோடு அரைத்
துளானை
விக்கற்கொடு வெவ்வுரைத் தூதுவன்
என்று விட்டாய்
புக்கத் தலைப்பெய்தல் நினைந்திலை,
புந்தி இல்லாய்
மக்கள் துணையற்றனை! இற்றது உன்
வாழ்க்கை மன்னோ"!

என்று இந்திரசித்தன் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

"அனுமன் அட்சய குமாரனைக் கொன்றான், அவனைச் சாதாரணத் தூதுவன் என்று விட்டுவிட்டாய்". அதனால் நம் பக்கத்து செய்திகள் எல்லாம் எதிரிகள் பக்கம் போய்விட்டது. இப்போது அதிகாயன் மாண்டு விட்டான். இம்மாதிரி முன் யோசனையில்லாமல் நடந்த கொண்ட காரணத்தால் நீ இப்போது மக்கள் துணையில்லாமல் தனியாக நிற்கிறாய். உனது வாழ்க்கைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று இந்திரசித்தன் கூறுகிறான். இதில் முன் யோசனை இல்லாமை பற்றியும், தம்மைப் பற்றிய செய்திகள் எதிரி பக்கம் போயிருப்பது பற்றியும் உள்ள பலவீனங்களை இந்திரசித்தன் சுட்டிக் காட்டுவது முக்கியமான ஒரு அரசியல் கருத்தாகும். ஆயினும் இவையெல்லாம், தங்களைப் பற்றி மிக அதிகமாக மதிப்பீடு செய்வதிலிருந்தும் தங்களை நிகரற்றவர்கள் என்று தன்னகங்காரம் கொண்டிருப்பதிலிருந்தும் எழும் பலவீனங்களாகும்.

இந்திர சித்தன் கடும்போர் செய்தான். அரக்கர் படைகளும் வானரர் படைகளும் கடுமையாக மோதின.

“இருதிரைப் பெருங்கடல் இரண்டு திக்கினும்
பொரு தொழில் வேட்டு எழுந்து ஆர்த்துப் பொங்கின
வருவன போன்றன மனத்தினால் சினம்
திருகின எதிர் எதிர் செல்லும் சேனையே”

என்றும்

கற்பட, மரம்படக் காலவேல்பட
விற்படு கணைபட வீழும் வீரர்தம்
எல்படும் உடல்பட இரண்டு சேனையும்
பிற்பட நெடு நிலம்பிளந்து பேருமால்

என்றும் இருகடல்களும் மோதியதைப் போல பூமியே பிளந்து போகும்படி இரு படைகளும் மோதியதாகக் கம்பன் கூறுகிறார்.

இந்திரசித்தன் வானரப் படைகளை எதிர்த்துக் கடும் தாக்குதல்களை நடத்தினான். அதனால் வானரப் படைக்குக் கடும் சேதம் ஏற்பட்டது. மாருதி தலையிட்டு மேகநாதனை எதிர்த்தான். மாருதியைக் கண்டதும் இந்திர சித்தன் கடும் கோபம் கொண்டு பேசினான்.

“நில்லடா சிறிது நில்லடா உனை
நினைந்து வந்தனன் முனைக்குநான்
வில் எடாமை, நினது ஆண்மைபேசி உயி
ரோடுநின்று விளையாடினாய்!
கல்அடா, நெடுமரங்களோ, வரு
கருத்தினேன் வலிகடப்பவோ
சொல்லடா ” என இயம்பினான் இகன்
அரக்கன், ஐயன் இவன் சொல்லினான்

இவ்வாறு இந்திர சித்தன் மாருதியை நிறுத்தினான். வில் எடுக்காமல் வெறும் கல்லும் மரமும் எடுத்து வீரம் பேசுகிறாயா? நில்லடா, உன்னை ஒருகை பார்க்கிறேன். என்று இந்திரசித்தன் வீரம் பேச, அனுமன் மிகவும் அடக்கமாகப் பேசினான்.

"வில் எடுக்க உரியார்கள் வெய்யசில
வீரர் இங்கும் உளர், மெல்லியோய்
கல்எடுக்க உரியானும் நின்றனன், அது
இன்று நாளையிடை காணலாம்
எல் எடுத்த படை இந்திராதியர்,
உனக்கு இடைந்து உயிர் கொடு ஏகுவார்
புல் எடுத்தவர்கள் அல்லம், வேறு சில
போர் எடுத்து எதிர் புகுந்தோம் ".

என்று இந்திரசித்தனை இடித்துக் கூறி அனுமன் பேசினான். வில் எடுத்துப்போர் செய்ய எங்கள் பக்கம் வேறு சிலர் இருக்கிறார்கள். நான் கல் எடுத்துத்தான் போர் செய்வேன். இன்றும் நாளையும் அதைநீ சந்திப்பாய். இந்திராதி தேவர்கள் உன்னிடம் போர் செய்துத் தோற்று ஓடிப்போயிருக்கலாம். ஆனால் நாங்கள் உன்னிடம் தோற்றுப் புல்லைக் கவ்வியவர்கள் அல்ல. எங்களிடம் தோற்று மண்ணைக் கவ்வியவர்கள் நீங்கள் தான். நாங்கள் பெரும்போர் நடத்த வந்துள்ளோம். எங்களைச் சந்திப்பாய், என்று அனுமன் மிக நன்றாகப் பதில் கூறியதைக் கம்பன் மிக அழகாகக் குறிப்பிடுகிறார். மாருதி மேலும் இந்திரசித்தனிடம் கேட்கிறான்:

"என்னோடே பொருதியோ? அது அன்றெனில்
இலக்குவப் பெயரின் எம்பிரான்
தன்னோடே பொருதியோ? சொல் உந்தைதலை
தள்ளநின்ற தனிவள்ளலாம்
மன்னோடே பொருதியோ? உரைத்தது
மறுக்கிலோம்! என வாங்கினான்
பொன்னொடே பொருவின் அல்லது ஒன்றொடு
பொருப்படா உயர் புயத்தினான்"

என்று அனுமன் கேட்கிறான். இதைக் கேட்ட இந்திரசித்தன் "அந்த இலக்குவன் எங்கே இருக்கிறான், என் தம்பியைக் கொன்றவன். அவன் தலையைக் கொய்ய நான் வந்துள்ளேன்". என்று வானரப்படையைக் கலக்கி இலக்குவனை எதிர்க்க முன் வந்தான். இலக்குவன் தலையிட்டு அரக்கர் படையைத் தடுத்தான். இந்திரசித்தனுக்கும் இலக்குவனுக்கும் சரிபோர் தொடங்கிற்று.

ஆவேசமாக இருவரும் மோதினார்கள். இலக்குவனுக்குத் துணையாகவும் உதவியாகவும் அனுமன் வந்து அருகில் இருந்தான்.

“அரியினம் பூண்ட தேரும், அனுமனும் அனந்த
சாரி
புரிதலின் இலங்கை ஊரும் திரிந்தது புல
வரேயும்
எரிகணைப்படலம் மூட, இலர், உளர் என்
னும் தன்மை
தெரிகிலர், செவிடு செல்லக்கிழிந்தன
திசைகள் எல்லாம்”

“தெரிகணை மாரி பெய்யத் தேர்களும் சினை
க்கை மாவும்
பரிகளும் தாமும் அன்று பட்டன கிடக்கக்
கண்டார்,
இருவரும் நின்றார் மற்ற இராக்கதர் என்னும்
பேரார்,
ஒருவரும் நின்றார் இல்லை, உள்ளவர் ஓடிப்
போனார்”

என்று போர் கடுமையாகி மேலும் மாலைவரை தொடர்ந்தது. இந்திரசித்தனுடைய தேரையும் இதரபடைகளையும் இலக்குவனும், மாருதியும் அழித்தன்ர். இந்திரசித்தன் அணுவுருவாகி ஆகாயத்தில் மறைந்தான்.

தணிவரப்பண்டு செய்ததவத்தினும்
தருமத்தானும்
பிணி அறுப்பவரின் பெற்றவரத்தினும்
பிறப்பினானும்,
மணி நிறத்து அரக்கன் செய்த மாய
மந்திரத்தினானும்
அணுவெனச்சிறியது ஆங்கோர் ஆக்கை
யும்உடையான் ஆனான்.

இலக்குவனும், அனுமனும், அங்கதனும் மற்றவானர வீரர்களும், இந்திரசித்தன் ஓடி மறைந்துவிட்டான் என்று கருதி ஆயுதங்களைக்

கழற்றி வைத்துவிட்டு ஓய்வெடுக்க முனைந்தார்கள். அந்த நேரத்தில் எதிர்பார்க்காத முறையில் இந்திரசித்தன் ஆகாயத்திலிருந்து அரவக்கணையை ஏவினான். அந்த நாகபாசக்கணை இலக்குவனையும் இதர வானர வீரர்களையும் மயக்கி விழ்த்தியது.

"விட்டனன் அரக்கன்வெய்ய படையினை
விடுத்தலோடும்
எட்டினோடு இரண்டுதிக்கும் இருள் திரிந்து
இரிய ஒடிக்
கட்டினது என்ப மன்னோ காகுத்தற்கு
இளைய காளை
தட்டவான் வயிரத்திண் தோள் மலைகளை
உளைய வாங்கி"

"இறு குறப்பிணித்தலோடும் யாவையும்
எதிர்ந்த போதும்,
மறுகுரக்கடவான் அல்லன், மாயம் என்று
உணர்வான் அல்லன்,
உறுகுறைத்துன்பம் இல்லான் ஒடுங்கி
னான் செய்வது ஓரான்
அறுகுறைக்களத்தை நோக்கும் அந்தரம்
அதனை நோக்கும்."

இவ்வாறு இந்திர சித்தனுடைய நாகபாசத்தால் வானரப்படையினர் கட்டுண்டு வீழ்ந்தனர்.

"வெப்பாரும் பாசம் வீக்கி வெம்கணை வளை
க்கும்மெய்யன்
ஒப்பாரும் இல்லான் தம்பி உணர்ந்திருந்த
இன்னல் உய்ப்பான்
இப்பாசம் மாய்க்கும் மாயன்யான் வல்லேன்
என்பது ஓர்ந்தும்
அப்பாசம் வீச ஆற்றாது அழிந்த நல் அறிவு
போன்றான்.

என்றவாறு இந்திரசித்தனுடை நாகக்கணை இலக்குவனைக் கட்டியது. இந்திரசித்தன் மகிழ்ச்சியடைந்தான்.

"சொற்றது முடித்தேன், நாளை என் உடல்
சோர்வை நீக்கி
மற்றது முடிப்பேன், என்னா எண்ணினன்
மனிதன் வாழ்க்கை
இற்றது, குரங்கின்தானை இறந்தது
என்று இரண்டு பாலும்
கொற்றமங்கலங்கள் ஆர்ப்ப இராவணன்
கோயில்புக்கான்"

"நான் சொன்னது முடித்தேன். இலக்குவனை வீழ்த்தி விட்டேன். நாளை இராமனையும் வெல்வேன். மனிதர்களின் வாழ்க்கை முடிந்தது. வானரர்களின் ஆட்சியும் அட்டகாசமும் ஓய்ந்தது", என்று வெற்றி முழக்கங்களுடன் இந்திரசித்தன் இராவணனுடைய மாளிகைக்குத் திரும்பினான்.

அரவக்கணைபட்டு மயக்கமுற்றுக் கிடந்த வானரர்களையும் இலக்குவனையும் கண்டு இராமன் வருந்தினான் என்னிடம் முன் கூட்டியே சொல்லியிருக்கக் கூடாதா, கெடுத்து விட்டாயே காரியத்தை என்றுகூட வீடணனைக் கோபித்துக் கொண்டான் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

"எடுத்தபோர் இலங்கை வேந்தன் மைந்த
னோடு இளைய கோவுக்கு
அடுத்தது என்று என்னை வல்லை அழைத்
திலை அரவின் பாசம்
தொடுத்தகை சரத்தினோடும் துணித்து
உயிர்குடிக்க என்னைக்
கெடுத்தனை வீடணா நீ என்றனன்
கேடிலாதான்.

இந்திரசித்தன் மாயமாய் மறைந்திருந்து இந்தச் செய்கையைச் செய்திருக்கிறான். நாங்கள் அதை அறியவில்லை, என்று வீடணன்

கலங்கினான். அரக்கனின் மாயச் செய்கையைப் பற்றி வீடணன் விளக்கமாகக் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

“ அவ்வுரை அருளக் கேட்டாங்கு அழுகின்ற
அரக்கன் நம்பி
இவ்வழி அவன்வந்து எற்பது அறிந்திலம்
எதிர்ந்த போதும்,
வெவ்வழி அவனே தோற்கும் என்பது விரும்பி
நின்றேன்
தெய்வவன் பாசம் செய்த செயல் இந்த
மாயச்செய்கை ”

எனவே இதில் யாரும் இறக்கவில்லை. நாகபாசத்தால் மயக்கடைத்துள்ளனர். எனவே கலக்கமடைய வேண்டாம். மயக்கத்தைப் போக்க வழி காண்போம், என்று வீடணன் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தான். அப்போது கலுழன் புறப்பட்டு வந்து நாகபாசத்தை நீக்கினான். கலுழன் என்பது பறவை இனத்தலைவன் கருடன். நாகத்தின் எதிரி. அந்தக் கருடன் வந்து நாகபாசத்தை நீக்கியவுடன், இலக்குவனும் வானர வீரர்களும் மீண்டும் உணர்வு பெற்று எழுந்தனர்.

கருடன் துணையால் இலக்குவனும் வானரர்களும் உயிர் மீண்டனர் என்பதை அறிந்த இராவணன் கோபமடைந்து மீண்டும் இந்திர சித்தனைப் போருக்கு அனுப்பினான். இந்திர சித்தனும் மீண்டும் போருக்குப் புறப்படச் சம்மதித்தான். ஒரு நாள் ஓய்வெடுத்து களைப்பு நீக்கி, மறுநாள் போர்க்களத்திற்குச் சென்று நான்முகன் படையை ஏவி உன் துயர் தீர்ப்பேன் என்று கூறி இந்திர சித்தன் மறுநாள் மேலும் பெரிய படையுடன் போருக்குப் புறப்படத் தயாரானான்.

இடையில் படைத்தலைவர்கள், கரன் மகன் மகரக் கண்ணன் முதலானோர் கடும்போர் செய்து மாண்டனர்.

இந்திரசித்தன் மறுநாள் முழு தயாரிப்புடன் போர்க்களத்திற்கு வந்தான். போர் கடுமையாக நடந்தது. இருதரப்பிலும் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன.

இராமனும் இலக்குவனும் இணைந்து நின்று போரை நடத்தினார்கள்.

“இமைப்பதன் முன்னம் வந்த
இராக்கத வெள்ளம் தன்னை
குமைத்தொழில் புரிந்தவீரர்
தனுத்தொழில் குறித்து இன்று எம்மால்
அமைப்பது என்? பிறிதொன்றுண்டோ?
மேரு என்று அமைந்த வில்லால்,
உமைக்கொருபாகன் எய்த
புரங்களின் ஒருங்கிவீழ்ந்த

என்று இராம, இலக்குவர்கள் நடத்திய போரினால் இராக்கதப்படைக்கு ஏற்பட்ட பெரும் சேதத்தைப் பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறார். இந்தக் கடும் சேதத்தைக் கண்டு இந்திரசித்தனே திகைப்படைகிறான்.

“செய்கின்றார் இருவர் வெம்போர், சிதைக்
கின்ற சேனை நோக்கின்
ஐயம்தான் இல்லா வெள்ளம் அறுபதும்
அவிக என்று
வைகின்றார் அல்லர் ஆக வரிசிலை வல
த்தால் மாள
எய்கின்றார் அல்லர் ஈது எவ் இந்திர
சாலம்” என்றான்.

இவ்வாறு திகைத்த இந்திரசித்தன் தன்னைச் சமாளித்துக் கொண்டு வலுவாக நின்று இருவரையும் எதிர்த்து நின்று இருவரும் சேர்ந்து என்னிடம் போருக்கு வருகிறீர்களா அல்லது தனித்தனியாக வந்து எனது வில்லுக்குப் பலியாக விருப்பமா எனக்கேட்டுச் சக்தி ஆயுதங்களைத் தொடுத்துப் போரிட்டான்.

“இருவிர் என்னோட பொருதிரோ? அன்று எனின் ஏற்ற
ஒருவர் வந்து உயிர்தருதிரோ? உம்படையோடும்

பொருது பொன்றுதல் புரிதிரோ? உறுவது புகலும்
தருவென் இன்றுமக்கு ஏற்றுளதுயான் எனச்சலித்தான்"

இதைக்கேட்ட இலக்குவன் சூளுரைத்து,

"வாளின் திண்சிலைத் தொழிலினின் மல்லினின்
மற்றை
ஆளுற்று எண்ணிய படைக்கலம் பெற்றினும்
அமரில்
கோள் உற்று உன்னொடு குறித்து அமர்
செய்து உயிர் கொள்வான்
சூள்உற்றேன்! இதுசரதம் என்று இலக்
குவன் சொன்னான்."

என்று கூறினான். இவ்வாறு போர் கடுமையாக நீடித்தது.

"அரக்கர் என்பது ஓர் பெயர் படைத்தவர்க்
கெலாம், அடுத்த
புரக்கும் நன்கடன் செயவுளன் வீடணன்
போந்தான்
கரக்கும் நுந்தைக்கு நீ செயக்கடவன
கடன்கள்
இரக்கம் உற்று உனக்கு அவன்செயும்
என்றனன் இளையோன்"

இவ்வாறு இலக்குவன் கூறிப்போருக்கு மேலும் வேகம் ஊட்டினான்.

"ஆனகாலையில் அயில் எயிற்று அரக்கன்
நெஞ்சு அழன்று
வானும் வையமும் திசைகளும் யாவையும்
மறையப்
பானல் சோலையைப் பருகுவ, சுடர்முகப்பகழி
சோனை மாரியின், இருமடி மும்மடி சொரிந்தான்"

இவ்வாறு இந்திரசித்தன் தொடுத்த கொடுங்கணைகளையெல்லாம் இலக்குவன் தவிடு பொடியாக்கினான். இந்திரசித்தன் மீண்டும் மாயமாகி ஆகாயத்தில் பறந்து மறைந்தான். அவனை இன்று

பிழைக்கவிடக்கூடாது. அவன்மீது பிரம்மாஸ்திரத்தைத் தொடுக்க வேண்டும் என்று இலக்குவன் கூறினான்.

" கண்இமைப் பதன்முன்பு போய் விசும்பிடை
க் கரந்தான்
அண்ணல் மற்றவன் ஆக்கை கண்டு அறி
கிலன் ஆகிப்
பண்ணவர்க்கு இவன் பிழைக்குமேல் படுக்
கும் நம்படையை
எண்ண மற்றிலை அயன்படை தொடுப்பல்
என்று இசைந்தான்"

அப்போது இராமன் தலையிட்டு "அந்தணன் படைக்கலத்தைத் தொடுத்தால் அது மூவுலகங்களையும் அழித்துவிடும். பெரும் நாசத்தை விளைவித்துவிடும். அத்தகையப் பெரும் நாசத்தை விளைவிக்கும் படைக்கலத்தை விடுவதை நாம் தவிர்க்க வேண்டும் என்று இலக்குவனிடம் அன்புபடக் கூறினான். அதைக் கேட்டு இலக்குவனும் அதற்கு இசைந்தான்.

"ஆன்றவன் அது பகர்தலும் அறநிலை வழாதாய்
ஈன்ற அந்தணன் படைக்கலம் தொடுக்கில் இவ்வுலகம்
மூன்றையும் சுடும், ஒருவனால் முடிகிலது என்றான்,
சான்றவன் அது தவிர்த்தனன் உணர்வுடைத் தம்பி"

இதை அறிந்த வஞ்சகன் இந்திரசித்தன், தான் பிரம்மாஸ்திரத்தைத் தொடுக்க தீர்மானித்துப் போர்க்களத்தை விட்டு வெளியேறி இலங்கையில் புகுந்து தானே முதலில் பிரம்மாஸ்திரத்தைத் தொடுக்கப் போவதாகக் கூறி அதற்கான வேள்வியைச் செய்யத் தொடங்கினான். சூரியன் மறைந்தான். இராமனும் இலக்குவனும் போரை நிறுத்திக் கொண்டனர். வீடணன் படைகளுக்கு உணவு சேகரிக்கவும் இலக்குவன் படைகளைக் காக்கவும் இராமன் ஆயுதங்களுக்குப் பூசை செய்யவும் புறப்பட்டனர்.

"மறைந்து போய் நின்ற வஞ்சனும் அவருடை
மனத்தை

அறிந்து தெய்வவான் படைக்கலம்
தொடுப்பதற்கு அமைந்தான்
பிரிந்து போவதே கருமம் இப்பொழுது எனப்
பெயர்ந்தான்
செறிந்த தேவர்கள் ஆவலம் கொட்டினர்
சிரித்தார்."

என்று இந்திர சித்தன் பிரம்மாஸ்திரத்தைத் தொடுப்பதற்கான தயாரிப்புகளைச் செய்வதற்காகப் போர்க்களத்தைவிட்டு மறைந்து போனதைப் பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இங்கு பிரம்மாஸ்திரம் தொடுப்பது பற்றியச் செய்தி விவாதத்தில் வந்திருக்கிறது. பிரம்மாஸ்திரம் என்பது மிகவும் வல்லமைமிக்க ஒரு சக்தி ஆயுதமாகும். அந்த ஆயுதம் அழிவு சக்தி அதிகம் கொண்டதாகும். போரில் அந்த நான்முகன் படையைப் பயன்படுத்தவது என்பது பொதுவாகக் கடைசி ஆயுதமாகவே பயன்படுத்தப்படுவதற்கு ஆலோசிக்கப்படுகிறது. பிரம்மாஸ்திரத்தை ஒரு முறை பயன்படுத்திவிட்டால், அதை மீண்டும் பயன்படுத்த முடியாது.

இந்திரசித்தனுடைய போர் மிகவும் கடுமையானபோது, அவன் மீது பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று இலக்குவன் இராமனிடம் அனுமதி கேட்கிறான். ஆனால் இராமன், அதனால் அழிவு அதிகமாகும் என்று கூறி வேண்டாமெனச் சொல்லி விடுகிறான். இங்கு இராமனிடம் உள்ள மனிதாபிமான உணர்வு தெளிவாக வெளிப்படுகிறது. ஆனால் இந்திரசித்தனோ எந்த அழிவு, நாசத்தைப் பற்றியும் கவலைப்படாமல் அரக்க குணம் கொண்டு, அந்தப் பேராயுதத்தைப் பயன்படுத்த முனைகிறான். இந்தப் பிரச்சினை போர் அரசியலில் முக்கியமான ஒன்றாகும்.

இந்திரசித்தனுடைய போர் மறுநாள் தொடருகிறது. இராவணன் தனது முதலமைச்சனான மகோதரனையும் அகம்பனையும் போர்க்களத்திற்கு அனுப்புகிறான். அனுமன் அகம்பனை அடித்துக் கொன்றான். இலக்குவன் மகோதரனை எதிர்த்துப் போரிட்டான். அப்போரில் இலக்குவன் மகோதரன் மீது சிவக்கணையை ஏவினான். அதைக்கண்டு மகோதரன் மாயமாக மறைந்து வேறு வடிவம் எடுத்துப் போரிட்டான்.

அந்த நேரத்தில் இந்திரசித்தன் இலக்குவன் மீது நான்முகன் படைக்கலத்தை ஏவினான். அந்தத் தெய்வீகப் படைக்கலம் இலக்குவனையும் வானரப்படைகளையும் சாய்த்தது. இந்திரசித்தன் வெற்றிச்சங்கை முழங்கிக்கொண்டு தனது தந்தையின் மாளிகையை அடைந்தான். மகோதரனும் தப்பித்துக் கொண்டு இலங்கை சேர்ந்தான்.

"இன்னகாலையில், இலக்குவன் மேனிமேல் எய்தான்
முன்னை நான்முகன் படைக்கலம் இமைப்பதன்முன்னம்
பொன்னின் மால்வரைக்குரீஇ இனம் மொய்ப்பனபோலப்
பன்னலாம்தரம் அல்லன சுடர்க்கணை பாய்ந்த"

"வெம்கண் வானரக்குழுவொடும் இளைய
வன் விளிந்தான்
இங்குவந்திலன், அகன்றனன் இராமன்
என்று இகழ்ந்தான்
சங்கம் ஊதினன், தாதையை வல்லையில்
சார்ந்தான்
பொங்குபோர் இடைப்புகுந்துள பொருள்
எலாம் புகன்றான்."

இவ்வாறு இந்திரசித்தன் தனது சாதனைகளைத் தனது தந்தையிடம் எடுத்துக் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இராமன் இறக்கவில்லையா என்று இராவணன் கேட்டான். இராமன் களத்தில் இல்லை எங்கோ போய் மறைந்து கொண்டான் போலிருக்கிறது. தனது தம்பியையும், நண்பர்களையும் தனது சேனைகளையும் கொல்வித்துத் தான் மட்டும் மறைந்து போனான் என்று இந்திரசித்தன் இராமனைப் பற்றி ஏளனமாகக் கூறினான்.

" இறந்திலன்கொல் ஆம் இராமன் " என்று
இராவணன் இசைத்தான்
'துறந்து நீங்கினன் அல்லனேல் தம்பியைத்
தொலைத்துச்

சிறந்த நண்பரைக் கொன்று, தன் சேனை
யைச் சிதைக்க
மறந்துநிற்குமோ மற்றவன்திறன், என்
றான் மதலை'

என்று இந்திரசித்தன் சிறுபிள்ளைத் தனமாகக் கூறினான் என்பதை என்றான் மதலை எனக் குறிப்பிட்டுக் கம்பன் கூறுகிறார்.

அவ்வமயம் இராமன் போர்க்களத்திற்கு வந்தான் போர்க்களத்தில் இலக்குவனும் மற்றவர்களும் இறந்து கிடப்பதைக் கண்டான். அனைவரும் இறந்து கிடப்பதைக் கண்டு இராமன் கடுந்துயரம் அடைந்து புலம்புகிறான், கலங்குகிறான் கம்பன் இராமனுடைய துயர்க்காட்சியைப் பற்றி விரிவாக உருக்கமாகக் குறிப்பிடுகிறார். இராமனே கலங்குவது என்பது அனைவரையும் கலங்க வைக்கும் காட்சியாகும். இராமன் சுக்கிரீவன் உடலைப் பார்த்துப் புலம்புகிறான். மாருதி கிடந்த காட்சியைக் கண்டு கலங்குகிறான்.

"முன்னைத் தேவர்தம் வரங்களும் முனிவர்
தம்மொழியும்
பின்னைச் சானகி உதவியும் பிழைத்தன,
பிரிது என்?
புன்மைச் செய் தொழில் என்வினைக்
கொடுமையால் புகழோய்
என்னைப்போல்பவர் ஆர் உளர் ஒருவர்?
என்று இசைத்தான்"

" புன்தொழில் புலை அரசினை வெஃகி
னேன், பூண்டேன்,
கொன்று ஒருக்கினேன் எந்தையைச்
சடாயுவைக் குறைத்தேன்
இன்று ஒருக்கினேன் இத்தனை வீரரை
இருந்தேன்
வன்தொழிற்கு ஒரு வரம்பு உண்டாய்
வர அற்றோ? "

“ தமையனைக் கொன்று தம்பிக்கு வானரத்
தலைமை
அமைய நல்கினேன், அடங்கலும் அவிப்ப
தற்கு அமைந்தேன்
கமை பிடித்து நின்று உங்களை இத்துணை
கண்டேன்
சுமை உடற்பொறை சுமக்க வந்தனென்”
எனச் சொன்னான்.

அங்கதனைக் கண்டு, அடைக்கலம் வந்தவனைக் கூடக் காப்பாற்ற முடியாமல் போனேன் என்று அழுதான்.

அருமைத் தம்பி இலக்குவனைக் கண்டு,

“பொருமினான், அகம் பொங்கினான் உயிர்
முற்றும் புகைந்தான்
குருமணித் திருமேனியும் மனம் எனக்
குலைந்தான்
தருமம் நின்று தன் கண்புடைத்து அலமரச்
சாய்ந்தான்
உருமினால் இடி உண்டது ஓர் மராமரம்
ஒத்தான்”

இவ்வாறு மானிடப் பிறப்பு எடுத்த இராமன் தனது வாழ்க்கையில் நடந்த துன்பங்கள், துயரங்கள் இழப்புகளைப் பற்றியெல்லாம் நினைந்து வருந்தினான். நாட்டை இழந்ததும், தந்தையை இழந்ததும், வனத்திடை வந்ததும், கானகத்தில்பட்ட துன்பங்களும் சீதையைப் பிரிந்ததும், சடாயுவை இழந்ததும், இப்போது சுக்கிரீவனை, அங்கதனை, அனுமனை, அருமைத் தம்பி இலக்குவனை இழந்தது பற்றியெல்லாம் நினைந்து நினைந்து வருந்தி சோர்ந்து விழுந்தான்.

“தாங்குவார் இல்லை, தம்பியைத் தழீக்
கொண்ட தடக்கை
வாங்குவார் இல்லை, வாக்கினால் தெருட்டு
வார் இல்லை

பாங்கர் ஆயினோர்யாவரும் பட்டனர், பட்ட
தீங்குதான் இது, தமியனையார் துயர்
தீர்ப்பார்?"

இவ்வாறு உலகுக்கெல்லாம் ஏற்படும் துன்பதுயரங்களைத் தீர்க்கும் அவதாரம் கொண்ட இராமனுக்கு ஏற்பட்ட துயரத்தை யார் தீர்ப்பர் எனத் தேவர்களும் கலங்கினர்.

" மண்மேல் வைத்த காதலின், மாதர் முதலோர்க்கும்,
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம்புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலின் இப்பேறுகள் பெற்றேன்
எண் மேல்வைத்த என் புகழ் நன்றால் எளியேனோ?"

என்று இராமன் கலங்குவதைக் கம்பர் குறிப்பிடுகிறார். இங்கு நடந்துள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் போர்க்கால அரசியல் சூழ்நிலையில் நாம் காணவேண்டும்.

இந்திரசித்தன் நடத்திய போர் மிகவும் கடுமையானது. போர் நெறிகளுக்குட்பட்டதல்ல. சாகசமானது. மாயமானது. வஞ்சகமானது. அவன் நாக பாணத்தைத் தொடுத்த போதும், பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்தபோதும், அவைகளை நேருக்கு நேர் நின்று போர் செய்யும் போது தொடுக்கவில்லை. மாயமாகப் போய் மறைந்து நின்று வஞ்சகமான முறையில் அந்தச் சக்தி ஆயுதங்களைப் பயன்படுத்தினான். இராமனும் இலக்குவனும் சேர்ந்து போர் நடத்தியபோது இருவரில் ஒருவர் யார் வருகிறார்கள் என்று கேட்ட இந்திரசித்தன், இலக்குவனைக் கொல்லச் சக்தி ஆயுதங்களை வஞ்சகமான முறையில் மாயமாக நின்று பிரயோகம் செய்தான். நாகபாணத்தால்,பாதிக்கப்பட்டஇலக்குவனையும், வானரப்படையையும் அவர்கள் மீது படிந்திருந்த விடத்தை நீக்கிக் கலுழன் காப்பாற்றினான்.

அடுத்து இலக்குவன் நான்முகன் படைக்கலத்தைத் தொடுக்கக் கருதியபோது இராமன் " பெரும் அழிவை உண்டாக்கவிருக்கும் பெருநாசத்தை விளைவிக்கும் ஒரு சக்தி ஆயுதத்தை நாம் பிரயோகிக்கக் கூடாது என்னும் யுத்த தர்மத்தை இராமன் எடுத்துக் கூறுகிறான்.

இந்திரசித்தன் ஏவிய நான்முகன் கணையால் இலக்குவனும் மற்றவர்களும் வீழ்ந்து கிடந்த போது இராமன் ஒரு சாதாரண மனிதனைப்போல அழுது புலம்பினான். அடுத்து என்ன செய்வது என்று திகைத்தான் என்னும் விவரங்கள் அரசியல் முறையில் காணத்தக்கன.

போர்களத்தின் காட்சியைத் தூதுவர்கள் பார்த்துச் சென்று இராவணனிடம் கூறினர். “உனது மகனுடைய கணையால் இலக்குவனும், வானரப்படைகளும் மாண்டு கிடக்கின்றனர். அவர்களைக் கண்ட இராமனும் உயிர்விட்டான். உன்பகை ஒழிந்தது”. என்று கூறினர். இராவணன் மகிழ்ச்சியடைந்தான். சீதையை விமானத்தில் ஏற்றிச் சென்று அந்தக் காட்சியைக் காண்பிக்க எண்ணினான்.

போர்க்களத்தில் மாண்டு கிடந்த இராக்கதவீரர்களின் சடலங்களையெல்லாம் கொண்டு போய்க் கடலில் போட்டுவிட அரக்கன் தலைவன் எற்பாடு செய்தான். சீதையை விமானத்தில் ஏற்றி வரச்சொல்லி போர்க்களத்தில் இராமனும் இலக்குவனும் வானரப்படை வீரர்களும் இறந்து கிடந்த காட்சியைக் காண்பித்தனர். சீதை அதைக் கண்டு கலங்கினாள். இருப்பினும் இதிலும் சூது இருக்கலாம் என்று கூறி திரிசடைச் சீதையைத் தேற்றினாள்.

“மாயமான் விடுத்தவாறும் சனகனை வகுத்தவாறும்
போயநாள் நாகபாசம் பிணித்தது போனவாறும்
நீ அமர நினையாய்! மாளநினைத்தியோ! நெறியிலாரால்
ஆயமாமாயம் ஒன்றும் அஞ்சலை, அன்னம் அன்னாய்”

என்று திரிசடை என்னும் நல்லாள் தேற்றினாள்

உணவு தேடச் சென்றுத் திரும்பிய வீடணன் போர்க்களத்தில் அனைவரும் மாண்டு கிடப்பதைக் கண்டு வருந்தினான். நான்முகன் படையால் நடத்திருப்பதை உணர்ந்தான். இராமனை இப்படை பாதித்திருக்காது என்று கருதி அவனைத் தொட்டுப்பார்த்தான். அவன் மீது காயங்கள் இல்லை. ஒரு தீப்பந்தத்தைத் தயாரித்துக் கொண்டுத் தேடிப்பார்த்து அனுமனைக் கண்டான். அவன் கை கட்டி வாய் பொத்தி அடங்கிக் கிடந்தான். அவனை மெதுவாகத் தட்டி எழுப்பினான்.

"வாய்மடித்து இரண்டு கையும் முறுக்கித்தன்
வயிரச் செங்கண்
தீஉகக் கனகக் குன்றின் திரண்ட தோள்
மழையைத் தீண்ட
ஆயிரம் கோடியானைப் பெரும்பிணைத்து
அமளி மேலான்
காய்சினத்து அனுமன் என்னும் கடல் கடந்
தானைக் கண்டான்"

என்று கம்பன் குறிப்பிடுகிறார். வீடணன் அனுமனைத் தட்டி எழுப்பினான். அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான். எப்படியிருக்கிறாய் என்று கேட்டு, அவன் வலுவாக இருக்கிறான் என்பதைக் கண்டுக் கவலையிலும் மகிழ்ச்சி கொண்டான்.

"அழுகையோடு உவகையுற்ற வீடணன்
ஆர்வம் கூரத்
தழுவினான், அவனைத்தானும் அன்பொடு
தழுவித்தக் கோய்
வழுவினான் அன்றே வள்ளல் ", என்றனன்
வலியன் என்றான்
தொழுதனன் உலகம் மூன்றும் தலையின்
மேல் கொள்ளும் தூயான்."

வீடணனும் அனுமனும் சேர்ந்து சாம்பவனைத் தேடிச்சென்று பார்த்தனர். மூவரும் கலந்து ஆலோசனை செய்தனர். இராமனும், இலக்குவனும் இதர வானரப்படைகளும் உயிர்பெற்று எழச் சஞ்சீவி மலையில் உள்ள உயிர் காக்கும் இலைகளை (மூலிகைகளை)க் கொண்டு வர வேண்டும் என்று அனுமனிடம் மற்ற இருவரும் கூறினார்கள். வெகு வேகமாக வடக்கு நோக்கிச் சென்று வடதுருவத்தில் உள்ள மருத்துவ மலையைக் கொண்டு வர வேண்டும் என்று கூற அனுமன் வாயு வேகத்தில் புறப்பட்டான்.

"மாண்டாரை உய்விக்கும் மருந்தொன்றும்
மெய்வேறு வகிர்களாகக்
கீண்டாலும் பொருந்துவிக்கும் ஒரு மருந்தும்

படைக்கலங்கள் கிளப்பது ஒன்றும்
மீண்டேயும் தம்உருவே அருளுவதோர்
மெய்மருந்தும் உளநீ வீர
ஆண்டு ஆகிக்கொணர்தி என அடையாளத்
தொடும் உரைத்தான் அறிவின்மிக்கான்''

மாண்டாரை உய்வித்து உயிர் எழுப்பும் மருந்தும், காயங்களை, புண்களை ஆற்றும் மருந்தும், உடம்பும் உறுப்புகளும் வேறு வேறாகப் பிளந்து போனதைத் திரும்பவும் ஒன்று சேர்க்கும் மருந்தும், உடம்பிற்குள் ஆயுதங்கள் பதிந்திருந்தால் அவைகளை நீக்கிப் புண்களை ஆற்றும் மருந்தும் இவ்வாறாகப் பலவகை மருந்துவத் தன்மைகளைக் கொண்ட செடிகளும் இலைகளும் உள்ளன. அவைகளை அடையாளம் கூறி எடுத்து வரும்படி மாருதியிடம் சாம்பவன் சொல்லியனுப்பினான்.

மேருவை நோக்கி வாயு வேகத்தில் வெகுவேகமாக வடதிசையில் சென்று மலையை அடைந்தான்.

"இங்கு நின்று இன்னை மருந்து என்று எண்ணினால்
சிங்கும் ஆல்காலம் என்று உணர்ந்த சிந்தையான்,
அங்கது வேரொடும் அங்கை தாங்கினான்
பொங்குநல் விசும்பிடைக் கடிது போகுவான்.''

மலையருகில் போய் நின்று மருந்து இலைகளைத் தேடினான். அதைக் கண்டுபிடிக்கக் காலமும்நேரமும் அதிகமாகும் என்பதால் அம்மலையையே வேரோடு எடுத்துக் கொண்டு அதிவேகமாக ஆகாய மார்க்கத்தில் பறந்து வந்தான், வந்து சேர்ந்தான்.

இதற்கிடையில் போர்க்களத்தில் சோர்ந்து கிடந்த இராமனை, வீடணனும், சாம்பவனும் கால்களை வருடினர். இராமன் கண் விழித்தான். இருவரையும் தன் கண்களால் பார்த்தான். அவர்களைக் கண்டு, இலக்குவனும் இதர வானர வீரர்களும் இறந்து கிடப்பதுபற்றி மீண்டும் பலவாறு கூறிப் புலம்பினான். அப்போது சாம்பவன் இராமனைத் தேற்றி, மாருதி மருத்துவ மலையைக் கொண்டுவர வடக்கு நோக்கிச் சென்றுள்ளான். விரைவில் வந்து விடுவான்.

நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று மருத்துவமலையின் மருந்துச் செடிகளின் மூலிகைகளின் சிறப்புகளை விவரித்துக் கூறினான்.

"பெருந்திறல் அனுமன் ஈண்டு உணர்வு பெற்றுளான்
அரும்துயர் முடிக்குறும் அளவில் ஆற்றலான்
மருந்து இறைப்பொழுதினில் கொணர்குவாய் எனப்
பொருந்தினான், வடதிசை கடிது போயினான்"

"ஆர்கல் கடைந்த நாள் அமுதின் வந்தன
கார் நிலத்து அண்ணல் தன் நேமிகாப்பன
மேருவின் உத்தரகுருவின் மேல் உள
யாரும் உற்று அணுகிலா அரணம் எய்தின"

"சல்லியம் அகற்றுவது ஒன்று, சந்துகள்
புல்உறப் பொருந்துவது ஒன்று, போயின
நல் உயிர் நல்குவது ஒன்று நல்நிறம்
தொல்லையது ஆக்குவது ஒன்று தொல்லையோய்"

என்று சாம்பவன் சஞ்சீவி மலையின் மகத்துவம் பற்றிக் கூறிக் கொண்டிருந்தபோது அனுமன் மலையுடன் வந்து மலையை ஆகாயத்தில் நிறுத்திவிட்டுக் கீழே வந்தான். போர்க்களத்தில் மாண்டு கிடந்தவர்களெல்லாம் உயிர்பெற்று எழுந்தனர்.

"காற்றுவந்து அசைத்தலும், கடவுள் நாட்டவர்
போற்றினர், விருந்த வந்து இருந்த புண்ணியர்
ஏற்றமும் பெருவலி, அழகொடு எய்தினார்
கூற்றினைவென்று தம் உருவும் கூடினார்"

போர்க்களத்தில் இறந்து கிடந்தவர்களெல்லாம் காயங்கள் ஆறி, பிளவுண்ட அவயங்கள் ஒன்று கூடி காயங்களும் தழும்புகளும் ஆறி, பழய வடிவம் பெற்று உயிர் பெற்று எழுந்தனர். போர்க்களத்தில் மாண்டுபோன அரக்கர்களுடைய உடல்கள் எல்லாம் கடலில் எரியப்பட்டுவிட்டதால் மறைந்து உயிர் பெறாமல் போயினர். மரக்கலங்களில் கிடந்தவர்கள் மட்டும் மீண்டும் உயிர் பெற்று

எழுந்தனர் என்பதைக் கம்பன் மிக நுட்பமாகப் பிரித்துக் காட்டிக் கூறியுள்ளார்.

"ஓங்கிய தம்பியை உயிர்வந்து உள்ளுற
வீங்கிய தோள்களால் தழுவி, வெம்துயர்
நீங்கினன் இராமனும் உலகில் நின்றில
தீங்கு உளதேவரும் மறுக்கம் தீர்ந்தனர் "

இலக்குவன் உயிர் பெற்றான். இராமனும் அவனைக்கட்டித் தழுவித் துயர் நீங்கினான். உலகில் தீங்குகள் என்றும் நிலைத்திருந்ததில்லை என்பதை இந்நிகழ்ச்சிகள் மூலம் அறிகிறோம். மாண்டவர்கள் உயிர்பெற்று எழுந்தபின் சஞ்சீவி மலையை அனுமன் மீண்டும் அதன் இருப்பிடத்திற்குக் கொண்டுப் போய்ச் சேர்த்து விட்டுத் திரும்பினான்.

இந்தப் பகுதியில், போரின் போது, மருத்துவத்தின் முக்கியும் பற்றி இங்கு விவரித்துக் கூறப்படுகிறது. இலையைக் கொண்டு வரச்சொன்னால் மலையையே கொண்டு வரும் அனுமனைப் போன்ற நமது நாட்டு மக்களின் இயல்பை அவர்களின் சிறப்பை நினைத்து இந்த நேரத்தில் நாம் பெருமைப்படுகிறோம். சஞ்சீவி மலையும், மூலிகை இலைகளின் மருத்துவச் சிறப்பு குணங்களும் அனுமனுடைய அரிய சாதனையும் நமது நாட்டு மக்களின் உள்ளங்களில் நீங்காத நினைவாக இடம் பெற்றுள்ளன. அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கிவருவதைப் போன்ற கலைவடிவத்தையும் படைத்துப் பெருமைப் படுகிறோம். நாமும் அதன் பெருமைகளை நினைவு கூறி அனுமனுடைய ஆற்றலை அரிய சேவையை நமது உள்ளத்தில் வைத்துப் பாராட்டுவோமாக.

போர்க்களத்தில் இந்திர சித்தன் அடைந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் இராவணனுடைய மாளிகையில், ஆட்டங்கள் பாட்டங்கள் நடைபெற்றன. இசைகள் பாட்டுக்கள் முழங்கின. மதுக்களுடன் மங்கையரும் கூடி ஆடிப்பாடிக் களித்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் மீண்டும் எழுந்த வானரவீரர்களின் ஆர்ப்பொலிச்சத்தம் கேட்டது. தூதர்கள் மூலம் வானரப்படை மருத்துவ மலைமூலம் மீண்டும் உயிர் பெற்று எழுந்துள்ள செய்தியை இராவணன் அறிந்தான்.

## மீண்டும் இராவணன் மந்திராலோசனை

சஞ்சீவி மலையின் மூலிகைகள் மூலம் உயிர் பெற்று எழுந்து, வானரப்படை ஆர்ப்பரித்ததை அறிந்த இராவணன் மீண்டும் தனது மந்திரக் கிழவரையும் உற்றாரையும் அழைத்து அவையைக் கூட்டினான். அவைக்கு இராவணனுடைய மைந்தனும் முதலமைச்சன் மகோதரனும் இதர முக்கிய அமைச்ர்களும் முதியோர்களும் வந்திருந்தனர்.

"மைந்தனும், மற்றுளோரும், மகோதரப்
பெயரினானும்
தந்திரத் தலைமையோரும் முதியரும்
தழுவத் தக்க
மந்திரர் எவரும் வந்து மருங்குறப்படார்ந்
தார், பட்ட
அந்தரம் முழுதும் தானே அனையவர்க்கு
அறியச் சொன்னான்.

அந்தரங்கமாக, மிகவும் நெருக்கமானவர்களை வைத்து அரசன் மந்திராலோசனை செய்வது என்பது இலங்கை அரசியலிலும், ஒரு வளர்ச்சியடைந்த செல்வ வளம்மிக்க அரசின் ஆட்சி முறைப்பழக்கமாக இருந்து வந்திருக்கிறது என்பதை இதற்கு முன்னரும் பல கட்டங்களில் கண்டிருக்கிறோம். ஆயினும் மந்திராலோசனைக் கூட்டத்தில் பலரும் கூறிய பல நல்ல ஆலோசனைகளை நிராகரித்து இராவணன் தனது தனியாண்மை நிலையிலிருந்தே முடிவுகளுக்கு வந்துள்ளான் என்பதையும் கதையில் காண்கிறோம். குறிப்பாகச் சீதையை விட்டுவிடும்படி பலர் கூறியும் இராவணன் கேட்கவில்லை.

இப்போது மீண்டும் இராவணனுடைய பாட்டன் மாலியவான் தலையிட்டு அறிவுரை கூறுகிறான். "மேருமலையைக் கூடக்கொண்டு வந்து மாண்டவர்களை எழுப்பிவிட்டனர். வல்லமைமிக்க அரக்கர்களெல்லாம் போரில் மடிந்து போயினர். இடிந்துபட்ட இலங்கையும் நீயும் சிறுவனும் தவிர வேறு யாருமில்லை. இனியாவது சீதையை விட்டுவிட்டு அறத்தின் மிக்கோரிடம் அடைக்கலம் அடைந்துவிடு என்று கூறுகிறான்.

"இறந்தனர் இறந்து தீர இனிஒரு பிறவி வந்து
பிறந்தனம் ஆகின் உள்ளோம் உய்ந்தனம்
பிழைக்கும் பெற்றி
மறந்தனம் எனினும் இன்னம் சனகியை
மரபின் ஈந்து அவ்
அறம்தரு சிந்தையோரை அடைக்
கலம் புகுதும் ஐயா"

"மறிகடல் குடித்துவானம் மண்ணோடும்
பறிக்க வல்ல
எறிபடை அரக்கர் எல்லாம் இறந்தனர்
இலங்கை ஊரும்
சிறுவனும் நீயும் அல்லால் யார் உளர்
ஒருவர்? தீர்ந்தார்
வெறிது நம் வென்றி என்றான் மாலி
மேல் விளைவது ஓர்வான்"

என்று மாலியவான் அறிவுரை கூறியதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இதைக்கேட்ட இராவணனுக்குக் கோபம் வருகிறது. கிளியைப் போன்றவளை விட்டுவிடுவதற்காகவா பிடித்து வந்தேன்? உங்களுக்கு பயமாக இருந்தால் ஓடிவிடுங்கள். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன், என்று மாலியவான் கூறிய ஆலோசனைக்கு மறுப்புக் கூறுகிறான்.

"கட்டுரை அதனைக்கேளா கண் எரிகதுவ
நோக்கி
பட்டனர் அரக்கர் என்னில் படைக்கலம்
படைத்த எல்லாம்
கெட்டன எனினும் வாழ்க்கை கெடாது
நல்கிளி அன்னாளை
விட்டிட எண்ணியோ நான் பிடித்தது
வேட்கை வீய"

"மைந்தன் என்? மற்றையோர் என்? அஞ்சி
னர் வாழ்க்கை வேட்டீர்,

உய்ந்து நீர் போவீர் நாளை ஊழி வெம்
தீயின் ஓங்கிச்
சிந்தினென் மனிதரோடு அக்குரங்கி
னைத் தீர்ப்பென் என்றான்
வெம்திறல் அரக்கர் வேந்தர் மகன் இவை
விளம்பல் உற்றான்"

தந்தை கூறியதைக் கேட்ட மேகநாதன் "நான் ஏவிவிட்ட நான்முகன் படைக்கலம் இராமனது மேனியைத் தீண்டாமல் என்னிடம் திரும்பி வந்து விட்டது. எனவே இராமன் யார் என்று தெரியவில்லை. வீடணன் கூறியதைப் போல அவன் அனைத்தையும் கடந்தவனோ என்னவோ தெரியவில்லை. அது எப்படியாயினும் அதைப்பற்றிக் கூறுவது ஆண்மையல்ல. நான் போய் நிகும்பலையாகம் முடித்து அவர்களை வீழ்த்துவேன்". என்று தந்தைக்கு ஈடாகவே மகனும் தனியாண்மை பேசுகிறான் என்பதையும் கம்பன் மிக நன்றாகவே குறிப்பிடுகிறார்.

ஆயினும் இந்திரசித்தனுடைய சிந்தனையில், தனது சொந்தப்போர் அனுபவத்தின் காரணமாகச் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காணமுடிகிறது, தொடக்கத்தில் மனிதரையும் வானரரையும் இகழ்ந்தான். கேலி பேசினான். தேர், குதிரை, யானைப் படைகள் இல்லாதவர்கள் என்று கூறினான். வில் இல்லாமல் கல்லைக் கொண்டு போரிட்டா அவர்கள் வெற்றிபெறப் போகிறார்கள் என்று பேசினான். "பிரம்மாஸ்திரத்தை ஏவியபோது இராமன் எங்கோ போய் ஒழிந்து கொண்டான்" என்றெல்லாம் பேசினான்.

இப்போது அவ்வந்தணன் படையும் அவனை ஒன்றும் செய்யாமல் என்னிடம் திரும்பி வந்துவிட்டது. அவன் யார் என்று தெரியவில்லை. அவன் வீடணன் கூறியதைப் போல அனைத்தையும் கடந்தவனோ என்று பேசுகிறான்.

"உனதுநான் உணர்த்தல்பாலது உணர்ந்
தனை கோடல் உண்டேல்
தளமலர்க்கிழவன் தந்த படைக்கலம்
தழலின் சாற்றி

அளவிலது அமையவிட்டது இராமனை
நீக்கி அன்றால்
விளைவு இலது ஐயன் மேனி தீண்டில
மீண்டது அம்மா”

“மானிடன் அல்லன்! தொல்லை வானவன்
அல்லன்; மற்று
மேல்நிமிர் முனிவன் அல்லன் வீடணன்
மெய்யில் சொன்ன
யான் எனது எண்ணல் தீர்ந்தார் எண்
உறும் ஒருவன் என்றே
தேன்நகு தெரியல் மன்னா சேகு அறத்
தெரிந்தது அன்றே!”

நான் மிகுந்த சக்தியுள்ள வல்லமைமிக்க நான்முகன் படைக்கலத்தை ஏவினேன். அது இராமனைத் தீண்டவில்லை. திரும்பி வந்துவிட்டது என்பதை நான் உங்களுக்கு உணர்த்த விரும்புறேன். அவன் சாதாரண மனிதன் அல்லன். அவன் வானவனோ அல்லது மேலான முனிவனோ அல்லன். வீடணன் கூறியதைப் போல யான் என்னுடையது என்னும் எண்ணம் நீங்கிய முழுமுதல் காரணன் என்றே தெரிகிறது என்று கூறிவிட்டு மீண்டும் அது போகட்டும் இருப்பினும் நான் விடப்போவதில்லை. விரைவில் நான் சென்று நிகும்பலை யாகத்தைச் செய்து முடித்துப் பகைவரை அழிப்பேன் என்றும் கூறினான்.

அனையது பிறவும் நிற்க, அன்னது பகர்தல்
ஆண்மை
வினையன அன்று; நின்று வீழ்ந்தது வீர
இனையல் நீ! ஈண்டுயான்போய் நிகும்பலை
விரைவின் எய்தித்
துனிஅறு வேள்வி வல்லைத் தொடங்கி
னால் முடியும் துன்பம்”

என்று இந்திர சித்தன் ஒரு பக்கம் சிந்தனை குழம்பியும் மறுபக்கம் தனி வீரத்துடன் பேசுவதையும் கம்பன் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இந்திர சித்தன் நிகும்பலையாகத்தை முடிக்கச் செல்வதற்கு இராவணன் ஒப்புதல் தெரிவித்தான். மேகநாதன் தனது வேள்வியை முடிக்கக் கால அவகாசம் வேண்டியதிருந்தது. அதற்காக ஒரு தந்திரத்தைச் செய்யுமாறு தனது தந்தையிடம் கூறுகிறான். ஒரு மாயா சீதையைக் கொண்டு போய் இராமன் முன்பாக வெட்டிக் கொல்ல வேண்டும். அத்துடன் அயோத்தி மீதும் படையெடுத்து அங்குள்ளவர்களையும் அழிக்கப்போகிறோம் என்று போக்குக்காட்ட வேண்டும். அப்போது இராமனும் அவனுடைய படைகளும் அயோத்திக்குப் புறப்படத் தயாராகும். அதற்குள் நிகும்பலையாகத்தை முடித்துவிடலாம் என்று அத்தந்திரங்களைச் செய்யும்படி இந்திர சித்தன் ஆலோசனை கூறுகிறான். இது ஒரு முக்கியமான போர்த்தந்திரமாகும், இதற்கு இராவணனும் உடன்பட்டு, அவ்வாறே மாயா சீதைகொண்டு வரப்பட்டு கொல்லப்படுகிறாள். இராமன் அதைக்கண்டு துயரம் கொண்டு மயக்கமடைந்தான். வானரத் தலைவர்கள் வருத்தம் அடைந்தார்கள். இந்திர சித்தன் அயோத்தியை நோக்கிப் படையெடுக்கப் போவதாகப் போக்குக் காட்டுகிறான் என்றும் அதைக்கண்டு இராமனும் இலக்குவனும் அயோத்திக்குப் புறப்படத் தயாராகிறார்கள் என்றும் கதையில் விவரிக்கப்படுகிறது.

அப்போது வீடணன் தலையிட்டு அதெல்லாம் வெறும் நாடகம் நீங்கள் அவைகளை நம்ப வேண்டாம், என்று இலங்கை அரக்கர்களின் சூதுகளையும் தந்திரங்களையும் எடுத்துக் கூறித் தெளிவுபடுத்துகிறார்.

"பத்தினிதன்னைத் தீண்டிப் பாதகன் படுத்தபோது
முத்திரத்து உலகும் வெந்து சாம்பராய் முடியும் அன்றே!
இத்திறம் ஆனதேனும் அயோத்திமேல் போன வார்த்தை
சித்திரம், இதனையெல்லம் தெரியலாம் சிறிது போழ்தில்"

என்று கூறி, வீடணன் தான் சென்றுச் சீதையைப் பார்த்து வருவதாகக் கூறி வண்டின் உருவம் எடுத்து அசோகவனத்திற்குச் சென்றுத் திரும்பி வந்தான். அங்கு சீதை இருப்பதையும், இந்திரசித்தன் நிகும்பலையாகம் செய்யப் போவதையும் அறிந்து வந்து அதை இராமனிடம் தெரிவித்தான். இந்திரசித்தன் நிகும்பலை யாகத்தைச் செய்து முடித்து திரும்பிவிட்டால், அவனை யாரும் வெல்ல முடியாத அளவுக்குப் பலம் பெற்றுவிடுவான். எனவே அவன்

யாகத்தைச் செய்ய விடாமல் தடுத்து விட வேண்டும் என்றும் ஆலோசனை கூறுகிறான்.

இராவணனுக்கு எதிராக இராமன் நடத்திய போரில் வீடணனுடைய பங்கு மிகவும் முக்கியமானதாகும். அரசியல் தன்மையும் கொண்டதாகும். போரின் ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் வீடணன் மிகவும் நுட்பமான விவரங்களை எடுத்துக் கூறி இராமனுடைய முழுமையான வெற்றிக்கு உதவுகிறான்.

இந்திரசித்தனுடைய சூழ்ச்சியைப் பற்றி வீடணன் எடுத்துக் கூறியதைக் கேட்டு இராமனும் வானரப்படைகளும் மகிழ்ச்சி -யடைந்தனர். வீடணனைப் பாராட்டி இராமன் பேசுகிறான்.

வீரனும் ஐயம் தீர்ந்தான், வீடணன் தன்
னை மெய்யொடு
ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத்தழுவி
ஐய,
தீர்வது பொருளோ துன்பம் நீஉளை தெய்
வம் உண்டு,
மாருதிஉளன், நாம் செய்ததவம் உண்டு
வலியும் உண்டு,ஆல்

இந்திரசித்தனுடைய மாயங்கள், தந்திரங்கள் சூழ்ச்சிகள், சாகசங்கள், வஞ்சக முயற்சிகள் முதலியவற்றைப் பற்றி வீடணன் விவரித்த உண்மைகளைக் கேட்டு இராமனுடைய ஐயப்பாடுகள் தீர்ந்தன. வீடணனை இராமன் கட்டித் தழுவிக் கொண்டான்". அதுவும், "மெய்யொடு ஆர்வமும் உயிரும் ஒன்ற அழுந்துறத்தழுவிக் கொண்டான் என்று கம்பன் கவிதை குறிப்பிடுகிறது. அத்துடன் நீ இருக்கிறாய், நம் பக்கம் தருமம் இருக்கிறது. மாருதி இருக்கிறான், நாம் செய்த தவம் இருக்கிறது. நம்மிடம் பலமும் இருக்கிறது. அப்படியிருக்க நமது துன்பங்கள் ஒரு பெரிய காரியமல்ல என்று இராமன் கூறுகிறார்.

இராமன் தன்னைக் கட்டித் தழுவி இவ்வாறு கூறியவுடன், வீடணனும் இராமனை வணங்கி, "இந்த நிகும்பலை யாகத்தை இந்திரசித்தன் நடத்தி முடித்துவிட்டால், அரக்கர்களின் பலம்

பலமடங்கு பெருகிவிடும். அவர்களை யாராலும் வெல்ல முடியாத வல்லமையைப் பெற்றுவிடுவார்கள். எனவே அந்த வேள்வியைச் செய்யவிடாமல் சிதைத்துவிட வேண்டும். அதற்கு அனுமதி அளித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வாயாக", என்று கூறுகிறான்.

இராமனும் அந்த வேள்வியைச் சிதைக்க அனுமதி கொடுத்தான். இலக்குவனை அழைத்து, வாழ்த்துக் கூறிப் பலவகைப் படைக்கலன்களையும், கவசங்களையும், தற்காப்பு மற்றும் தாக்குதல்களுக்கான ஆலோசனைகளையும் கூறுகிறான். இருதடவைகளில் இராமன் அருகில் இல்லாத போது இந்திரசித்தனுடைய தாக்குதல்களினால் இலக்குவன் ஆபத்துக்குள்ளானான். எனவே அந்த அனுபவங்களையும் எடுத்துக் கொண்ட, இலக்குவன் போதுமான தற்காப்புடனும், உஷார்த் தன்மையுடனும் இருக்க வேண்டிய அவசியத்தை இராமன் உணர்நதிருந்தான். எனவே அதற்கான உத்திகள், கவசங்கள், ஆயுதங்கள், அஸ்திரங்கள் பற்றிய விவரங்கள், அவைகளைச் சரியாகப்பிரயோகம் செய்யும் வழிமுறைகள் முதலியவைகள் பற்றிய ஆலோசனைகளைக் கூறி இலக்குவனை ஆசிர்வதித்து அனுப்புகிறான். இதைப்பற்றிக் கம்பன் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

எதிரியான இந்திரசித்தன் எல்லாவிதமான சக்திக் கணைகளையும் கையாளத் தெரிந்தவனாகவும் பயிற்சி பெற்றவனாகவும் இருக்கிறான். அத்துடன் அவன் மாயப்போர் நடத்துவதிலும் வல்லவனாக இருக்கிறான். எனவே அவன் வலுவான சக்திக்கணைகளை ஏவும் போது என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், அவைகளிலிருந்துத் தற்காத்துக் கொள்வது எப்படி அவைகளைத் தடுப்பது எப்படி? என்னும் நுட்பமான விஷயங்களை இலக்குவனுக்கு இராமன் எடுத்துக் கூறுகிறான்.

"தம்பியைத் தழுவி ஐயன் தாமரைத்தவிசின்
மேலான்
வெம்படை தொடுக்குமாயின் விலக்கும்
அது அன்றி வீர
அம்புநீ துரப்பாய் அல்லை, அனையது துரந்த
காலை

உம்பெரும் உலகும் எல்லாம் விளியும் அஃது
ஒளிதி ” என்றான்

“முக்கணான் படையும், ஆழிமுதலவன் படை
யும் முன்னின்று
ஒக்கமேவிடுமே, விட்டால், அவற்றையும்
அவற்றின் ஓயத்
தக்கவாறு இயற்றி, மற்றுன் சிலை வலித்
தருக்கினாலே
புக்கவன் ஆவி கொண்டு போதிது புகழின்
மிக்கோய்”

இராமன் இலக்குவனைத் தழுவி, “எதிரி உன் மீது பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்தால் அதற்குப் பணிந்து குறியிலிருந்து விலகிக்கொண்டுவிட வேண்டும். அதை எதிர்த்து நிற்கக் கூடாது அப்படி அதற்கு எதிராக எதிர்க்கணை தொடுத்தால் வானுலகம் இப்பூலகமும் எல்லாம் அழியும். பெரும் நாசம் ஏற்பட்டுவிடும். எனவே அதை நீ தவிர்க்க வேண்டும்!! என்று கூறுகிறான். இந்த நேரத்தில் மற்றொரு நிகழ்ச்சியை இங்கு நினைவு கூற வேண்டும். அனுமன் சீதையைத் தேடுவதற்காக இலங்கை சென்று அங்கு அசோகவனத்தில் பிராட்டியைக் கண்டுவிட்டுத் திரும்பும் போது அவன் வந்து போனதன் அடையாளமாக ஓர் அட்டகாசம் செய்தான். அரக்கர்கள் அவனைத் தாக்க வந்தபோது அவர்களைத் திருப்பி அடித்துக் கொன்றான். கடைசியாக இந்திரசித்தன் வந்து அனுமன் மீது பிரம்மாஸ்திரத்தை ஏவினான். அப்போது அனுமன் அதை எதிர்க்காமல் அதற்கு வணங்கி, பணிந்து, அதற்குத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான் என்பதைக் கண்டோம். இங்கு இலக்குவனுக்கு பிரம்மாஸ்திரத்திலிருந்து எப்படித் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி மிகவும் நுட்பமாக இராமன் விளக்கமாகக் கூறுகிறான். அடுத்து,

“முக்கணான் படையும் ஆழி முதலவன்படை
யும் முன்னின்று
ஒக்கவேவிடுமே, விட்டால் அவற்றையும்
அவற்றின் ஓயத்

தக்கவாறு இயற்றி மற்றுன் சிலை வலித்
தருக்கினாலே
புக்கவன் ஆவி கொண்டு போதுதி புகழின்
மிக்கோய்! "

சிவன் படையும் திருமால் படையும் சேர்ந்து தொடுப்பானாகில் அவைகளையும் சக்தி இழக்கும் படியும் அடங்கும் படியும் நடந்து கொள்ள வேண்டும். அத்துடன் உன்னுடைய வில்லின் வலிமையாலும் சரியான வலுவான தாக்குதல்களையும் தொடுத்து எதிரியின் ஆவியைக் கொள்ள வேண்டும், என்றும் விளக்கம் கூறுகிறான், அதன் பின்னர்,

"இச்சிலை இயற்கை, மேல்நாள், தமிழ்முனி
இயம்பிற்று எல்லாம்
அச்சுஎனக் கேட்டாய் அன்றே! ஆயிர
மௌலி அண்ணல்,
மெய்ச்சிலை விரிஞ்சன் மூட்டும் வேள்
வியின் வேட்டுப்பெற்ற
கைச்சிலைக் கோடியென்று கொடுத்
தனன் கவசத்தோடும்"

என்றும்,

ஆணி இவ்வுலகுக்கான ஆழியான் புறத்
தின் ஆர்த்த
தூணியும் கொடுத்து மற்றும் உறுதிகள் பல
வும் சொல்லித்
தாணுவின் தோற்றத்தானைத் தழுவினன்
தழுவலோடும்
சேண் உயர் விசும்பில் தேவர் தீர்ந்தது
எம் சிறுமை என்றார்.

என்றும் கம்பர் தனது கவிதைகளில் குறிப்பிடுகிறார் அதாவது,

அகத்தியன் ஆசி பெற்ற சக்தி மிக்க வில் ஒன்றை இராமன் இலக்குவனுக்குக் கொடுத்தான். அவ்வில்லைப் பற்றிய விவரங்களை

அதன் இயல்புகளைப் பற்றியெல்லாம் முன்பு தமிழ் முனிவன் அகத்தியன் கூறியுள்ள நுணுக்கங்களையெல்லாம், நன்கு கவனமாகக் கேட்டிருக்கிறாய். அவைகளையெல்லாம் நினைவுபடுத்திக் கொள்ளவும். அவைகளை நன்கு கவனத்தில் வைத்துக் கொள்ளவும். மற்றும் திருமால் வில்லையும், பிரம்மதேவன் வேள்வியிலிருந்து எழுந்த வலுவான வில்லையும் அவைகளுக்குரிய கவசங்களையும் கொடுத்தான். அடுத்து இவ்வுலகத்திற்கே அச்சாணியாகவுள்ள இராமபிரான் தனது முதுகிலே கட்டியிருந்த தூளியையும் கொடுத்து தற்காப்புக் குறிப்புகள் பலவும் சொல்லித் தம்பியைக் கட்டித் தழுவி விடை கொடுத்து அனுப்பி வைத்தான். மாருதியும் இதர பல வானர வீரர்களும், வீடணனும் இராமனுடைய ஆசியைப் பெற்று இலக்குவனுடன் அவனுக்குத் துணையாகச் சென்றனர்.

இலக்குவனும் அனுமனும் அத்துடன் அவர்களுடன் சென்ற வானர வீரர் கூட்டமும் சேர்ந்து இந்திரசித்தனுடைய வேள்வியை அழிக்க முற்பட்டனர். அதைக் கண்டு இந்திர சித்தன் மிக்க கவலை கொண்டான். இலக்குவனும் வானரப்படைகளும் அரக்கர் படைகளைக் கடுமையாகத் தாக்கி இந்திரசித்தனுடைய வேள்விப் பொருள்களை அழித்தனர். அவனால் தனது வேள்வியைச் சீராக நடத்த முடியவில்லை.

"கால்எனக், கடுஎனக், கலிங்கக்கம்மியர்
நூல்என, உடல் பொறை தொடர்ந்த நோய் எனப்
பால் உறு பிரை எனக் கலந்து பன்முறை
வேல்உறு சேனையைத் துணித்து வீழ்த்தினான்,"

"ஓமவெம்கனல் கடிந்து உழைக் கலப்பையும்
காமர் வெண்தருப்பையும் பிறவும் கட்டற
வாமமந்திரத் தொழில் மறந்து மற்றவன்
தூமவெம்கனல் எனப்பொலிந்து தோன்றினான்"

புயல்காற்றைப் போல, கடும் நஞ்சைப் போல நெசவாளர் நெய்யும் தரியும் நூலையும் போல, உடலைத் தொடரும் நோயைப் போல சந்திரனின் வளர்பிரை தேய்பிரையைப் போல இலக்குவன்

தொடர்ந்து இராக்கதர் படையைத் தனது சரங்களால் வெட்டி வீழ்த்தினான்.

வானரப்படைகள் இந்திரசித்தனுடைய வேள்வியின் நெருப்பை அழித்தார்கள். நவதான்யக் குவியலைக் குலைத்தார்கள். தருப்பையைச் சிதைத்தார்கள். தொடர்ந்து இந்திர சித்தனைத் தாக்கி மந்திரங்களையே மறக்கச் செய்தார்கள். அம்மந்திரங்களையும் சொல்லவிடாமல் தடுத்தார்கள்.

இவ்வாறு இராக்கதர்களின் படைகளை அழித்து வேள்வியைச் சிதைத்து வானரப்படை இந்திர சித்தனைச் சூழ்ந்து கொண்டது என்று கம்பன் கூறுகிறார்.

இந்திரசித்தனுக்குத் தனது வேள்வியை நடத்த முடியவில்லையே என்னும் வருத்தமும் கவலையும் ஏற்பட்டுக் கலக்கமடைந்தான்.

"மானமும் பாழ்பட, வகுத்த வேள்வியின்
மோனமும் பாழ்பட முடிவிலா முரண்
சேனையும் பாழ்படச் சிறந்த மந்திரத்து
ஏனையும் பாழ்பட இனைய செப்பினான்"

மானமும், மோனமும், சேனையும் மந்திரங்களும் பாழ்பட்டுப் போயின. வேள்வியும் அடங்கியது. இனி எனக்கு வெற்றி கிடைப்பதது சந்தேகமே. மனிதர்க்கு ஆற்றாமல் போய்விட்டேன் என்று தனது அகங்கார நிலையிலிருந்துச் சற்று தாழ்ந்து இந்திர சித்தன் பேசியதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இந்திரசித்தனுடைய பொய்களையும் வஞ்சகத்தையும் இகழ்ந்து மாருதி பேசினான்,

"நான் உனை இரந்து கூறும் நயமொழி ஒன்றும் கேளாய்
சானகி தன்னை வாளால் தடிந்ததோ? தனதன் தந்த
மானமேல் சேனையோடும் வடதிசை நோக்கிமீது
போனதோ! கோடி கோடி வஞ்சமும் பொய்யும் வல்லாய்!"

எத்தனை நல்லுரைகள் சொன்னாலும் கேட்க மறுக்கிறாய். சீதையைக் கொன்றதாகக் காட்சி காட்டியதும், அயோத்தியை நோக்கிப் படையெடுக்கப் போவதாகப் போக்குக் காட்டியதும் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டன. எல்லாம் கோடி கோடி வஞ்சமும் பொய்யும்தான். அதில் நீ கெட்டிக் காரன்தான் என்று இந்திரசித்தனை மாருதி பலவாறாக இகழ்ந்து பேசினான்.

இந்திரசித்தன் அவைகளையெல்லாம் கேட்டு மேலும் ஆத்திரமும் ஆவேசமும் கோபமும் கொண்டு பதில் பேசி வானரப்படைகளுக்கு எதிராகப் போரைத் தொடுத்தான்.

இலக்குவன் ஆக, மற்ற இராமனே ஆக
ஈண்டு
விலக்குவர் எல்லாம் வந்து விலக்குக,
குரங்கின் வெள்ளம்
குலங்குலமாகமாளும் கொற்றமும் மனிதர்
கொள்ளும்
அலக்கணும், முனிவர்தாமும் அமரரும்
காண்பர் அன்றே!”

“யான் உடை வில்லும், என் பொன் தோள்
களும் இருக்க இன்னும்
ஊன்உடை உயிர்கள் யாவும் உய்யுமோ?
ஒளிப்பிலாமல்
கூன் உடைக்குரங்கினோடு மனிதரைக்
கொன்று சென்றுஅவ்
வானினும் தொடர்ந்து கொல்வேன்
மருந்தினும் உய்யமாட்டீர்”

என்றெல்லம் இந்திரசித்தன் கோபாவேசம் கொண்டு பேசிப் பலவகையான சக்தி மிக்கக் கணைகளைச் சரமாரியாகத் தொடுத்தான். இலக்குவன் உறுதியாக நின்று அவன் தொடுத்தக் கணைகள் அனைத்தையும் தடுத்தான். இந்திரசித்தன் மிகவும் சக்தி வாய்ந்தப் பாசுபதக்கணையை ஏவினான். அதை மற்றொரு பாசு பதக்கணை கொண்டு இலக்குவன் தடுத்தான்.

தனது முயற்சிகள் வெற்றி பெறாமைக்கு வீடணன்தான் காரணம் என்று கருதி இந்திர சித்தன் அவன் மீது கோபம் கொண்டு அவனை இகழ்ந்து பேசினான். இருவருக்கும் இடையில் ஒரு கடும் வாக்குவாதம் ஏற்படுகிறது. அந்த வாதத்தின் முடிவில் இருவருக்கு மிடையில் கடும் மோதல் ஏற்படுகிறது. இந்த மோதலில் இந்திரசித்தன் தனது கையில் இருந்த சக்திமிக்க ஆயுதங்களை, வலுவான கணைகளை வீடணன் மீது ஏவினான். அந்த ஆயுதங்கள், கணைகளையெல்லாம் இலக்குவன் தடுத்து விட்டான். பின்னர் வீடணனும் கோபம் கொண்டு தனது சக்தி மிக்க கைத்தடியினால் இந்திரசித்தனது தேரையும் தேர்ப்பாகனையும், குதிரைகளையும் அழித்தான். இந்திரசித்தன் மறைந்து சென்று இலங்கைக்கு ஓடிவிட்டான்.

இது ஒரு அற்புதமான காட்சியாகும். இதைக் கம்பன் மிக அழகாகத் தனது கவிதைகளில் வடித்துத் தருகிறார். இந்திரசித்தன் வீடணன் மீது ஏவிய வசைக்கணைகள், அவைகளுக்கு வீடணன் அளித்த பதில், சிறந்த அறக் கருத்துக்கள் கொண்டவைகளாகும். அவைகளுக்கு பதிலளிக்க முடியாமல் இந்திர சித்தன் வீடணன் மீது கொடுங்கணைகளை வீசுகிறான். இலக்குவன் அவையனைத்தையும் தடுத்துவிட்டான். அந்தக் காட்சியைக் காணலாம். இந்திர சித்தன் கூறுகிறான்.

"முரண்தடம் தண்டும் ஏந்தி, மனிதரை முறைமை குன்றப்
புரட்டரின் புகழ்ந்து பேதை அடியனின் தொழுது பின்சென்று
இரண்டுறு முரசம் என்ன, இசைத்ததே இசைக் கின்றாயைப்
புரட்டுவேன் தலையை இன்று பழியொடும் ஒழி வேன் போல் ஆம்"

"நீர் உளதனையும் உள்ள மீன் என நிருதல் எல்லாம்
வேர் உளதனையும் வீவர் இராவணனோடு மீளார்
ஊர்உளது, ஒருவன் நின்றாய்நீ உளை உறைய நின்னோடு
ஆர்உளார் அரக்கர் நிற்பார்? அரசுவீற்றிருக்க ஐயா?

"பனிமலர்த்தவிசின் மேலோன் பார்ப்பன குல
த்துக்கெல்லாம்
தனிமுதல் தலைவன் ஆனாய், உன்னைவந்து
அமரர் தாழ்வார்,
மனிதருக்கு அடிமையாய்நீ இராவணன்
செல்வம் ஆள்வாய்
இனிஉனக்கு என்னோமானம்? எங்களோடு
உடங்கிற்று அன்றே?"

"எழுதி ஏர்அணிந்ததிண் தோள் இராவணன்
இராமன் அம்பால்
புழுதியே பாயல் ஆகப் புரண்டநாள், புரண்டு
மேல் வீழ்ந்து
அழுதியோ! நீயும்கூட ஆர்த்தியயோ! அவனை
வாழ்த்தித்
தொழுதியோ! யாதோ செய்யத் துணிந்தனை
விசயத் தோளாய்?"

"ஊன்உடை உடம்பின் நீங்கி, மருந்தினால்
உயிர் வந்து எய்தும்
மானிடர் இலங்கை வேந்தைக் கொல்வரே!
நீயும் அன்னான்
தான் உடைச் செல்வம் துய்க்கத் தகுதியே!
சரத்தினோடும்
வானிடைப்புகுதி அன்றே! யான்பழி மறுக்கில்!
என்றான்."

உன் கையில் வலிமை மிக்க தண்டாயுதத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய். இருப்பினும் நீ மானமில்லாது, குலம் தாழ்ந்து போய் எதிரிகளுக்கு அடிதொழுது அவர்களுக்குப் பின்னால் கைகட்டிச் சென்று கொண்டிருக்கிறாய். சாதி விலக்கு செய்யப்பட்ட வனைப்போல எதிரிகளின் பின்னால் சென்று கொண்டிருக்கிறாய். மேளம் கொட்டுவதைப் போலத் திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லிக் கொண்டு திரிகிறாய். உன் தலையை உருட்டுகிறேன்

பார். எனக்குச் சிற்றப்பனைக் கொன்ற பழிச்சொல் வந்தாலும் பரவாயில்லை.

நீர் உள்ளவரையில்தான் மீன் இருக்கும். அது போல இராவணன் உள்ள வரைதான் அரக்கர்கள் இருப்பார்கள். அதன்பின்னர் நீ ஆட்சிக்கு வந்தாலும் ஊரிலும் உன்னோடும் யார் இருப்பார்?

மேலான பிரம்ம குலத்திற்கெல்லாம் நீ இப்போது தனி முதல் தலைவனாகி விட்டாய். (இங்கு கம்பன் பனிமலர் தவிசின் மேலோன் பார்ப்பன குலத்துக்கெல்லம் என்று குறிப்பிடுகிறார். நான்முகன் குலம் (பிரம்மகுலம்) தான் பார்ப்பன குலம் என்று அழைக்கப்படுகிறது. அதன்படி இராவணனுடைய குலம், அதாவது அரக்கர் குலம் பார்ப்பன குலம் என்றாகிறது. ஆனால் சில ஆராய்சியாளர்கள் இராவணன் குலத்தை அரக்கர் குலத்தை திராவிடர் குலம் என்று குறிப்பிடுகின்றனர். அதற்கு இராமாயணக் கதைப்படி ஆதாரம் இல்லை. எப்படியும் இராவணன் பிரம்ம தேவனின் பேரன் என்பதே கதையாகும். இராவணனுடைய உடன்பிறந்த தம்பி வீடணன் என்பதை அறிவோம். எனவே இந்திரசித்தன் பார்ப்பனகுலம் என்று குறிப்பிடுகிறான்) உனது குலப்பெருமை காரணமாக தேவர்களே உன்னை வணங்குவார்கள். ஆனால் நீயோ அவமானகரமாக மனிதர்களுக்கு அடிமையாக இருந்து கொண்டு இராவணனுடைய செல்வங்களையெல்லாம் அனுபவிக்க நினைக்கிறாய். நீ மானம் கெட்டுப் போனாய். நம்முடைய மானம் மரியாதையெல்லாம் எங்களோடு போய்விட்டது. நீ குலத்தைக் கெடுத்து விட்டாய்.

இராமனுடைய அம்புகளால் அழகு மிக்க தோள்களையுடைய கம்பீரமான இராவணன் தரையிலே, புழுதியிலே வீழ்ந்து கிடந்தால், அப்போது நீ அவன் மீது விழுந்து அழுவாயோ அல்லது நீயும் பகைவர்களுடன் சேர்ந்து கொண்டு ஆர்ப்பரிப்பாயோ, உன் அண்ணனைக் கொன்ற எதிரிகளை வாழ்த்தி அவர்களை வணங்குவாயோ? என்ன செய்யத் துணிந்தாயப்பா?

உடலில் இருந்து உயிர் நீங்கிய பின்னர் மருந்தினால் மீண்டும் உயிர் பெற்று வந்துள்ள அந்த மனிதர்கள் இராவணனைக் கொல்வார்களோ? வெல்வார்களோ? நீயும் அந்த இராவணனுடைய அரசை அடைவதற்குத் தகுதி உள்ளவன் தானா? உன்னை

வானுலகிற்கு அனுப்புகிறேன் பார். எனக்கு அதனால் பழி வந்து சேரும் என்று நான் கவலைப் படவில்லை என்று இந்திரசித்தன் பேசியதைக் கம்பன் மிக அழகாக மிக நுட்பமாக எடுத்துக் கூறுகிறார். இந்தக் கவிதைகளின் கருத்துக்களில் முக்கியமான சில அரசியல் கொள்கை நிலைகளைக் காண்கிறோம்.

வீடணன் இலங்கையின் மன்னனாக இராமனால் ஆக்கப் பட்டிருக்கிறான் என்பதை மனதில் வைத்து இந்திர சித்தன் அவனைக் கேவலப்படுத்திப் பதவிக்காக எதிரிகளின் பின்னால் கை கட்டி நிற்கிறான் என இழித்துக் கூறி உன்னை முதலில் ஒழிப்பேன் என்று சினந்து பேசுகிறான். இதை மிகவும் நுட்பமாகக் கம்பன் தனது கவிதைகளில் குறிப்பிடுவதைக் காணலாம்.

இந்திரசித்தன் பேசிய இந்த சுடு சொற்களையெல்லாம் வீடணன் கேட்டான். அமைதியாகப் பொறுமையாக நன்றாகவும் கேட்டான். அந்த வசைகளையெல்லாம் கேட்டுச் சிரித்துக் கொண்டே, "பாவம் பொல்லாதது. தருமமே சாலச் சிறந்தது. நான் தருமத்திலிருந்து அறத்தின் வழியிலான அரசியலிலிருந்து விலக மாட்டேன்" என்று பதில் கூறுவதைக் காணலாம்.

"அவ்வுரை அமையக் கேட்ட வீடணன் அலங்கல் மோலி
செவ்விதில் துளக்கி, மூரல் முறுவலும் தெரிவது ஆக்கி
வெவ்விது பாவம், சாலத் தருமமே விழுமிது ஐயா
இவ்வுரை கேட்டி என்னா இனையன விளம்பல் உற்றான்"

வீடணன் கூறும் பதில் "நான் அறத்தின் பக்கமே நிற்பேன். மீளாத நரகத்தைக் கொடுக்கவல்ல பாவத்தின் பக்கம் நின்று பாவப் பழியோடு வாழ மாட்டேன். இலங்கை வேந்தனான இராவணன் பிழை செய்து விட்டான். எவ்வளவோ சொல்லியும் அவன் அந்தப் பிழையைத் திருத்திக் கொள்ளவில்லை. அப்போதே நான் அவனுக்கு உடன் பிறந்தவன் இல்லை என்று விலகிக் கொண்டு விட்டேன். நான் உண்மையின் பக்கமே நிற்பேனேயல்லாமல் பொய்மையாகிய உங்கள் பக்கம் நிற்க மாட்டேன்" என்று இந்திரசித்தனுக்குப் பதிலளிக்கிறான்.

"அறம் துணையாவது அல்லால் அருநரகு
அமைய நல்கும்

மறம் துணையாக மாயாப் பழியொடும் வாழ
மாட்டேன்
துறந்திலேன் மெய்மை, பொய்மை உம்மை
யே துறப்பது அல்லால்
பிறந்திலேன் இலங்கை வேந்தன் பின்
அவன் பிழைத்த போதே”

என்று வீடணன் உறுதியாக பதில் கூறி விட்டு மேலும் தொடர்ந்து பேசுகிறான்.

“உண்டிலேம் நரவம் பொய்மை உரைத்தி
லேன் வலியால் ஒன்றும்
கொண்டிலேன் மாயவஞ்சம் குறித்திலேன்
யாரும் குற்றம்
கண்டிலர் என்பால் உண்டே? நீயுரும் கண்
டீர் அன்றே
பெண்டிரும் திறம்பினாரைத் துறந்தது பிழை
யிற்று ஆமோ?”

மனிதனை மயக்கும் கள்ளை நான் உண்ண மாட்டேன். பொய்மை உரைக்க மாட்டேன். வலிமையால் ஒன்றைக் கைப்பற்றி அபகரிக்க மாட்டேன். மாயமோ வஞ்சகச் செயலோ செய்ய மாட்டேன். என் மீது யாரும் குற்றம் காண முடியாது. நீயும் தான் கண்டிருக்கிறாய் பெண்களின் பால் முறை தவறி நடந்து கொண்டவர்களை துறந்தது பிழையாகுமோ? என்று கேட்கிறான்.

“மூவகை உலகம் ஏத்தும் முதலவன் எவர்க்கும்
மூத்த
தேவர்தம் தேவன் தேவி கற்பினில் சிறந்து
ளாளை
நோவன செய்தல் தீது என்று உரைப்ப நுன்
தாதை சீறிப்
போ என உரைக்கப் போந்தேன் நரகதில் பொருந்
துவேனோ?”

கற்பினில் சிறந்த சீதை, அவள் மூவுலகும் போற்றக் கூடிய முதல்வனான தேவர்க்கும் தேவனானவனுடைய தேவி, அவளைத்

துன்புறுத்தாதே என்று நான் கூறிய போது உன் தந்தை என்னை வெளியே போ என்று விரட்டி விட்டான். நான் உங்களை விட்டு வெளியேறி விட்டேன். அந்த நரகத்தில் என்னால் இருக்க முடியவில்லை.

“வெம்மையில் தருமம் நோக்கா வேட்டதே
வேட்டு வீயும்
உம்மையே புகழும் பூண்க துறக்கமும்
உமக்கே ஆக,
செம்மையில் பொருந்தி மேலோர் ஒழுக்கி
னோடு அறத்தைத் தேறும்
எம்மையே பழியும் பூண்க நரகமே எமக்கே
ஆக!”

கொடுமை மிக்க மனத்தனாக இருந்து கொண்டு, எத்தகைய தர்மத்தையும் பார்க்காமல் மனம் போன போக்கில் நடந்து கொண்டு திரியும் உங்களுக்கே புகழ் கிடைக்கட்டும். எல்லாப் பெருமையும் உங்களுக்கே கிடைக்கட்டும். நல்ல குணத்தோடு இருந்து செம்மையாக நடந்து மேலான ஒழுக்கத்தோடு நடந்த அறத்தோடு நிற்கும் எமக்கே எல்லாப் பழியும் சேரட்டும், நரகமும் கிடைக்கட்டும் என்றும் வீடணன் எடுத்துக் கூறி விட்டு,

“அறத்தினைப் பாவம் வெல்லாது என்னும்
அது அறிந்து ஞானத்
திறத்தினும் உறும் என்று எண்ணித் தேவர்க்
கும் தேவை சேர்ந்தேன்
புறத்தினில் புகழே ஆக பழியொடும் புணர்க! போகச்
சிறப்பினிப் பெருக! தீர்க! என்றனன்
சீற்றம் இல்லான்”

வீடணன் எந்தவிதமான சீற்றமும் பதட்டமும் இல்லாமல் அமைதியான முறையில் அறத்தினைப் பாவம் வெல்லாது என்னும் உண்மையை அறிந்தும் அறிவுக்கும் அதுவே பொருந்தும் என்று புரிந்தும் இராமன் பக்கம் சேர்ந்துள்ளேன். அது புகழைக் கொடுத்தாலும் சரி, பழி ஏற்பட்டாலும் சரி, அதைப் பற்றிய கவலை எனக்கில்லை. உங்களுக்கே எல்லாச் சிறப்பும் இருக்கட்டும்,

கிடைக்கட்டும். அதோடு நிறுத்திக் கொள் என்று அமைதியாகக் கூறி முடித்துக் கொண்டான். மேலும் இந்திரசித்தன் வயதில் மிகச் சிறியவன். துடிப்புடன் வார்த்தை மாறிப் பேசுகிறான். எனவே சுருக்கமாகக் கூறி இதோடு நிறுத்திக் கொள் என்று வாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

வீடணனுடைய இந்த வார்த்தைகளில் அமைதியாகத் தரும நெறிகளை எடுத்துக் கூறுவதும் இந்திரசித்தனையும் இராவணனையும் அவர்களோடு சேர்ந்தவர்களையும் அறம் கூறித் திருத்த முடியாது என்றும் கருதி எப்படியும் ஆகட்டும் என்று மனம் நொந்து கூறுவதும் அடங்கியிருக்கிறது.

இந்திரசித்தனுக்கும் வீடணனுக்கும் நடைபெற்ற இந்த விவாதம் அரசியல் நெறிமுறை நீதிநெறி முறைக் கருத்துக்களையும் ஒழுக்க நெறிமுறைக் கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன. குலநெறியா அல்லது பொது நெறியா, குலப் பெருமையா அல்லது பொது ஒழுக்கமா, தனி ஆண்மையா அல்லது அறத்தின் நெறியா, மனம் போன போக்கில் செல்வதா அல்லது ஒரு குறிப்பிட்ட கட்டு திட்டத்தோடு வாழ்க்கை நெறி முறைகளை வகுத்துக் கொள்வதா என்னும் அரசியல் மற்றும் சமுதாய நெறிமுறைகள் பேசப் படுகின்றன.

இந்திரசித்தனிடம் இந்த நெறிமுறைகளைப் பற்றியும் தர்ம நியாயங்களைப் பற்றியும் பேசிப் பயன் இருக்குமா என்னும் சந்தேகம் ஒரு பக்கம் இருந்தாலும், தன்னைப் பழி கூறியதற்குப் பதிலளித்தும் உண்மை நெறிகளை எடுத்துக் கூறியும் சில விளக்கங்களைக் கூற வீடணன் முயற்சிக்கிறான். இந்திரசித்தன் கேட்ட கேள்விகளுக்கும் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக நேரடியாக பதில் இல்லாவிட்டாலும் பொது நெறியையும் அறத்தையும் எடுத்துக் கூறித் தன்னைத் தற்காத்துக் கொண்டும் தனது செய்கையில் உள்ள நியாயத்தையும் நிலை நாட்டுகிறான். அதே சமயத்தில் எதிர் தரப்பைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறான். கள்குடி, பொய்மை, மாயம், வஞ்சகம், காமம், கவறாடல் முதலிய பாவங்களை நீக்கி, அறம், மெய்ம்மை கற்புநிலை காத்து நிற்றல் தனி மனித ஒழுக்கம் ஆகியவைகள் வீடணன் மூலம் வலியுறுத்தப் படுகின்றன.

வீடணன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட இந்திரசித்தன்

கோபம் கொண்டு வீடணனைத் தாக்குகிறான். வீடணன் பதிலடி கொடுக்க, அதைத் தாங்க முடியாமல் நிகும்பலை யாகத்தையும் நடத்தவும் முடியாமல் இந்திரசித்தன் இலங்கை நகருக்குள் ஓடி விடுகிறான் என்பதைக் கம்பன் காட்டுகிறார்.

நிகும்பலை யாகக் களத்திலிருந்து யாகத்தை முடிக்க முடியாமல் இலங்கைக்கு ஓடிய இந்திரசித்தன் இராவணனிடம் போகிறான். தொடங்கிய வேள்வியை முடிக்க முடியாமல் வந்து விட்டாய் போல் தெரிகிறது. மிகவும் தளர்ச்சியுற்றுக் காணப்படுகிறாய். என்ன நடந்தது? என்று தனது அன்பு மகனிடம் இலங்கை வேந்தன் கேட்கிறான்.

இங்கு இந்திரசித்தன் தன் தந்தையிடம் கூறுவதும் அதற்கு இராவணன் பதில் கூறுவதும், கம்பனுடைய மகாகாவியத்தில் மிகுந்த கருத்துச் செறிவு நிறைந்த பகுதிகளில் ஒன்றாகும். இந்திரசித்தன் இராவணனுடைய தலை மகன். மூத்தவன் பட்ட மகிஷியான மண்டோதரி பெற்றெடுத்தவன். அந்த இந்திரசித்தன் இளைஞன். வேகமும் துடிப்பும் மிக்கவன். மிகுந்த வல்லமையும் நல்ல பயிற்சியும் பெற்றவன். மாயப் போர் வஞ்சகப் போர் உள்ளிட்ட பலவகைப் போர்க்கலைகளையும் கற்றவன். எல்லா வகைப் படைகளிலும் அஸ்திரப்பிரயோகங்களிலும் பயிற்சி பெற்றவன். தேவர்களையெல்லாம் வெற்றி கொண்டவன் இந்திரனையை வெற்றி கொண்டதால் இந்த மேகநாதன் இந்திரசித் என்னும் பட்டம் பெற்றவன். பஞ்சபூத சக்திகளையும் வென்று அவைகளை இலங்கை நகருக்கும் அரக்கர்களுக்கும் ஊழியம் செய்ய வைத்தவன். இந்திரசித்தன் பல போர்களிலும் வெற்றி கண்டவன். தோல்வி என்பதையே அறியாதவன். இலக்குவனையும் வானரப் படைகளையும் இருமுறை சூழ்ச்சி மூலம், மாயப் போர் செய்து வீழ்த்தினான். முதல் முறையில் நாக பாணத்தை மறைந்து நின்று ஏவி, இலக்குவனையும் இதர வானர வீரர்களையும் வீழ்த்தினான். கலுழன் மூலம் விஷம் நீக்கப்பட்டு அவர்கள் உயிர் பெற்று எழுந்தனர். இரண்டாம் முறை இந்திரசித்தன் மறைமுகமாக நின்று நான்முகன் படையைத் தொடுத்து இலக்குவனையும் மற்றும் வானரப் படை முழுவதையும் வீழ்த்தினான். இம்முறை மருத்துவ மலை கொண்டு வரப்பட்டு அதன் மூலம் இறந்தவர்கள் மீண்டும் உயிர் பெற்று எழுந்தனர்.

இந்திரசித்தன் இந்த இரு வெற்றிகளையும் வீரப்போர் மூலமாக மட்டுமல்லாது மாயப் போர் மூலமும் சாகசங்களின் மூலமும் வெற்றி தேடினான் என்றாலும் போர்க்களத்தில் வெற்றி பெற்றான் என்பது அவனுடைய சாதனையேயாகும்.

மூன்றாம் முறையாக இந்திரசித்தன் நிகும்பலை யாகம் செய்து யாராலும் வெல்ல முடியாத தனி பலத்தைப் பெற்றுப் போரிட முயன்றான். ஆனால் அந்த யாகத்தை அவனால் செய்ய முடியாமல் அவனை இலக்குவனும் மாருதியும் வானரப்படையும் வீடணனுடைய உதவியைக் கொண்டு தடுத்து விட்டனர். எனவே இந்திரசித்தன் புதிய பலம் பெற முடியவில்லை. இந்த மூன்று கட்டங்களிலும் இந்திரசித்தனுடைய வீரம், மாயம், போர்த்திறன், போர்த் தந்திரம், ஆயுதப் பிரயோகம் முதலியவற்றை முறியடிப்பதற்கு இராம இலக்குவர்களுக்கும், வானரப்படைகளுக்கும் வீடணன் பெரிய அளவில் உதவியாக இருந்துள்ளான். இராமனுடைய வெற்றிக்கு வீடணன் மிக முக்கியமான காரணமாகவும், கருவியாகவும் இருந்திருக்கிறான் என்பது இராமாயணக் கதையில் மிகுந்த அரசியல் முக்கியத்வம் நிறைந்ததாக இருந்திருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

சென்ற காரியத்தை முடிக்காமல் சோர்வுடன் வந்துள்ள காரணத்தை இராவணன் கேட்ட போது இந்திரசித்தன் சில உண்மைகளைத் தனது தந்தையிடம் கூறுகிறான்.

"சூழ் வினை மாய மெல்லாம் உம்பியே
துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி வெகுளியால்
எழுந்து வீங்கி
ஆள்வினை ஆற்றல் தன்னால் அமர்த் தொ
ழில் தொடங்கி ஆர்க்கும்
தாழ் விலாப்பபடைகள் மூன்றும் தொடுத்த
னென் தடுத்து விட்டான்."

"நிலம் செய்து விசும்பும் செய்து நெடிய
மால் படை நின்றானை,

வலம் செய்து போவதனால் மற்றினி வலிய
துண்டோ?
குலம் செய்த பாவத்தாலே கொடும் பழி தேடிக்
கொண்டாய்
சலம் செயின் உலகம் மூன்றும் இலக்குவன்
முடிப்பன் தானே”

“முட்டிய செருவில் முன்னம் முதல்வன் படையை
என்மேல்
விட்டிலன் உலகை அஞ்சி ஆதலால் வென்று
மீண்டேன்
கிட்டிய போதும் காத்தான் இன்னமும் கிளர
வல்லான்
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து
நின்றான்.”

நாம் செய்த மாய் மாலங்களையெல்லாம், வஞ்சகக் காரியங்களையெல்லாம், போர்த் தந்திரங்களையெல்லாம் உனது தம்பியாகிய வீடணன் துடைத்தெரிந்து விட்டான். வேள்வியையும் சிதைத்து விட்டான். நானும் தாழ் விலாப்படைகள் மூன்றையும் (நான்முகப்படை, திருமால் படை, பாசுபதப்படை) தொடுத்துப் பார்த்தேன். அவைகள் அனைத்தையும் இலக்குவன் தடுத்து விட்டான். திருமால் படை அவனைச் சுற்றி வலம் வந்து திரும்பி விட்டது. அதைக் காட்டிலும் வலுவான வேறுபடை நம்மிடம் இல்லை. நாம் நமது குலம் செய்த பாவத்தால் கொடும் பழியைத் தேடிக் கொண்டோம். இலக்குவன் மட்டுமே மூன்று உலகங்களையும் வெல்லும் வல்லமையைப் பெற்றிருக்கிறான். முன்பு உலகிற்கு அழிவு ஏற்பட்டு விடுமோ எனக் கருதி அவன் நான்முகன் படையை ஏவாமல் விட்டான். அதனால் தான் நான் முன்பு வெற்றியடைந்து திரும்ப முடிந்தது. இன்னும் வலுவுடன் போரிடுவதற்கு அவன் வல்லமை பெற்றிருக்கிறான் என்று கூறி ஆதலால்,

“அஞ்சினேன் என்று அருளலை, ஆசைதான்
அச்
சீதை பால் விடுவையாயின் அனையவர்
சீற்றம் தீர்வர்,

போத லும்புரிவர், செய்த தீமையும் பொறுப்
பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான் உல
கெலாம் கலக்கி வென்றான்''

இந்திரசித்தனை உலகெலாம் கலக்கி வென்றவன் என்று கம்பன் குறிப்பிடுகிறார். சீதையை விட்டு விடும்படி பலரும் சொன்னார்கள். கடைசியில் இப்போது இந்திரசித்தனும் அதைக் கூறி விட்டான். "நான் பயந்து விட்டேன் என்று கருத வேண்டாம். சீதையின் மேலுள்ள ஆசையை நீ விடுவாயாகில் அவர்களுடைய சீற்றம் தீரும். திரும்பிப் போய் விடுவார்கள். நீங்கள் செய்த தீமைகளையும் பொறுப்பர். உன்மீதுள்ள அன்பினால் இதைக் கூறினேன்'' என்று இந்திரசித்தன் கடைசிக் கட்டத்தில் தனது அனுபவத்தில் கிடைத்த படிப்பினையை மனதில் கொண்டு அடக்கமாகத் தனது கருத்தைத் தனது தந்தையிடம் தெரிவித்தான்.

இந்தக் காட்சி இராவணனுடைய அரசியலில் அவனுடைய ஆட்சியில் அவனது போர்க் களச் சூழ்ச்சியில் தனியாண்மை பெயராத கம்பீரத்தின் உச்ச கட்டமாகும். இறுதி கட்டமுமாகும். இந்திரசித்தனுடைய போர்த்திறன் இந்தப் போரில் ஒரு தீர்மானமான சக்தியாகும். இந்திரசித்தன் தனது இயல்பினால் பண்பட்ட பக்குவத்தால் சீதையைக் கைவிடுமாறு கூறவில்லை. தனது சொந்த அனுபவத்தில் பட்டறிவு பெற்று இராவணனுக்கும் இறுதிக்காலம் வந்து விட்டது என்று கவலை கொண்டு அந்தக் கருத்தினைக் கூறினான்.

இந்திரசித்தன் கூறியதைக் கேட்டு இராவணன் நகைத்தான். "உனக்குப் போர் செய்வதில் தயக்கம் ஏற்பட்டு விட்டது. மயக்கம் ஏற்பட்டு விட்டது. இனி நீ போருக்குப் போக வேண்டாம். நானே சென்று அந்த மனிதர்களைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறி மேலும் சொல்கிறான்.

"முன்னை யோர் இறந்தோர் எல்லாம் இப்
பகை முடிப்பர் என்றும்,
பின்னை யோர் நின்றோர் எல்லாம் வென்று
அவர்ப் பெயர்வர் என்றும்

உன்னை நீ அவரை வென்று தருதி என்று
உணர்தும் அல்லால்
என்னையே நோக்கி யான் இந்நெடும்
பகை தேடிக் கொண்டேன்"

இதற்கு முன்னர் போரிட்டு இறந்தவர்களெல்லாம் இப்பகை முடிப்பர் என்று நான் எதிர் பார்த்து நின்றதில்லை. அடுத்து இனி போர் செய்பவர்கள் வெற்றி பெற்று எனது ஆசையை நிறைவேற்றி விடுவார்கள் என்று நான் எதிர் பார்க்கவுமில்லை. நீ அவர்களை வென்று தருவாயாக என்று நான் உன்னைக் கேட்கவுமில்லை. என்னையும் எனது வலிமையையும் மட்டுமே ஆதாரப்பட்டு இந்த நெடும் பகையைத் தேடிக் கொண்டேன் என்று இராவணன் கூறியதைக் கம்பன் மிக அற்புதமாகத் தனது கவிதையில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். மேலும் இராவணன் கூறுகிறான்.

"பேதமை உரைத்தாய் பிள்ளாய் உலகெலாம்
பெயரப் பேராக்
காதை என் புகழி னோடும் நிலை பெற
அமரர் காண
மீதெழு மொக்குள் அன்ன யாக்கையை விடு
வது அல்லால்
சீதையை விடுவது உண்டோ? இருபது திண்
தோள் உண்டால்"

"நீ சிறு பிள்ளைத் தனமாகப் பேசி விட்டாய். என்னுடைய கதை உலகப் புகழ் பெறும். என்னுடைய புகழோடு இணைந்து அது நிலைபெறும். என் உயிரினையேனும் விடுவேனேயல்லாது எனது இருபது தோள்கள் இருக்கும் வரை சீதையை விட மாட்டேன்" என்றான் மேலும் கூறுகிறான்,

"வென்றிலேன் என்ற போதும் வேதம் உள்ள
ளவும் யானும்
நின்றுளேன் அன்றோ மற்ற இராமன்
பேர் நிற்கு மாயின்
பொன்றுதல் ஒரு காலத்துத் தவிருமோ?
பொதுமைத் தன்றோ?

இன்றுளார் நாளை மாள்வார்? புகழுக்கு
இறுதியுண்டோ?"

நான் போரில் வெற்றி கொள்ளவில்லையென்றாலும் வேதம் உள்ளளவும் இராமன் பெயர் நிற்குமாயின் என் பெயரும் நிலைத்து நிற்கும். இறப்பு என்பது எல்லோருக்கும் எப்படியும் வந்தே தீரும். இன்றிருப்பவர் நாளை மாண்டு போகலாம். அது எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் புகழுக்கு இறுதியில்லை, முடிவில்லை என்று ஒரு தனியான தத்துவக் கருத்தை கூறி விட்டு,

"சொல்லியென் பலவும் நீ நின் இருக்கையைத்
தொடர்ந்து தோளில்
புல்லியப்பகழி வாங்கிப் போர்தொழில்
சிரமம் போக்கி
எல்லியும் கழுத்தி என்னா எழுந்தனன் எழுந்து
பேழ் வாய்,
வல்லியம் முனிந்தால் அன்னான் வருக
தேர் விரைவில் என்றான்"

இதெல்லாம் பேசி என்ன பயன்? நீ உனது ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு ஓய்வு எடுத்துக் கொள்வாய் என்று கூறி விட்டு வேங்கை போல் சீறி எழுந்து தேரைக் கொண்டு வா என ஆணையிட்டு போருக்குப் புறப்படத் தயாரானான். அப்போது இந்திரசித்தன் மனம் வருந்தி எந்தாய் ஒழிந்தருள் சீற்றம் சொன்ன உறுதியைப் பொருத்தி யான் போய்க் கழிந்தனன் என்ற பின்னர் நல்லவா காண்டி என்று கூறிவிட்டு அவனுடைய தெய்வத்தேர் மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டான்.

"படைக்கல விஞ்சை மற்றும்
படைத்தன பலவும் தன்பால்
அடைக்கலம் என்ன ஈசன்
அளித்தன தேர் மேல் ஆக்கி
கொடைத் தொழில் வேட்டோர்க்கெல்லாம்
கொடுத்தனர் கொடியோன் தன்னைக்
கடைக்கணால் நோக்கி
இரு கணீர் கலுழப் போனான்."

இவ்வாறு இந்திரசித்தன் வீரத்துடன் தனக்கு ஈசன் கொடுத்த தேர் மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டான். பலவித மாயங்களையும் செய்து போர் செய்தான். தரையிலிருந்தும் ஆகாயத்தில் இருந்து கொண்டும், மறைந்து நின்றும் மாயமாக நின்றும் போர் செய்தான். அவன் செய்த மாயங்களைப் பற்றியெல்லாம் விடணன் இலக்குவனுக்கு எடுத்துக் காட்டி உதவி செய்தான்.

"தேரினைக் கடாவி வானில் செல்லினும்
செல்லும் செய்யும்
போரினைக் கடந்து மாயம் புணர்க்கினம்
புணர்க்கும் போய் அக்
காரினைக் கடந்து வஞ்சம் கருதினும் கருதும்
காண்டி
வீர மெய்ப் பகலின் அல்லால் விளிகிலன்
இருளின் வெய்யோன்"

வானில் செல்வான், மாயம் செய்வான், போர் நெறி முறைகளை மீறி வஞ்சகம் செய்தும் போர் செய்வான். இவனை இரவில் வெல்ல முடியாது. பகலில்தான் இறப்பான் என்றும்,

"ஆர் அழியாத சூலத்து அந்தணன் அருளின் ஈந்த
தேர் அழியாத போதும் சிலை காத்து இருந்த போதும்
போர் அழியான் இவ்வெய்யோன் புகழ் அழியாத
பொற்றோள்
வீர, இது ஆணை என்றான் வீடணன் விளை
வது ஓர்வான்."

நான் முகனும், சிவனும் கொடுத்த வலுவான படைக் கலன்களையும் தேரினையும் கொண்டவன், அந்த ஆயுதங்களையும் தெய்வ தேரினையும் மிகவும் திறமையுடன் பயன்படுத்தி போர் புரியவல்லவன் என்றும் இந்திரசித்தனுடைய போர்த் திறன்களைப் பற்றிய இரகசியங்களையெல்லாம் வீடணன் இலக்குவனுக்கு எடுத்துக் கூறுகிறான். இவையெல்லாம் இலங்கை அரசியலின் ஒரு பகுதியாகும் என்பது கம்பன் கவிதைகளிலிருந்து நமக்குப் புலப்படுகிறது.

வீடணன் எடுத்துக் கூறிய, சொல்லிக் காட்டியுள்ள விவர –ங்களை வைத்து இந்திரசித்தனுடைய போர்த் தந்திரங்களின் இரகசியங்களை அறிந்து கொண்டு அவனை இலக்குவன் வெற்றிகரமாகச் சமாளித்துப் போரில் வெற்றி கண்டான். இந்திரசித்தன் போர்க்களத்தில் இலக்குவனுடைய கணைகளுக்குப் பலியானான்.

இலக்குவன் இந்திரசித்தன் மீது இராமன் பெயரிலான பிறைக் கணையை ஏவினான். அந்த வல்லமை மிக்கப் பிறைக் கணைச் சிவனுடைய வேல் படையையும் நான்முகன் படையினையும் நாண வைத்து இந்திரசித்தனுடைய சிரத்தைத் தள்ளியது என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

“மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற்
பால,
இறையவன் இராமன் என்னும் நல்லற மூர்த்தி
என்னின்,
பிறை எயிற்று இவனைக் கோறி என்று ஒரு
பிறைவாய் வாளி
நிறை உறவாங்கி விட்டான் உலகெலாம்
நிறுத்தி நின்றான்.”

“நேமியும் குலிச வேலும் நெற்றியின் நெருப்புக்
கண்ணான்
நாமவேல் தானும் மற்றை நான்முகன் படை
யும் நாணத்
தீமுகம் கதவ ஓடிச் சென்று அவன் சிரத்தைத்
தள்ளிப்
பூமழை வானோர் சிந்தப் பொலிந்தது அப்
பகழிப் புத்தேள்.”

இந்திரசித்தன் மரணத்தையொட்டி இலங்கையின் அரசியலில் இராம இராவணப் போரில் அப்போரின் தந்திரங்களில் உபாயங்களில் ஒரு முக்கியமான கட்டம் முடிவுற்றது எனக் கூறலாம்.

தனது மகன் மாண்ட செய்தி கேட்டு இராவணன் மிகுந்த சோகமடைந்தான்.

"மைந்தவோ எனும் மாமகனே எனும்
எந்தையோ எனும் என் உயிரே எனும்
முந்தினேன் உனை நான் உளனே எனும்
வெந்த புண்ணிடை வேல் பட்ட வெம்மையான்"

என்று இராவணன் புலம்புகிறான். போர்க்களத்திற்குச் சென்று தன் மகனின் உடலை எடுத்துக் கொண்டு இலங்கை நகருக்குள் வந்தான். உனது வல்லமையால் நினைத்ததை முடித்து வெற்றி பெற்ற நான் இப்போது நீ எனக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடனை நான் உனக்குச் செய்ய வேண்டிய தாயிற்றே என்று புலம்புகிறான்.

"சினத்தோடும் கொற்றம் முற்ற இந்திரன் செல்
வம் மேவ
நினைத்தது முடித்து நின்றேன் நேர் இழை
ஒருத்தி நீரால்
எனக்கு நீ செயத் தக்க கடன் எல்லாம் ஏங்கி
ஏங்கி
உனக்கு நான் செய்வது ஆனேன் என்னின்
யார் உலகத்து உள்ளார்"

என்பது கம்பன் கவிதையாகும்.

இந்திரசித்தனின் உடல் மீது விழுந்து மண்டோதரி புலம்புகிறாள். சீதை தானே இத்தனைக்கும் காரணம் என்று இராவணனுக்குக் கடுங்கோபம் ஏற்படுகிறது. சீதையைக் கொல்வேன் என்று வாளை உறுவிக் கொண்டு ஒடுகிறான். அப்போது முதலமைச்சன் மகோதரன் அவனைத் தடுத்து "உனது புகழுக்கு இது நல்லதன்று" என்று எடுத்துக் கூறி இராவணனைத் தடுத்து நிறுத்தினான்.

இங்கு மகோதரன் சில முக்கிய அரசியல் நெறிகளையும் பொது நெறிகளையும் எடுத்துக் கூறுவதைக் கம்பன் மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுகிறார்.

"நீர் உள தனையும் சூழ்ந்த நெருப்புள தனை
யும் நீண்ட

யார் உள தனையும் வானப்பரப்புள் தனை
யும் காலின்,
போர் உள தனையும் பேராப்பெரும் பழி பிடி
த்து போலாம்
போர் உள தனையும் வென்று புகழ் உள
தனையும் உள்ளாய்"

நீரும் நிலனும் நெருப்பும் காற்றும் வானமும் உள்ளளவும் உனக்குத் தீராத பழி உண்டாகி விடும் படியான ஒரு காரியத்தை நீ செய்தல் கூடாது.

"மங்கையைக் குலத்துளாளைத் தவத்தியை
முனிந்து வாளால்
சங்கை ஒன்று இன்றிக் கொன்றால் குலத்
துக்கேதக்கான் என்று
கங்கை அம் சென்னியானும் கண்ணனும்
கமலத் தோனும்
செங்கையும் கொட்டி உன்னைச் சிரிப்பால்
சிறியன் என்னா"

தவத்தில் அமர்ந்திருக்கும் மங்கையை எந்தவிதமான சங்கையும் இன்றி நீ கொல்வாயானால் சிவனும், திருமாலும் நான்முகனும் கூட நீ அற்பமானவன் என்று கைகொட்டிச் சிரிப்பார்கள் என்றும்,

"நிலத்தின் இயல்பு அன்று வான்நெறி அன்று
நீதி அன்று
தலத்து இயல்பு அன்று மேலோர் தரும மேல்
அதுவும் அன்று
புலத்தியன் மரபின் வந்து புண்ணிய மரபு
பூண்டாய்,
வலத் தியல்பு அன்று மாயப் பழி கொடு மருகு
வாயோ?"

உலகியல்பு, வான் உலக நெறி, நீதிநெறி தனது நாட்டு நெறி, மேலோர் தரும நெறி முதலிய அனைத்திற்கும் எதிரான ஒரு செயலை

நல்ல பெருமை மிக்க குலத்தில் பிறந்த நீ செய்யக் கூடாது. அதனால் மீளாத பழி வந்து சேரும். இவ்வாறான பொது நெறி மற்றும் அரசியல் நெறிகளை எடுத்துக் கூறியும் அத்துடன் குலப் பெருமையையும் எடுத்துக் கூறியும் தகாதன செய்தல் நன்று அன்று என்றும் முதலமைச்சன் மகோதரன் அறிவுறுத்துகிறான். கடைசியில் இராவணனுடைய உள்ளத்தில் உள்ள ஆசைகளையும் கிளரி விட்டு நீ போருக்குப் போய் இராமனை வென்று வெற்றியுடன் இலங்கை நகருக்குத் திரும்பி வரும் போது சீதை இங்கு இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்காது என்றும் எடுத்துக் கூறுகிறான். அதைக்கம்பன் மிகவும் நயமாகத் தனது கவிதைகளில் குறிப்பிடுகிறார்.

"இன்று நீ இவளை வாளால் எறிந்து போய்
இராமன் தன்னை
வென்று மீண்டு இலங்கை மூதூர் எய்தினை
வெதும் புவாயோ?
பொன்றினன் சீதை, என்றே போவார்கள்
அவர்தாம் அல்லால்
வென்றிட முடியாது என்னும் வீரமோ விளம்
பல் என்றான்."

எனவே உனக்கு அவர்களைப் போரில் வெல்ல முடியாது என்னும் எண்ணம் வந்து விட்டதா? அது வீரம் தானா? என்று தன்மானத்தையும் குத்தி விட்டுச் சீதையைக் கொல்லும் எண்ணத்தைக் கைவிடக் கோரினான் முதலமைச்சன் மகோதரன்.

"என்னலும் எடுத்த கூர்வாள் இரு நிலத்து
இட்டு மீண்டு
மன்னவன் மைந்தன் தன்னை மாற்றலர்
வலிதின் கொண்ட
சின்னமும் அவர்கள் தங்கள் சிரமும் கொண்டு
அன்றிச் சேர்கேன்
தொல் நெறித் தைலத்தோணி வளர்த்துமின்?
என்னச் சொன்னான்"

இவ்வாறு இராவணன் சீதை மீதான கோபம் தணிந்துப் போருக்குத் தயாரானான்.

இங்கு இராவணனுடைய சிந்தனைப் போக்கில் ஒரு முக்கியமான செய்தியைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திரசித்தன் போர்க்களத்தில் கொல்லப் பட்டான் என்று கேள்விப் பட்டவுடன் இராவணன் உணர்ச்சி வேகப்பட்டுச் சீதையைக் கொல்வேன் என்று வாளை உறுவுகிறான். பொதுவாக அரசியல் தலைமையில் உள்ளவர்களிடம் அதிகாரவர்க்க தோரணையும், தன்ன கங்காரப் போக்கும் நிலவுமானால் அவர்களுடைய அரசியல் வழி முறையும் புற நிலையாக உண்மை நிலைக்கு உட்பட்டதாக அமையாது. அதில் அகநிலை (தன்னிலை) உணர்வே ஆதிக்கம் செலுத்தும், மேலோங்கி நிற்கும், எனவே அவர்களும் கூட உணர்ச்சி வசப்படுவார்களானால் அதனால் வேண்டத்தகாத கீழ் நிலையிலான விளைவுகளே ஏற்படும்.

இராவணனிடம் இந்திரசித்தன் சீதையை விட்டுவிடும்படி கூறியபோது அவன் உயர்ந்தத் தத்துவ நிலையில் பேசினான். சீதையை விட்டு விடும்படி இலங்கையில் பலரும் இராவணனிடம் எடுத்துக் காட்டியுள்ளார்கள். மாலியவான், வீடணன், கும்பகருணன், கடைசியாக இந்திரசித்தனும் கூறினான். இதில் ஒவ்வொரு கட்டத்திலும் இராவணனுடைய உணர்வு நிலை சீதையின் பால் உள்ள ஆசை குறையவில்லை. மற்றவர்கள் கூறிய அறிவுரைகளை இராவணன் ஏற்கவில்லை. ஆயினும் தொடர்ச்சியாக இராவணன் அணிக்குத் தோல்விகள் ஏற்பட்ட போது அத்துடன் இந்திரசித்தனும் கொல்லப்பட்ட போது தனது தோல்வி நிச்சயம் எனத் தெரிந்த போது உணர்ச்சி வசப்பட்டுச் சீதையைக் கொல்லக் கைவாளை உறுவுகிறான். அந்த நேரத்தில் முதலமைச்சன் மகோதரனுடைய தலையீடு முக்கியமாக அரசியல் தன்மை கொண்டதாகப் புறநிலையான சிந்தனை கொண்டதாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

மகோதரன் இராவணனுடைய முதல் அமைச்சன் என்னும் முறையில் இலங்கையின் அரசியலில் மிகுந்த செல்வாக்கு உள்ளவன். இராவணனுடைய சிந்தனை அலைகளுக்கும், இலங்கையின் கௌரவத்திற்கும் அந்தஸ்திற்கும் இணையாக, இசைவாக இராவணனுக்கு ஆலோசனை கூறுவதில் மகோதரன் இலங்கைக்கு ஏற்ற சிறந்த அமைச்சனாகவே இருந்து வந்துள்ளான். எனவே கடைசி வரைப் போரை நடத்தி அதன் வெற்றி தோல்விகளைப்

பற்றிக் கவலைப் படாமல் இலங்கையின் தனியாண்மையை கௌரவத்தை நிலை நிறுவத்துவதே அவனுடைய சிந்தனைப் போக்காக இருந்து வந்திருக்கிறது. அந்த வழியில் இராவணனுடைய சிந்தனைச் சிதரலையும் கூடத் தடுத்து இலங்கைப் போரைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கு மகேந்திரனுடைய முயற்சி இருந்து வந்திருக்கிறது.

## மூலபலர் படை

இலங்கையின் அரசியலில் அதனுடைய கோட்டை ,கொத்தளம், படைபலம், ஆகியவற்றில் அதன் தற்காப்பு மற்றும் தாக்குதல் சக்தியின் மிகவும் முக்கியமான அங்கமாக இருப்பது அதனுடைய மூல பலப்படைப் பிரிவாகும். இதர படை பலங்கள் எல்லாம் குறையும் போது அல்லது போதாதபோது கடைசியாகப் போர்க் களத்திற்கு வருவது மூலபலப்படையாகும். அது மிகவும் வல்லமை மிக்கதும் தனிப் பயிற்சிகள் பெற்றதும் பயங்கரமானதுமாகும். அது சிறப்பான பல பயிற்சிகளையும் பெற்றுள்ள சிறப்புப் படையாகும். பல பயங்கரமான சக்திமிக்க ஆயுதங்களைக் கொண்டதாகும். இந்த மூலபலப்படையைப் பற்றிக் கம்பன் மிகவும் சிறப்பாக விளக்கிக் கூறுகிறார்.

இராவணன் தனது மூலபலப்படையைத் திரட்டுகிறான். மூலபலப் படைத் தளபதிகளும், வன்னி என்னும் மூலபலப்படையின் தலைமைத் தளபதியும், முதுமகன் மாலியவானும் மற்றும் சில பிரதானிகளும் கூடி, ஆலோசனை செய்கின்றனர். இது அநேகமாகக் கடைசி கட்ட ஆலோசனையாக இருக்கிறது. மாலியவான், வன்னியிடம் இதுவரை நடந்த விவரங்களைக் கூறுகிறான். கும்பகருணனும், அதிகாயனும், இந்திரசித்தனும் மற்ற வீரர்களும் மடிந்ததும், வானரப்படை போரில் வீழ்ந்தும் மீண்டும் மருத்துவ மலையால் உயிர் பெற்று எழுந்ததும் விதியால் விளைந்தது என்று கூறுகிறான். இந்த விதியின் விளைவு இயற்கையில் ஏற்பட்டதல்ல. சீதையென்னும் கற்புடைப் பத்தினி பொருட்டால் ஏற்பட்டிருக்கிறது. அது தவிர்க்கப் பட்டிருந்தால் இத்தனை சேதங்கள் ஏற்பட்டிருக்காது என்று மாலியவான் கூறுகிறான்.

இந்தக் கருத்துக்களைக் கேட்ட பின்னர் இராவணன் மீண்டும் கூறுகிறான் முதுமகன் கூறியபடி சீதையை விட்டு விடுவதானால்

அதைத் தொடக்கத்திலேயே செய்திருக்க வேண்டும். இத்தனையும் நடந்த பின்னர் இனி விடுவது என்பது சரியுமல்ல, சாத்தியமுமல்ல என்று கூறுகிறான்.

இராவணனுடைய சொற்களில் பழைய வேகம் இல்லை. ஆயினும் பிடிவாதம் குறையாமல் முன் வைத்த காலைப் பின் வாங்க முடியாது என்னும் தனியாண்மை நிலையில் மானப் பிரச்னை அல்லது கவுரவப் பிரச்னையாகவே போரைத் தொடருகிறான் என்பதைக் கம்பன் பாடல் மிக்க நயமாக எடுத்துக் காட்டுகிறது.

“மூதுணர்ந்த இம்முது மகன் கூறிய முயற்சி
சீதை என்பவள் தனை விட்டு அம்மனிதரைச் சேர்தல்
ஆதியின் தலை செயத்தக்கது, இனிச் செயல் அழிவால்
காதல் இந்திர சித்தைமாய் வித்தல் கண்டும்”

என்றும்,

“விட்டம் ஆயினும் மாதினை வெம் சமம் விரும்பிப்
பட்ட வீரரைப் பெருகிலம், பெறுவது, பழியால்
முட்டி மற்றவர் குலத்தொடும் முடிக்குவது அல்லால்
கட்டம் அத்தொழில் செருத்தொழில் இனிச்
செயம் கடமை”

என்றும் இராவணன் கூறுகிறான்.

இவ்வாறு கூறி இராவணன் இறுதிப் போருக்கு தயாராகிறான். தனது சக்திமிக்க மூலபலப்படையைத் திரட்டுகிறான். இது இராவணனுடைய போர்த் தந்திரத்தின் முற்றிய கட்டமாகும். மூலபலப் படையைப் பற்றி அதன் சக்தி, போர்க்குணம், இயல்பைப் பற்றிக் கம்பன், கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

“அறத்தைத்தின்று, அருங்கருணையைப் பருகி
வேறு அமைந்த
மறத்தைப் பூண்டு வெம்பாவத்தை மணம்
புணர் மணாளர்
நிறத்துக்கார் அன்ன நெஞ்சினர் நெருப்புக்கு
நெருப்பாய்ப்

புறத்தும் பொங்கிய பங்கியர் காலனும்
புகழ்வார்"

"சூலம வாங்கிடின், சுடர்மழு ஏந்திடின்
சுடவர் வாள்
கோலம் வெம்சிலை பிடித்திடின் கொற்ற
வேல் கொள்ளின்
சாரவான் தண்டு தரித்திடின் சக்கரம்
தாங்கின்
காலன். மால், சிவன், குமரன் என்று இவ
ரையும் கடப்பர்."

அறத்தைத் தின்று கருணையைப்பருகி, மறத்தைப் பூண்டு, பாவத்தை மணந்து நிற்பவர். இருண்ட நெஞ்சம் கொண்டவர், நெருப்பைப் போன்றவர்கள், நீண்ட மயிர்கள் தொங்கும் பயங்கரமான தோற்றத்தைக் கொண்டவர்கள், காலனே இவர்களைக் கண்டு புகழ் பாடுவான் என்றும்,

சூலம், மழு, வாள், வில், வேல், கதை, நீண்ட தடிகள், சக்கரம் முதலிய பல பயங்கரமான கொலை ஆயுதங்களைத் தாங்கி நிற்பவர்கள். காலனையும், திருமாலையும் சிவனையும் முருகனையும் கூட வெல்லும் சக்தி படைத்தவர்கள், என்றெல்லாம் மூலபலப் படையின் தோற்றத்தையும், ஆயுத பலத்தையும் வலுவையும் பற்றிக் கம்பன் தனது பாடல்களில் குறிப்பிடுகிறார்.

இத்தகைய கோரமான பயங்கர வடிவம் கொண்ட மூலபலப்படை திரண்டு வருகிறது. இதைக் கண்டு வானரப்படை நடுநடுங்கி ஓட்ட மெடுத்தது. அனுமன், அங்கதன், சுக்கிரீவன் தவிர மற்றவர்களெல்லாம் பயந்து ஓடி விட்டதாகக் கம்பன் கூறுகிறார். புற்றிலிருந்து பாம்பு வந்த போது அதைக் கண்ட எலிகள் பயந்து ஓடுவதைப் போல மூலபல அரக்கர் படையைக் கண்டு வானரர்கள் பலதிசைகளிலும் பயந்து ஓடினர் என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இத்தகைய பெரிய வலிய படை எங்கிருந்து வந்தது? இது பற்றிய விவரம் என்ன? என்று இராமன் வீடணனைக் கேட்க, அவன் அம்மூலபலப்படையின் இரகசியத்தையும் அதை வெல்லும் வழியைப் பற்றியும் இராமனுக்கு எடுத்துக் கூறுகிறான்.

"ஈண்டு இவ்வண்டத்துள் இராக்கதர் எனும்
 பெயரெல்லாம்
மூண்டு வந்தது தீவினை முன்னின்று முடுக்க
மாண்டு வீழும் இன்று என்கின்றது என் மதி
 வல ஊழ்
தூண்டுகின்றது என்று அடிமலர் தொழுது
 அவன் சொன்னான்"

பின்னர் பயந்து ஓடிய வானரப்படை வீரர்களைத் திரும்ப அழைக்கும்படி இராமன் அங்கதனிடம் கூறினான். அங்கதன் சென்று அழைத்த போது வானரப்படைகள் பயந்து நடுங்கி வர மறுக்கின்றனர். இது கம்பனுடைய மகாகாவியத்தில் மிக அருமையானதொரு காட்சியாகும்.

நமது நாட்டு மக்கள் இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று நாட்டில் நடக்கும் எந்த ஆட்சியைப் பற்றியும் கவலைப் படாமல் கொடுங்கோல் மன்னர்களையும் சகித்துக் கொண்டு வாய் பொத்தி இருப்பார்கள் என்று ஒரு பழமொழி உண்டு. இக்கருத்துக்கான ஊற்றாக அங்கதன் அழைத்த போது வானரப்படை கூறிய பதில் அமைந்திருக்கிறது. "அனுமனுடைய ஆற்றலும், நமது மன்னன் சுக்கிரீவனுடைய ஆற்றலும், இராமன் இலக்குவன் ஆகியோர்களுடைய வில்லாற்றலும் எங்களைக் காப்பதற்குப் போதாது. எங்களுக்கு ஏன் இந்த வம்பு? நாங்கள் ஏன் இந்த சண்டையிலே சாக வேண்டும்? எங்கள் உணவுக்குக் காடுகளிலும் மலைகளிலும் கனிகளும் காய்களும் உள்ளன. தங்குவதற்கு மரங்களும் குகைகளும் உள்ளன. இந்த உலகை யார் ஆண்டால் என்ன? மனிதர்கள் ஆண்டால் என்ன? அரக்கர்கள் ஆண்டால் என்ன? எங்களைப் போர்க்களத்திற்குச் சென்று சாவுங்கள் என்று கூறுவது தருமம் அல்ல" என்று வானரங்கள் கூறுவதாகக் கம்பனுடைய பாடல் எடுத்துக் காட்டுகிறது.

"அனுமன் ஆற்றலும், அரசனது ஆற்றலும்
 இருவர்
தனுவின் ஆற்றலும் தம் உயிர் தாங்கவும் சாலா

கனியும் காய்களும் உணவுள, முழை உள
காக்க,
மனிதர் ஆளின் என்? இராக்கதர் ஆளின்
என் வையகம்?"

என்பது கம்பனுடைய ஒரு அருமையான ஒரு அற்புதமான கவிதையாகும்.

உலகில் சாதாரண மக்களில் பலரும் அரசியல் பிரச்னைகளில், அரசியல் விவகாரங்களில் நடவடிக்கைகளில் போதுமான அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் நாம் இருவகையில் காணலாம்.

முதலாவதாக, இருநாடுகள், அல்லது பல நாடுகளுக்கிடையில், அரசர்களுக்கிடையில், ஆக்கிரமிப்பு நோக்கத்திலோ, அரசர்கள் தங்கள் சொந்த கவுரத்திற்காகவோ, பெருமைக்காகவோ, தங்கள் வீரப் பிரதாபங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்காகவோ, தங்கள் ஆட்சி எல்லைகளை விரிவு படுத்திக் கொள்வதற்காகவோ சண்டை போட்டுக் கொண்டால், போர்களை நடத்திக் கொண்டால், அதில் சாதாரண மக்களுக்கு என்ன இலாபம் இருக்கிறது? இன்னும் கூறப் போனால், அவர்களுக்கு அத்தகைய போர்களால் துன்ப துயரங்களும், நாடுநகர நாசங்களும் உழைப்பால் பெருகிய செல்வங்களின் அழிவுகளும் தான் அதிகரிக்கும். எனவே அத்தகைய போர்களில் மக்களுக்கு அக்கறையில்லாமல் போவதும் அத்தகைய அரசியலிலும் ஆட்சியிலும் மக்களுக்கு அக்கரையில்லாமல் போவதும் நீண்ட நாட்களாக மக்களிடையில் செய்வதறியாமல் பதிந்து விட்ட மந்த நிலையாகும்.

அடுத்த படியாக ஒரு நாட்டின் சுதந்திரத்திற்காக, நாட்டு மக்களின் விடுதலைக்காக, அல்லது அன்னிய நாடுகளின் அடுத்த நாடுகளின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்து அல்லது ஒரு தருமத்தை ஒரு நியாயத்தை நிலை நாட்டுவதற்காக நடைபெறும் அரசியல் விவகாரங்களில் கிளர்ச்சிகளில் போராட்டங்களில் போர்களில் மக்கள் மந்தமாக அக்கரையில்லாமல் இருக்கக் கூடாது என்பதும் அத்தகைய போராட்டங்கள், போர்களிலிருந்து மக்கள் விலகிச் செல்லக் கூடாது, அதில் மக்களின் மந்த நிலை கூடாது, அம்மந்த நிலையைப் போக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டவும் வேண்டியதாகிறது.

இராமாயணப் பெருங்கதையில் இராமன் பாவங்களையும் அதர்மத்தையும் எதிர்த்து, தர்மத்தைக் காக்கவும் நிலை நிறுத்தவும் தலைமையேற்று நடத்தும் யுகப் போராட்டத்தில் எந்தச் சூழ்நிலையிலும் சாதாரண மக்கள் விலகிப் போவது என்பதோ அக்கரை காட்டாமல் மந்தமாக இருப்பது என்பதோ கூடாது என்பதைச் சுட்டிக் காட்டவும் அதுவும் எதிர் காலத்திற்கான படிப்பினையாகக் கொள்ள வேண்டியதையும் சுட்டிக்காட்டவும் வேண்டியதாகிறது.

இராமனுடைய பிறப்பின் இலட்சியம் பற்றி,

"அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து
அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூணச் செந்நெறி
செலுத்தித் தீயோர்
இறந்து உக நூறித்தக்கோர் இடர் துடைத்து
ஏக, ஈண்டுப்
பிறந்தனன், தன் பொன் பாதம் ஏத்துவார்
பிறப்பு அறுப்பான்"

என்று அனுமன் குறிப்பிட்டுள்ளதை ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளோம்.

எனவே ஒரு தரும யுத்தத்தில் ஒதுங்கிப் போவது சரியாகாது என்னும் அரசியல் நீதியை வலியுறுத்தும் முறையிலேயே கம்பன் உலக மக்களிடையே உள்ள "யார் ஆண்டாலென்ன? என்னும் மனோ பாவத்தை இலைமறைவு காயாக சுட்டிக் காட்டியுள்ளார்.

அதர்மத்தை எதிர்த்து தர்மத்தை நிலை நாட்டுவதற்கான போராட்டத்தில் பாரத மக்கள் ஊக்கத்துடன் கலந் கொள்வதைக் குறிக்கும் வகையிலேயே பாரதி,

"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய் – அவர்
அல்ல வர்களாயின் அவரை விழுங்கி
ஆனந்தக் கூத்திடுவாள்"

என்று பாரதி நமது நாட்டு மக்களின் மரபு வழியிலான இயல்பை நமது நாட்டின் சாத்திரங்களின் நேர் ஆக்க வழி காட்டலைச் சுட்டிக் காட்டுவதைக் காணலாம்.

வானரப் படை பயந்திருந்த நிலையில் அவர்களுடைய பயத்தைப் போக்கி அவர்களுக்குரிய பாதுகாப்பு கொடுக்க வேண்டியதும் அவசியம் எனக்கருதி அருளின் ஆழியான் கருணைக்கடல் இராமபிரான், இலக்குவனையும் அவனுக்குத் துணையாக வீடணனையும் மற்றும் சுக்கிரீவன் அனுமன் ஆகியோரையும் வானரப் படையைக் காக்கச் சொல்லிவிட்டு தானே போர்க் கோலம் பூண்டு மூல பலப்படையை எதிர்த்தான்.

"வில்லினைத் தொழுது வாங்கி ஏற்றினான்
வில் நாண் மேருக்
கல் எனச் சிறந்ததேயும், கருணை அம் கடலே
அன்ன
எல்ஒளி மார்பில் வீரக்கவசம் இட்டு இழை
யா வேதச்
சொல் எனத் தொலையா வாளித் தூணியும்
புறத்துத் தூக்கி"

என்று இராமபிரானே போர்க்கோலம் பூண்டு மூலபலப்படையைச் சந்திக்க/ களம் சென்றதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

மூலபலப்படைகள் மீது இராமன் தனது சக்திக் கணைகளை ஏவி, அவர்களை ஒருவருக்கொருவர் மோதவிட்டு அவர்கள் அனைவரையும் வெற்றிகரமாக வீழ்த்தினான். மூலபலப்படையின் அழிவைப் பற்றிக் கம்பன்,

"வஞ்சவினை செய்து, நெடுமன்றில் வளம்
உண்டு கரி பொய்க்கும் மறம் ஆர்
நெஞ்சம் உடை யோர்கள் குலம் ஒத்தனர்
அரக்கர், அறம் ஒக்கும் நெடியோன்
நஞ்ச நெடு நீரினையும் ஒத்தனன்

அடுத்து அதனை நக்கினாரையும்
பஞ்சம் உறு நாளில் வறி யோர்களையும்
~~A WeLY T Y ÖY.~~"

"ஊன் ஏறு படக்கை வீரர் எதிர் எதிர் உருவ
ந்தோறும்
கூன் ஏறு சிலையும் தானும் குதிக்கின்ற
கடுப்பின் கோட்பால்
வான் ஏறினார்கள் தேரும், மலைகின்ற
வயவர் தேரும்
தான் ஏறி வந்த தேரே ஆக்கினான் தனி
ஏறு அன்னான்"

என்று கூறுவார். அத்துடன்,

"ஆயிர வெள்ளத்தோரும் அடுகளத்து
அவிந்து வீழ்ந்தார்
மாயிறு ஞாலத்தாள் தன்வன் பொறைப்பா
ரம் நீங்கி
மீ உயர்ந்து எழுந்தாள் அன்றே வீங்
கொலி வேலை நின்றும்
போய் ஒரு கண்டத்தோடும் கோடி யோசனை
கள் பொங்கி"

என்று மூலபலப்படையின் அழிவைப்பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறார். இந்த நாசப்படைகளை அழித்த இராமபிரானை அனைவரும் பாராட்டுகிறார்கள். வாழ்த்தி வணங்குகிறார்கள்.

"தாய் படைத்துடைய செல்வம் ஈகென
தம்பிக்கு ஈந்து
வேய் படைத்துடைய கானம் விண்ணவர்
தவத்தின் மேவி
தோய் படைத் தொழிலால் யார்க்கும் துயர்
துடைத்தானை நோக்கி
வாய் படைத்துடையார் எல்லாம் வாழ்த்
தினார் வணக்கம் செய்தார்."

மூலபலப்படை வதம் செய்யப்பட்டது என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல. அல்லது அது வெறும் ஒரு அசாதாரணமான போர்க்கள நிகழ்ச்சி மட்டுமல்ல. மூலபலப்படை என்பது இராவணனுடைய கடைசி ஆயுதமாகும். அது ஒரு ஆலகாலப்படை. உலகின் பல பாகங்களிலும் உள்ள அரக்கர்களின் சிறப்புப்படையாகும். அது ஒரு பயங்கரமான பெரும் படையாகும்.

இப்படையைக் கண்டு, எத்தனையோ அரும்பெரும் சாதனைகளைச் செய்துள்ள வானரப்படையே கூட கலங்குகிறது. கண்டு ஓடுகிறது. எனவே இராமனுடைய பணி இரட்டிப்பாயிற்று. ஒன்று அந்த வானரப்படையை மூலபலப்படையின் தாக்குதல்களிலிருந்து காக்க வேண்டும். அதன் பயத்தைப் போக்க வேண்டும். அத்துடன் மூலபலப்படையை அழிப்பதற்கான தகுதியான உத்திகளையும் கையாண்டு அதை ஒழிக்க வேண்டும்.

இந்த மகத்தான காரியத்தைத் தனது அவதாரக் கடமையாக இராமபிரான் வெற்றி கரமாகச் செய்து முடிக்கிறார்.

இலங்கையின் மூலபலப்படை அழிந்தது. இராவணனுடைய கோபம் மேலும் அதிகரித்து தானே தகுந்த தயாரிப்புகளுடன் பெரும் படை திரட்டி நேருக்கு நேராகப் போருக்குப் புறப்படுகிறான்.

“அரக்கர் சேனை ஓர் ஆயிரம் வெள்ளத்
    தை அமரில்
துரக்கமானிடர் தம்மை என்று ஒரு புடை
    துரந்து
வெருக்கொள் வானரச் சேனை மேல்தான்
    செல்வான் விரும்பி
இருக்கும் தேரொடும் போயவன் இராவணன்
    எதிர்த்தான். ”

பெரும்படையுடன் வந்த இராவணனை இலக்குவன் எதிர்த்தான். இராவணன் விடுத்த கணைகளையெல்லாம் இலக்குவன் தடுத்தான். வீடணன் இலக்குவனுக்கு அருகில் இருந்து உதவிக் கொண்டிருந்தான். வீடணனைக் கண்ட இராவணனுக்கு அவன் மீது கடுங்கோபம் ஏற்பட்டது. அவனைக் கொன்று விடக் கருதி அவன் மீது ஒரு சக்தி மிக்க வேற்படையை ஏவினான்.

அந்த வலுமிக்க வேல்படை வீடணனை நிச்சயமாகக் கொல்லவல்லது. எனவே வீடணனை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்று கருதி இலக்குவன் இடையில் புகுந்தான். அடைக்கலம் புகுந்தவனை அழியப் பார்ப்பது தருமம் அல்ல. நாம் அழிந்தாலும் பரவாயில்லை என்று இலக்குவன் இராவணனுடைய வேல் படையைத் தாங்கினான். அந்த வேல் படை இலக்குவனுடைய மார்பில் புகுந்து அவனை வீழ்த்தியது.

“தோற்பின் என்னினும் புகழ் நிற்கும் தருமமும்
தொடரும்,
ஆர்ப்பர் நல்லவர் அடைக்கலம் புகுந்தவன்
அழியப்
பார்ப்பது என்? நெடும் பழி தொடர்வதன் முன்னம்
ஏற்பன் என் தனி மார்பின் என்று இலக்குவன்
எதிர்த்தான்”

இங்கு ஒரு முக்கியமான அரசியல் நெறிமுறை முன் வைக்கப் படுகிறது. வீடணன் அறவழியில் நின்று இராவணனிடமிருந்து வெளியேறி, அறத்தின் காவலனான இராமன் பக்கம் சேர்ந்து விட்டான். அதன் பின்னர், வெளியில் இருந்து இலங்கையின் அரசுப் பட்டத்தையும் ஏற்றிருக்கிறான். அத்துடன் இராமனுக்கும் வானரப் படைக்கும் பக்க பலமாக நின்று எல்லா ஆலோசனைகளையும் தகவல்களையும் கொடுத்து உதவி செய்து வருகிறான். அதிகாயன், இந்திரசித்தன், மூலபலப்படை முதலியவர்களைப் போர்க்களத்தில் முறியடித்து அழிக்கவும், களத்தில் மாண்ட வானரப்படைகளை மீண்டும் உயிர்ப்பிக்க மருத்துவ மலையைப் பயன் படுத்தவும் படைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரிக்கவும் பெரும் அளவில் உதவிக் கொண்டிருந்தான். இராமனுக்கு, இலக்குவன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன் ஆகியோர்களுடன் சேர்ந்து எந்த நேரத்திலும் துணையாக நின்றான். இந்திரசித்தனை நிகும்பலை யாகத்தைச் செய்ய விடாமல் தடுத்ததில் இலக்குவனுக்குப் பெரும் துணையாக இருந்தான். அத்துடன் தத்துவநிலையின் படி வீடணன், இராமனிடம் அடைக்கலம் அடைந்தவன். எனவே அத்தகைய சிறந்த நண்பனைச் சகோதரனைப் போன்றவனைத் தன் உயிர் கொடுத்தாவதுக் காப்பாற்ற வேண்டிய கடமை இராமனுக்கும் இலக்குவனுக்கும் இருக்கிறது. அதற்காகத் தன்னை அர்ப்பணித்து,

வீடணன் மீது இராவணன் ஏவிய சக்தி மிக்க வேல் படையைத் தன் மார்பில் ஏற்று தியாகம் செய்தான் இலக்குவன். இராவணன் விடுத்த அவ்வேற்படை இலக்குவனுடைய மார்பில் புகுந்து அவனைக் கீழே சாய்த்தது. வீடணனும் கோபங்கொண்டு தனது சிறப்பு ஆயுதமான நெடுந்தண்டால் இராவணனுடைய தேரையும் பரிகளையும் தேரோட்டியையும் அடித்துத் தகர்த்தான். இராவணனும் கோபத்துடன் வீடணன் மீதும் அனுமன் மீதும் எண்ணற்ற கணைகளை விடுத்து அன்றைய போரை முடித்துக் கொண்டு இலங்கை நகருக்குள் போய் விட்டான்.

"சேய் விசும்பினின் நிமிர்ந்து நின்று இராவ
ணன் சீறிப்
பாய்கடும் கணை பத்து அவன் உடல்
புகப் பாய்ச்சி
ஆயிரம் சரம் அனுமன் தன் உடலினில்
அழுத்திப்
போயினன் செரு முடிந்தது என்று இலங்கை
யூர் புகுவான்."

இலக்குவன் தன் மார்பில் இராவணனுடைய வேற்படையைத் தாங்கி வீழ்ந்தான் என்பதைக் கண்டு அனைவரும் வருந்தினர். மீண்டும் சாம்பவன் கருத்துப்படி, உடனே வெகு வேகமாக அனுமன் வடக்கு நோக்கி வான வெளியில் சென்று மீண்டும் மருத்துவ மலையைக் கொண்டு வந்தான். இலக்குவன் உயிர் பெற்று எழுந்தான். அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். இலக்குவன் கண் விழித்துச் சுற்றிலும் பார்த்து வீடணனும் அனுமனும் மற்றவர்களும் உயிருடன் இருப்பது கண்டு மகிழ்ச்சியடைந்து அனுமனை புகழ்ந்தான். அனைவரும் இராமனிடம் சென்றனர்.

இலக்குவன், மாருதியின் மகத்தான சேவையைப் பாராட்டித் தங்கள் பக்கம் இனி வெற்றி உறுதியென்றும், அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்றும் பாராட்டி எல்லோரும் இராமனிடம் சென்றனர் எனக் கம்பன் கூறுகிறார்.

"எழுந்து நின்று அனுமன் தன்னை
இரு கையால் தழுவி எந்தாய்

விழுந்திலன் அன்றோ மற்று அவ்
  வீடணன் என்ன, விம்மித்

தொழும் துணை அவனை நோக்கித்
  துணுக்கமும் துயரும் நீங்கிக்
கொழுந்தியும் மீண்டாள், பட்டான்
  அரக்கன் என்று உவகை கொண்டான்"

"தருமம் என்று அறிஞர் சொல்லும்
  தனிப்பொருள் தன்னை இன்னே
கருமம் என்ற அனுமன் ஆக்கிக்
  காட்டிய தன்மை கண்டால்

அருமை என் இராமற்கு அம்மா?
  அறம் வெல்லும் பாவம் தோற்கும்
இருமையும் நோக்கின் என்னா?
  இராமன் பால் எழுந்து சென்றார்."

மறுபக்கம் இராவணன் இலக்குவனை வீழ்த்தி விட்டோம் என்னும் களிப்பில் வேண்டிவர்களை அழைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அனைவரும் குடித்துக் களித்தனர். நாட்டிய நங்கையர் ஆடிய ஆட்டங்களையும், பாடிய பாட்டுக்களையும் கண்டும் கேட்டும் மகிழ்ந்திருந்தனர். களித்திருந்தனர். அந்த நேரத்தில் ஒற்றர்கள் வந்து இலக்குவன் உயிர் பெற்று எழுந்ததைப் பற்றிக் கூறுகின்றனர். இராவணன் முதலில் அதை நம்பவில்லை.

முதியவன் மாலியவான் திரும்பவும் இராவணனிடம் இராமன் தெய்வத்தன்மை கொண்டவன், பாற்கடலில் பள்ளி கொண்டிருந்தவன். மனிதனாகப் பிறந்து இங்கே வந்துள்ளான் என்று வீடணன் கூறியதை இங்கு மீண்டும் நினைவு படுத்துகிறான். மாலியவான் கூறியதை இராவணன் சட்டை செய்யவில்லை. ஆயினும் இதுவரை நடந்து முடிந்துள்ள போர் நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவு கூர்ந்து, எண்ணிப் பார்க்கிறான். அரக்கர் படை தொடர்ச்சியாக அழிந்து பட்ட காட்சி அவனுடைய கண்களுக்குப் புலப்படுகிறது. இருப்பினும் இராவணன் இன்னும் ஆத்திரம் அதிகம் கொண்டு மீண்டும் போருக்குத் தயாராவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

"நகை பிறக்கின்ற வாயன்
நாக்கொடு கடைவாய் நக்கப்
புகை பிறக்கின்ற மூக்கன்
பொறி பிறக் கின்ற கண்ணன்
மிகை பிறக்கின்ற நெஞ்சன்
வெம் சினத்து மேல் வீங்கி
சிகை பிறக்கின்ற சொல்லன்
அரசியல் இருக்கை சேர்ந்தான்"

எஞ்சியுள்ள அரக்கர் படை அனைத்தையும் திரட்ட இராவணன் ஆணையிட்டுப் போருக்கு மீண்டும் தயாரானான்.

"பூதரம் அனைய மேனிப்புகை நிறப்
புருவம் செந்தீ
மோதரம் என்னும் நாமத்து ஒருவனை
முகத்து நோக்கி
ஏதுளது இறந்திலாதது இலங்கையுள்
இருந்த சேனை
யாதையும் எழுகென்று ஆணை மணி
முரசு ஏற்று கென்றான்"

ஈசனை வணங்கி/ பூசைகள் முடித்து வேண்டியவர்களுக்கெல்லாம் தானங்கள் வழங்கிப் போருக்குத் தயாரானான்.

"ஈசனை இமையா முக்கண் இறைவனை
இருமைக்கு ஏற்ற
பூசனை முறையில் செய்து திருமறை
புகன்ற தானம்
வீசினன் இயற்றி மற்றும் வேட்டன
வேட்டோர்க் கெல்லாம்
ஆசற நல்கி ஒல்காப் போர்த் தொழிற்கு
அமைவது ஆனான்"

வேண்டியவர்களுக்கு வேண்டியன வெல்லாம் கொடுத்தான் என்றும் ஒல்காப்போர்த் தொழிலுக்கு அதாவது எந்தவிதமான சோர்வும் அயர்வும் இல்லாமல் உற்சாகத்துடன் போர்த் தொழிலுக்கு அமைவன் ஆனான், தயார் ஆனான் என்று கம்பன் குறிப்பிடுவதில் ஒரு தனிச் சிறப்பைக் காணலாம்.

இராவணன் வருக தேர் எனக் கூறித் தேரை வரவழைத்தான். அந்தத் தேர் மிகவும் அபூர்வமானது. தெய்வீகத்தன்மை கொண்டது. அந்தத் தேர் மண்ணிலும், விண்ணிலும், நீரிலும், நெருப்பிலும் செல்லத் தக்கது என்று மிகவும் நுட்பமாகக் கம்பன் தனது கவிதையில் குறிப்பிடுகிறார்.

“பாரில் செல்வது, விசும்பிடைச் செல்வது பரந்த
நீரில் செல்வது, நெருப்பிடைச் செல்வது நிமிர்ந்த
போரில் செல்வது போய்நெடு முகட்டிரை விரிஞ்சன்
ஊரில் செல்வது எவ்வுலகினும் செல்வது ஓர்இமைப்பின்”

என்பது கம்பனுடைய கவிநயம் மிக்க பாடலாகும்.

இவ்வாறு இராவணனும் அவனது திரளான படைவீரர்களும் போருக்கு எழுந்து வந்து கொண்டிருக்கும் செய்தியை வீடணன் இராமனுக்கு விளக்கமாக எடுத்துக் கூறுகிறான்.

“எழுந்து வந்தனன் இராவணன் இராக்கதத்தானைக்
கொழுந்து முந்தியது உற்றது கொற்றவ குலுங்குற்று
அழுந்து நின்றது நம்பலம் அமரரும் அஞ்சி
விழுந்து சிந்தினர் என்றனர் வீடணன் விரைவான்.”

இராவணன் போருக்கு எழுந்து வருகிறான் என்று அவனது வலுவான முன்னணிப் படைப்பிரிவுகள் முன் வந்து கொண்டிருக் –கின்றன வென்றும், அதைக் கண்டு நமது வானரப்படை பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறது என்றும் வீடணன் இராமனுக்குச் செய்தி தெரிவிக்கிறான். இங்கு போர்க்காலத்தில் வீடணனுடைய பங்கு இடைவிடாமல் இருந்து கொண்டிருப்பது பற்றியும் உடனுக்குடன் வேண்டிய தகவல்களைக் கொடுத்துக் கொண்டு,

இராமன் பக்கத்தை விழிப்போடு இருக்கச் செய்கிறான் என்பது பற்றியும் கம்பன் மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுகிறார்.

இராம-இராவணப் போர் தொடங்கியது. அதைத் தர்மமும்-பாவமும் ஒன்றையொன்று தாக்கிக்கொண்டு போர் செய்யத் தொடங்கின என்று கம்பன் மிக நயமாகக் கூறுகிறார்.

**"கருமமும் கடைக்கண் உறு ஞானமும்**
**அருமை சேரும் அவிஞ்ஞையும் விஞ்ஞையும்**
**பெருமை சால் கொடும் பாவமும் பேர்கலாத்**
**தருமமும் எனச் சென்று எதிர்தாக்கினர்."**

கருமத்திற்கும் ஞானத்திற்குமிடையில் அறியாமைக்கும் அறிவுக்குமிடையில் பாவத்திற்கும் தருமத்திற்கும் இடையில் போர் தொடங்கி நடப்பதாக இராவணனுக்கும் இராமனுக்கும் இடையில் நடக்கும் போரைப்பற்றிக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இராவணனுக்கும் இராமனுக்கும் போர் தொடர்ந்தது. இராவணன் விடுத்த கணைகளையெல்லாம் இராமன் தடுத்துத் தவிடு பொடியாக்கினான். இராவணன் மாயக்கணையை இராமன் மீது ஏவினான். அதை இராமன் ஞானக் கணையால் தடுத்து மாய்த்தான். இராவணன் தனது வல்லமை மிக்க சூலப்படையை இராமன் மீது ஏவினான். அந்த சூலப்படை இராமனுடைய மார்பில் பட்டுப் பொடிப்பொடியாக நொருங்கியது. அதைக் கண்டு இராவணன் ஆச்சரியமடைந்து தனக்குள் எண்ணுகிறான் இவன் யார்?

**"சிவனோ அல்லன், நான்முகன் அல்லன் திருமாலாம்**
**அவனோ அல்லன், மெய்வரம் எல்லாம் அடுகின்றான்**
**தவனோ என்னில் செய்து முடிக்கும்தரன் அல்லன்**
**இவனோதான் அவ்வேதமுதற் காரணன்?"**

என்றான்.

தன்னுடைய வல்லமை மிக்க கணைகளையும் படைகளையும் முறியடிக்கும் அளவுக்குத்திறன் படைத்த இவன் யார்? என்று இராவணன் எண்ணுகிறான்.

இவன் சிவனாக இருப்பானா? அப்படித் தெரியவில்லை. நான்முகனாக இருப்பானா? அதுவுமில்லை. திருமாலாக இருப்பானோ? அப்படியும் தெரியவில்லை. எனது வல்லமை மிக்க வரங்களையெல்லாம் அழிக்கிறான். அத்தனை தவவலிமை உள்ளவனா என்றால், அவ்வளவு கடுந்தவம் செய்து முடிக்கும் தரம் உள்ளவனாகவும் தெரியவில்லை. பின்னர் யாராக இருப்பான், இவன்தான் அந்த வேத முதல் காரணனாக இருப்பானோ? என்று இராவணன் எண்ணுகிறான். பின்னர்:

" யாரேனும்தான் ஆகுக யான் என் தனியாண்மை
பேரேன், இன்றே வென்றி முடிப்பென் பெயர் கில்லேன்
நேரே செல்வேன், கொல்லும் அரக்கன் நிமிர்வேய்தி
வேரே நிற்கும் மீள்கிலென் என்ன விடல் உற்றான்"

அவன் யாராயினும் ஆகட்டும். நான் எனது தனியாண்மை பெயரேன் என்று இராவணன் கூறுவது ஒரு தனிச்சிறப்பான செய்தியாகும். தனியாண்மை பெயரேன் என்பதுதான் இராவணனுடைய அரசியலில் தொடக்கம் முதல் இறுதிவரை உள்ள ஒரு கம்பீரமான நிலையாகும் என்பதைக் கம்பன் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார்.

இராவணன், "தன் எதிரில் நிற்பவன் யாரேனும் ஆகுக, எனது தனியாண்மை பெயரேன் நேரே செல்வேன். பெயர்கிலேன். வென்றி முடிப்பேன்",என்று நிமிர்ந்து நின்று இராமன் மீது கடுங் –கணைகளைத் தொடுக்கிறான்.

இராவணனுடைய கணைகளைத் தடுத்த இராமன் பதில் கணைகளைத் தொடுத்து இராவணனுடைய சில தலைகளை அறுத்தான். "வேதியர் வேதத்து மெய்யன், வெய்யவர்க்கு, ஆதியன் அணுகிய அற்றம் நோக்கினான், சாதியின் நிமிந்தது ஓர் தலையைத் தள்ளினான், பாதியின் மதிமுகப் பகழி ஒன்றினால்" பிரைச்சந்திரன் வடிவத்திலான அம்பினால் சாதியின் நிமிர்ந்த தலைகளில் ஒன்றை அறுத்துத் தள்ளினான் என்று கம்பன் கவிதை தெரிவிக்கிறது.

அறுந்த தலைகள் மீண்டும் மீண்டும் சேர்கின்றன. இராமன் மற்றொரு கணையால் இராவணனுடைய கையை வெட்டினான்.

அறுந்த கையையே ஆயுதமாகக் கொண்டு இராவணன் தொடர்ந்து போரிடுகிறான். இராவணனுடைய உடம்பில் உள்ள மயிர்க்கால்கள் தோறும் சென்று தாக்கும்படியான எண்ணற்ற கணைகளை இராமன் ஏவுகிறான். இராவணன் சோர்வடைந்துத் தேர்த்தட்டின் மீது சாய்கிறான். ஆயினும் இராவணன் சோர்வு நீங்கி மீண்டும் போர் செய்யத் தொடங்கினான்.

கடைசியாக இராமன் இராவணனுடைய நெஞ்சு மீது குறிவைத்து பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்தான்.

"முந்தி வந்து உலகு ஈன்ற முதல் பெயர்
அந்தணன் படைவாங்கி அருச்சியா
சுந்தரன் சிலை நாணில் தொடுப்புறா
மந்தரம் புரை தோள் உறவாங்கினான்".

"அக்கணத்தில் அயன்படை ஆண்தகைச்
சக்கரப்படை யோடுந்தழி இச்சென்று
புக்கது அக்கொடியோன் உரம் பூமியும்
திக்கனைத்தும் விசம்பும் திரிந்தவே"

இராவணனுடைய மார்பில் புகுந்து அவனுடைய உயிரைக் கொன்று தின்று புறம் போன இராமனுடைய கணையைப் பற்றிக் கம்பனுடைய புகழ் பெற்ற அழகிய கவிதை கூறுகிறது.

"முக்கோடிவாழ் நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடியாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர் பருகிப்புறம் போயிற்று
இராகவன் தன் புனித வாளி"

இராவணன் எல்லையில்லாத வல்லமை மிக்கவன். முக்கோடி வாழ்நாள் கொண்டவன். பெரும் கடுந்தவங்கள் செய்து பல வரங்கள்

பெற்றவன். எக்கோடி யாராலும் வெலப்படாய் என்னும் வரம் கொண்டவன். அதாவது இராவணனுடைய உடம்பிலுள்ள ஒரு கோடியைக் கூட யாராலும் வெல்ல முடியாது என்ற உயர்ந்த வரத்தைப் பெற்றவன். அத்தகைய தனியாண்மை மிக்க வல்லமை படைத்தவனும் வீழ்ந்தான் என்பது இப்பாடலின் முக்கியமான கருத்து.

இராவணன் கம்பீரமானவன். தனியாண்மைக் கொண்டவன். போரில் புறம் கொடாதவன். இராமனுடைய கணைகளை நெஞ்சில் ஏற்றவன். மரணம் அடைந்து மண்ணில் வீழ்ந்த போதும் அவனுடைய முகங்கள் பொலிவுற்று கம்பீரமாகக் காணப்பட்டன என்று கம்பனுடைய அற்புதமான கவிதை சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

"வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க
மனம் அடங்க வினையம் வீயத்
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயல் அடங்க
மயல் அடங்க ஆற்றல் தேயத்"

"தம்மடங்கு முனிவரையும் தலையடங்க
நிலையடங்க சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன அம்முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்களம்மா!"

இத்தகைய அற்புதமான கம்பனுடைய பாடல்களுக்கு உலக இலக்கியத்தில் ஈடு இணை எங்கே இருக்கிறது? கம்பன் தனது மகா காவியத்தின் மூலம் உலக இலக்கியத்தின் உச்சத்திற்கு எட்டியிருக்கிறான் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

பின்னர் இராமன் தனது தேரை விசும்பில் செலுத்துமாறு கூறித்தனது தம்பியோடும் இதர படைத்தலைவர்களோடும் சேர்ந்து சென்று அந்த மாவீரன் இராவணன் மாண்டு கிடந்த காட்சியைக் காண்பதாகக் கம்பன் ஒரு அற்புதமான காட்சியை நமக்குக் காட்டுகிறார்.

"தேரினை நீகொடு விசும்பில் செல்கென்ன
மாதலியைச் செலுத்திப்பின்னர்ப்

பாரிட மீதினின் அணுகித் தம்பியொடும்
படைத்தலைவர் எவரும் சுற்றப்
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறம் கொடாப்
போர் வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப உருமுற்றும்
திருவாளன் தெரியக் கண்டான்".

இவ்வாறு போரில் புறம் கொடாத போர் வீரன் இராவணன் போர்க்களத்தில் மாண்டு கிடந்ததை இராமன் தனது தம்பியுடனும் துணைவர்களுடனும் சேர்ந்து கண்டனர் என்பதைக் கம்பன் குறிப்பிடுகிறார். இன்னும்

"அலைமேவும் கடல்படை சூழ் அவனியெலாம்
காத்தளிக்கும் அடல் கைவீரன்
சிலைமேவும் கடும் கணையால் படுகளத்தே
மனத்தீமை சிதைந்து வீழ்ந்தான்
புலைமேலும் செலற்கு ஒத்துப்பொது நின்ற
செல்வத்தின் புன்மைத்தன்மை"
நிலைமேலும் இனி உண்டோ? நீர்மேலைக்
கோலம் எனும் நீர் மைத்து அன்றே?

என்று கம்பன் சிறப்பாக இராவணனுடைய முடிவை நிறைவு செய்கிறார். இராவணனுடைய மரணத்திற்குப் பின் பகையும் ஒழிந்தது.

இராவணன் இறந்தது கண்டு வீடணனும் இராவணனுடைய மனைவியரும் அழுது புலம்புகின்றனர். இராமன் வீடணனுக்கு ஆறுதல் கூறுகிறான். இறந்தப்பட்ட அரக்கர் அனைவருக்கும் வீடணன் ஈமக்கடன் செய்து முடிக்கிறான். அதன் பின்னர் இராமனுடைய ஆணைப்படி இலக்குவன் வீடணனுக்கு முடி சூட்டுகிறான். வீடணன் இலங்கை அரசனாகப் பொறுப்பேற்கிறான்

"வருந்தல் நீதி மனு நெறியாவையும்
பொருந்து கேள்விப் புலமையினோய் எனா

அரும் தவப்பயனால் அடைந்தாற்கு அறைந்து
இருந்தவத்து இறையோற்கு இது இயம்பினான்"

"மெய்பொள் வேத விதிமுறை விண்ணுளோர்
தெய்வ நீள் புனல் ஆட்டிருத்திட
ஐயன் ஆணையினால் இளம் கோளரி
கையினால் மகுடங்கவித்தான், அரோ!"

வீடணன் அரியணையில் அமர்ந்து பின்னர் இராமனை வணங்க, இராமன் வீடணனை வாழ்த்துகிறான்.

"உரிமை முவுலகும் தொழ உம்பர்தம்
பெருமை நீதி அறன் வழிப்போர் கிலாது
இருமையே அரசு ஆளுதீ ஈறு இலாத்
தருமசீல என்றான் மறைதந்துளான்"

"பன்னு நீதிகள் பற்பல கூறி மற்று
உன்னுடைத்தவ ரோடு உயர் கீர்த்தி யோய்
மன்னி வாழ்" கென்று கூறி இராமன் வீடணனை வாழ்த்தினான்.

இவ்வாறு இலங்கையில் இராவணனுடைய தனியாண்மை ஆட்சி முடிந்து இராமனுடைய பேரரசுடன் இணைந்த சக வாழ்வுடன் கூடிய வீடணனுடைய ஆட்சி அமைகிறது. அறன் வழி பிறளாத ஆட்சியாக வீடணன் தனது ஆட்சியை அமைத்து தரும சீலனாக வாழ இராமன் வாழ்த்தியதைக் கம்பன் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

வீடணன் இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர், இராமன் சீதையுடனும் மற்றும் இலக்குவன், சுக்கிரீவன் அங்கதன், வீடணன் ஆகியோருடனும் சேர்ந்து விமானத்தில் நந்திக் கிராமத்தை அடைந்தனர். ஏற்கனவே இராமனும் சீதையும் வரும் செய்தியை அனுமன் முன் கூட்டியே சென்று பரதனிடம் கூறி, பரதனும் இராமனை வரவேற்கத் தயாராகி அனைவரையும் வரவேற்று நந்திக் கிராமத்தில் சகோதரர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இராமனும் பரதனும் இலக்குவனும், சத்துருக்கனனும் தங்களுடைய தவ

வேடங்களைக் கலைத்து விட்டு இராஜகுமாரர்களாக ஒப்பனை செய்து கொண்டு, குகனையும் வரவழைத்து இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன், குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகிய எழுவரும் மற்றும் அங்கதனும் அனுமனும் சேர்ந்து அயோத்தி சென்றடைந்தார்கள்.

## அயோத்தி

அயோத்தியில் இராமனுக்கு முடி சூட்டு விழா நடைபெற்றது. இராமன் கோசல நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இந்த முடி சூட்டு விழாக்காட்சியைக் கம்பன் மிகவும் அழகாகத் தனது கவிதையில் குறிப்பிடுகிறார்.

“அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடை வாழ் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க
இருவரும் கவரி வீச
விரை செறி குழலி ஓங்க
வெண்ணையூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி ”

என்று கம்பன் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

இராமனுடைய ஆட்சி இராம ராஜ்யம் என்று இந்திய மக்களால் போற்றப் படுகிறது. அது ஒரு நீதியான ஆட்சியாக பாரத நாட்டு மக்களுடைய உள்ளங்களில் வலுவாக இடம் பெற்றிருக்கிறது. இராமராஜ்யம் என்பது இராமனது ஆட்சி என்னும் வடிவத்தில் வால்மீகி இராமாணத்தில் உத்தர காண்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் கம்பன் உத்தர காண்டத்தை எழுத வில்லை. இராமனுடைய முடிசூட்டு விழாவுடன் கம்பன் தனது மகாகாவியத்தை நிறைவு செய்துள்ளார். ஆயினும் பரதனுடைய நந்திக் கிராமத்து ஆட்சியை இராமனுடைய சொல்படி நடந்த ஆட்சியாகக் கொள்ளலாம். இராமன் முடிசூட்டிக் கொண்ட பின்னரும் தனது சகோதரர்களை இணைத்துக் கொண்டு கூட்டாக

மகிழ்ச்சியாக ஆட்சி நடத்தினர் எனக் கம்பன் குறிப்பிடுகிறார்.

“விரத நூல் முனிவன் சொன்ன விதிமுறை
வழாமை நோக்கி
வரதனும், இளைஞர்க்கு ஆங்கண் மாமணி
மகுடம் சூட்டி
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப்
பணித்து நாளும்
கரை தெரிவு இலாத போகக் களிப்பினுள்
இருந்தான் மன்னோ!”

என்று கம்பன், இராமனும் அவனது சகோதரர்களும் இணைந்து சேர்ந்து கூட்டாக வசிட்ட முனிவன் வழி காட்ட ஆட்சி முறையை வழுவில்லாமல் நன்கு நடத்தியதாகக் கூறுகிறார். நன்னூல் முறை செயும் அரசர் என்பது கம்பனது அரசியல் கருத்துக்களை அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை ஆகிய அரசுகளில் நடந்த அரசியல் நிகழ்ச்சிகள் போர்க்கால அரசியல் நிகழ்ச்சிகள் பற்றிக் கம்பன் மிக நுட்பமாக எடுத்துக் கூறியுள்ள விவரங்களில் காண்கிறோம்.

இராம ராஜ்யம் என்னும் கருத்தமைவில் பரதனுடைய நந்திக் கிராம ஆட்சி, குகனுடைய கங்கைக்கரை ஆட்சி, சுக்கிரீவனுடைய கிட்கிந்தை ஆட்சி, வீடணனுடை இலங்கை ஆட்சி ஆகியவைகளும் சேரும். இந்த ஆட்சிகள் எல்லாம், தூய்மையான, அறவழியிலான நன்னூல் முறையிலான ஆட்சிகளாகும். பாரத நாட்டின் நீண்ட வரலாற்றில் நமது பண்பாட்டில் தோன்றியுள்ள, வளர்ச்சி பெற்றுள்ள, அரசியல் நீதிகள், நெறி முறைகள், தொன்று தொட்டு வந்துள்ள நமது சாத்திரங்கள் பல வற்றிலும் எடுத்துக் காட்டியுள்ள அரச நீதிகள் வழியில் நடைபெறும் ஆட்சி முறைகளாகும். கம்பனுடைய இராமாவதாரக் காவியத்தில் வசிட்டன், பரதன், இராமன், இலக்குவன், வீடணன், அனுமன் முதலியோர் ஆங்காங்கு உரிய இடங்களில் கூறியுள்ள கருத்துக்களில் அரசியல் நெறிகள், நீதி நெறிகள், ஒழுக்க நெறிகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவைகளைத் தொகுத்துக் கம்பனுடைய சீரிய அரசியல் கருத்துக்களாகவும் சமுதாயக் கருத்துக்களாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பரதனுடைய எளிமையும் நேர்மையும் அனுமனுடைய அடக்கமும் சொல் திறனும் வீடணனுடைய அறநெறியும் அறிவு கூர்மையும், இலக்குவனுடைய வேகமும், தியாகமும், இராமனுடைய அருங் குணங்களும் அருளும் ஆகிய அனைத்தும் இராம ராஜ்யத்தின் சின்னங்களாகும்.

கம்பனுடைய அரசியல் மற்றும் சமுதாய சிந்தனைகளில் சிறப்பு மிக்கவைகளை நேரடியாகப் பால காண்டத்தில் காண்கிறோம். அதில் கம்பனுடைய, காலத்தை வென்ற எந்நாளும் நிலைத்து நிற்கக் கூடிய உயர்ந்த சிந்தனைகளைக் காண முடிகிறது.

கோசல நாட்டின் சிறப்புகளை பற்றிய கம்பனுடைய கவிதைகள் மிகவும் உயர்ந்த சிந்தனை வளமும் இலக்கிய வளமும் அமைந்ததாக உள்ளன. அவைகள் மிக மேலான சமுதாயக் கருத்துக்களாகவும் அரசியல் கருத்துக்களாகவும் அமைந்துள்ளன.

கம்பன் கோசல நாட்டின் ஆற்றுச் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார். சரயு நதியின் வளத்தைப் பற்றிக் கூறுகிறார். கம்பனுக்கு சரயு நதியைக் காட்டிலும் காவிரியையும் பெண்ணையாற்றையும் பற்றி அதிகம் தெரியும். தான் அறிந்தத் தெய்வத்திரு நதிகளை நினைவில் கொண்டு சரயு நதியின் சிறப்பைப் பற்றிப் பாடுகிறார். ஒரு நாட்டின் வளத்திற்கு ஆற்றுவளம் அடிப்படையானது.

“கல் இடைப் பிறந்து போந்து கடல் இடைக்
கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும்
பொருள் ஈது என்னத்
தொல்லையில் ஒன்றேயாகித் துறை
தொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்
போல் பரந்தது அன்றே!”

எல்லையில்லாத பொருள் செரிந்த அறிவுச் செல்வம் நிறைந்த கருத்துக்களை எடுத்துக் கூறும், ஏராளமான உயர்ந்த நீதிநெறிகளை விளக்கிக் கூறும் வேதங்களும், சாத்திரங்களும் பல வேறு சமயங்களும் போல அளவற்ற செல்வத்தை நதியாக இந்த ஆறு

இருக்கிறது என்று கம்பன் கூறுவது சிறப்பான பொருள் நிறைந்த கருத்தாகும்.

கம்பன் இங்கு எல்லா சாத்திரங்களையும் எல்லா சமயங்களையும் குறிப்பிடுகிறார். அவருக்கு சமய வேறுபாடுகள் கிடையாது. எல்லா சமயங்களிலும் உள்ள நல்ல கருத்துக்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் கருத்தைக் குறிப்பிடுவது அவருடைய சமய சமரச நோக்கைக் குறிக்கிறது.

இந்த ஆற்றின் வெள்ளம் நாட்டை வளமாக்குகிறது. அந்த ஆற்று வெள்ளத்தைக் கம்பன், பலவேறு வகைச் செல்வக் குவியல்களையும் வாணிபத்தின் மூலம் நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கும் வணிக மக்களுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

“மணியும், பொன்னும், மயில்தழைப் பீலியும்
அணியும், ஆனை வெண்கோடும், அகிலும் தன்
இணையில் ஆரமும் இன்ன கொண்டு ஏகலால்
வணிக மாக்களை ஒத்தது அவ்வாரியே”

என்று அவருடைய கவிதை குறிப்பிடுகிறது.

ஆற்று வெள்ளத்தில் மணியும் பொன்னும் மயிலின் சிறகுகளும் யானைத் தந்தங்களும், சந்தனக் கட்டைகளும் இன்னும் பல பொருள்களும் அள்ளி அடித்துக் கொண்டு வரப்படுகின்றன. வணிக மக்களும் தங்கள் வாணிபத்தின் மூலம் நாட்டிற்கு பொன்னையும், மணிகளையும், மரங்களையும், தந்தங்களையும், சந்தனக்கட்டைகளையும் இதர பொருள்களை நாட்டில் கொண்டு வந்து குவிக்கிறார்கள். அதனால் அந்த வெள்ளம் வணிக மக்களைப் போன்று உள்ளது என்று ஒப்பிட்டுக் கம்பன் ஆற்றைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

இன்னும், வயல்கள், பூந்தோட்டங்கள், நீர்நிலைகள், சோலைகள், காவுகள் முதலியவைகளுக்கெல்லாம் உயிர் போன்றது நீர். அந்த நீரை அள்ளிக் கொண்டு வருவதால் அந்த ஆறும் ஆற்று வெள்ளமும் நாட்டிற்கு உயிரைப் போன்றது என்று கம்பர் கூறுகிறார்.

"தாது உகு சோலை தோறும் சண்பகக்
காவு தோறும்
போது அவிழ் பொய்கை தோறும் புது மணத்
தடங்கள் தோறும்
மாதவி வேலிப்பூக வனந்தொறும் வயல்
கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலா
யது அன்றே!"

என்று நிலத்தை உடம்பாகவும் நீரை உயிராகவும் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

உற்பத்திச் செல்வங்கள், வாணிபம், அறிவுச் செல்வம் ஆகிய மூன்றையும் ஆற்றணியில் முக்கியமாகக் கம்பன் குறிப்பிடுகிறார். அவைகளே ஒரு நல்ல நாட்டிற்கும் நல்ல அரசியலுக்கும் ஆதாரமானவைகளாகும். எனவே ஒரு நல்ல சிறந்த அரசின் முக்கிய கடமைகள் நாட்டின் வளத்தைப் பெருக்கி உற்பத்தியை வளர்ப்பது, வாணிபத்தை வளர்ப்பது, சாத்திரங்கள், கலைகள், சமயங்கள் மூலம் அறிவுச் செல்வத்தையும் அறநெறியையும் வளர்த்தல் ஆகியவை –களாகும் என்பதைக் கம்பன் எடுத்துக் காட்டுகிறார்.

இனிக் கம்பன் நாட்டுச் சிறப்பைக் கூறுவதைக் காண்போம்.

"பெரும் தடங்கண் பிறைநு தலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே"

கோசல நாடு செல்வமும் கல்வியும் நிறைந்திருந்தது. நாள்தோறும் வருந்தி வந்தவர்களுக்கு ஈதலும் விருந்தும் அள்ளி அளிக்கும் பண்பும் நிறைந்த மக்கள் இருந்தனர். நாடு என்பது செல்வமும் கல்வியும் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய அரசியல் சிந்தனையாகும்.

"கலம் சுரக்கும் நிதியம், கணக்கிலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நன் மணி

பிலம் சுரக்கும், பெறுதற்கு அறிய தம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்"

கடல் வழியாகக் கப்பல்களிலும், தரை வழியாக வண்டிகளிலும் பெட்டி பெட்டியாக நிதிக் குவியல்கள் வந்து சேரும். நிலம் அதைச் சார்ந்த விளை நிலங்கள், காடுகள், மலைகள் ஆகியவை பலவகை வளங்களைச் சுரந்து கொண்டேயிருக்கும். ஆடு, மாடுகள், பால், தயிர், நெய், நெல், கரும்பு, வாழை, கமுகு, காய் கனிகள் தோட்டங்கள் தோப்புகள் மலர்வனங்கள், தேன், மரங்கள், கற்கள் முதலிய பலவகை உற்பத்திச் செல்வங்கள் பெருகிக் கொண்டேயிருக்கும். சுரங்கங்கள் பலவகை மணிகளையும் உலோகங்களையும் சுரந்து கொண்டேயிருக்கும். குடிகள் எல்லாம் நல்ல ஒழுக்கங்களைப் பெருக்குவார்கள் என்று கம்பன் கூறுகிறார். கல்வி செல்வம், நிலவளம், வாணிபம், தொழில் வளம் அனைத்தும் சிறந்து அவைகளின் பலனாக குடிமக்களின் சீலமும் ஒழுக்கமும் சிறந்து நிற்பதையும் கம்பன் கவிதை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

ஒரு நாட்டில் வறுமையும், வேலையின்மையும், செயல் குறைவும், வளக்குறைவும், ஏற்ற தாழ்வுகளும், பற்றாக்குறைகளும் இயற்கை சூழல் பாதிப்புகளும், நீர்நிலைகள் வரண்டும், பஞ்சங்களும், பசி பட்டினியும் கல்லாமையும் படிப்பில்லாமையும் நிறைந்திருக்குமானால் அப்போது மக்களிடம் ஒழுக்கக் கேடுகளும் அதிகரித்து அந்த சமுதாயம் சீரழிவை நோக்கிச் செல்கிறது. அதற்கு மாறாக உழைப்பும் செல்வமும், கல்வியும், வளமும் வாணிபமும் நிறைந்த சமுதாயத்தில் ஒழுக்க நெறிகளும் மேலோங்கி நிற்கின்றன என்பதைக் குறிக்கும் வகையில் நெடிது நோக்குடன் கம்பன் இக்கருத்துக்களைக் குறிப்பிடுகிறார். ஒரு சிறந்த வளம் மிக்க ஒழுக்கம் நிறைந்த அறநெறியிலான சமுதாயத்தை உருவாக்குவதில் நாட்டின் அரசியல் முக்கிய பங்கு வகிக்கிறது. அரசியல் என்பது ஆட்சியும் நிர்வாகமும் மட்டுமல்ல. மக்களை செயலூக்கத்துடன் நாட்டுப் பற்றுடன் சமுதாய முன்னேற்றத்தில் ஈடு படச் செய்து வழிகாட்டி வழி நடத்திச் செல்வதுமாகும்.

கம்பனுடைய இந்தப் பாடல்களில் மொழி வளமும், கருத்தாழமும் சிறந்த சமுதாய அரசியல் கருத்துக்களும் சொல்லழகும், உயர்ந்த குறிக்கோள்களும் வழி முறைகளும் இருப்பதைக் காணலாம்.

கம்பனுடைய கோசலத்திரு நாட்டில்,

"கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம் சிந்தையின் செய்கையால்
ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழி தகவு இல்லையே"

அந்த மக்களிடம் குற்றங்கள் நடை பெறுவதில்லை. அதனால் தண்டனைகள் என்பதும் இல்லை. மக்களிடம் தகாத கோபம் (சீற்றம்) என்பது இல்லை. நல்ல நிதானமான சிந்தனை உள்ளவர்களாக இருந்தார்கள். நல்ல நிதானமான சிந்தனையுடன் செயல் பட்டால் கோபம் ஆத்திரம் முதலிய அவசர குணங்கள் ஏற்படாது. மக்கள் நல்லறமான செய்கைகளிலேயே ஈடுபட்டார்கள். ஏற்றமுடன் மக்கள் இருந்தார்கள். ஏற்றமுடன் மக்கள் வாழ்ந்தார்கள். அவர்களிடம் இழிவான செயல்கள் எண்ணங்கள் எதுவுமே இல்லை. இன்னும்,

"பொற்பின் நின்றன பொலிவு, பொய் இலா
நிற்பின் நின்றன நீதி, மாதரார்
அற்பின் நின்றன அறங்கள், அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே."

நல்ல பண்புகள் நிறைந்ததாய் அழகு நிலை நின்றது என்று கம்பன் கூறுகிறார். அழகு என்பது வெறும் தோற்றத்தில் மட்டுமல்ல, அது நல்ல சிறந்த பண்புகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். அப்போது தான் அந்த அழகு நிலைத்து நிற்கும். இங்கு கம்பன் அழகியலுக்குத் தனி இலக்கணம் கூறுகிறார்.

பொய் இல்லாத நிலையில் நீதி நின்றது என்று கூறுகிறார். அதில் நீதிக்கு அடை மொழியாக பொய்யில்லா நீதி என்று அமைந்துள்ளது. நீதி என்பது வெறும் தண்ட நீதியாக இல்லாமல் குறைவற்ற நீதியாக இருக்க வேண்டும் என்பதை இங்குக் கம்பன் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

அறங்கள் எல்லாம் மாதர்களுடைய அன்பில் நின்றன என்று கம்பன் கூறியிருப்பது மிகச் சிறப்பான கருத்தாகும். பெண்களின் அன்பு என்பது, அவர்கள் தங்களுடைய தாய் தந்தையர் பால் காட்டும்

அன்பு, அவர்கள் தங்கள் கணவன் பால் காட்டும் அன்பு, அவர்கள் தங்கள் குழந்தைகள் பால் காட்டும் அன்பு, உடன் பிறந்தோர் பால், புகுந்த வீட்டின் பால் காட்டும் அன்பு, நாட்டு மக்கள் பால், நல்லறங்கள் பால் காட்டும் அன்பு, அவ்வன்பு என்பது மகா சமுத்திரம். அது அனந்தமானது. எனவே கம்பன் அந்தப் பெண்களின் தாய்க் குலத்தின் அன்பை அவர்களுடைய கற்புக்கு முன்பாக முன் வைத்துள்ளார். அத்தகைய அன்பின் காரணமாகவே அத்தனை அறங்களும் நிலைத்து நிலை பெற்றிருக்கின்றன. அத்தகைய அன்பில் நிறைந்த மாதர்களின் கற்பில் நின்றன கால மாரி. அது நாட்டு வளம். அத்தகைய ஒழுக்கத்தினால் மழை தவறாது பெய்தது என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

கம்பனுடைய சமுதாய சிந்தனை படிப்படியாக அவருடைய கவிதைகளில் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகிறது. கம்பனுடைய கோசலத்தில்,

“வண்மையில்லை ஒரு வறுமை யின்மையால்
திண்மை இல்லை நேர் செருநர் இன்மையால்
உண்மையில்லை பொய்யுரை இலாமையால்
வெண்மை இல்லை பல கேள்வி மேவலால்!”

அங்கு வாங்க வேண்டியவர்கள் இல்லை. அதனால் கொடுக்க வேண்டியவர்களும் இல்லை. அதனால் வாங்குபவர் இல்லாததால் கொடுப்பவர்களும் இல்லை என்று கம்பன் குறிப்பிடுகிறார். வறுமையில்லை அதனால் கொடையுமில்லை. நேருக்கு நேர் நின்று சண்டை போடும் பகைவர் இல்லை. அதனால் பலமுடையவர்கள் என்று யாருமில்லை. பொய் சொல்வதற்கே ஆள் இல்லாமையால் அங்கு உண்மை என்பதும் இல்லை. எல்லோரும் படித்து அறிவு நிரம்பியவர்களாக இருப்பதால் அறியாமையும் இல்லை என்று கம்பன் கூறும் இந்தக் கவிதைகளுக்கு இலக்கிய உலகில் ஈடு இணையே இல்லை.

நாட்டுப் படலத்திலிருந்து நகரப் படலத்திற்குச் செல்லும் போது கம்பன் இன்னும் தனது மனிதாபிமான சமுதாய சம நோக்கின் உச்சத்திற்குச் செல்வதைக் காண்கிறோம்.

அயோத்தியில் மக்கள் எப்போதும் மகிழ்ச்சியுடன் முரசடித்தும் ஆராவாரம் செய்தும் ஆடிப்பாடியும் வாழ்கிறார்கள். அவர்களுடைய ஆரவார ஒலி, நிறைந்த சூல் கொண்ட மேகங்களின் இடி முழக்கம் போல, ஓயாது ஓசை கொடுக்கும் கடலலை போல் கேட்கும். அந்த நகரத்தில் கள்வர்கள் இல்லை. அதனால் காவல் இல்லை. கொள்வர் இல்லை அதனால் கொடுப்பார்களும் இல்லை, என்றும், அங்கு கல்வியின்மை இல்லை. எல்லோரும் நன்கு கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தார்கள். அதனால் கல்வி முற்றிய வல்லவர்கள் என்பவர்கள் யாருமில்லை. அது அல்லவர்களுமில்லை. எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தியுள்ளதால் இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை என்றும் கம்பன் குறிப்பிடுவது அவருடைய சீறிய சிந்தனை வளர்த்திற்கும் சமநிலை சமுதாய நோக்கிற்கும் தலை சிறந்த எடுத்துக் காட்டாகும். கம்பனுடைய அருமையான தலை சிறந்த பாடல்களைப் பாருங்கள்.

"தெள்வார் மழையும் திரை ஆழியும் உட்க
நாளும்
வள்வார் முரசம் அதிர் மாநகர் வாழும்
மாக்கள்,
கள்வார் இலாமைப் பொருள் காவலும்
இல்லையாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும்
இல்லை மாதோ!"

"கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாறும் இல்லை, அவை வல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்த லாலே,
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ!"

எல்லோரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை என்று கூறிய கம்பன், அதற்கடுத்த பாடலில் மேலும் ஒரு படி உயர்ந்து உச்சத்திற்குச் சென்று ஒரு உயர்ந்த மேலான சமுதாய அமைப்பின் வடிவத்திலான அயோத்தியின் சமுதாயத்தை நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

"ஏகம் முதற் கல்வி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகும் முதல் திண்பணை போக்கி அரும் தவத்தின்,
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகக்கனி யொன்று பழுத்தது போலும் அன்றே!"

அனைத்து வகையான அனைத்துத் துறைகளிலுமான ஒப்பில்லாத உயர்ந்த கல்வி என்னும் விதை முளைத்து, செழித்து வளர்ந்து எண்ணில்லாத அனந்தமான பல கருத்துக்களும் கேள்விகளும் தெளிவும் அறிவுமான கிளைகள் பரவி, அரும் தவமான சீரிய முயற்சிகள் என்னும் இலைகள் தழைத்து, அன்பு என்னும் மொட்டுகள் அரும்பி அவைகளில் தருமம் என்னும் மலர்கள் மலர்ந்து மணம் பரப்பி, அதில் அனைத்து செல்வங்களும் வசதிகளும் நிறைந்த வாழ்க்கை என்னும் கனி அது போகக் கனியாகப் பழுத்தது போல மக்களுடைய வாழ்க்கை நெறியும், மக்களுடைய சமுதாய வளர்ச்சியின் மேம்பட்ட நிலையும் அயோத்தியில் அமைந்திருந்தது என்று கம்பன் கூறியிருப்பது என்றென்றும் படித்துப் படித்து இன்புறத் தக்க அற்புதமான கவிதையாகும்.

கம்பனுடைய இந்தக் கருத்துக்களில் ஒரு முழுமையான வளர்ச்சி பெற்ற மேன்மையான சமுதாய வடிவத்தைக் காண முடிகிறது. மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான, பயனுள்ள தீதற்ற அத்தனை வாழ்க்கைச் செல்வங்களும் கல்வியும் கல்வியில் வல்லமையும் கல்வி நிறைந்த அறிவும் நிறம்பியுள்ள காட்சியைக் கம்பன் கவிதை காட்டியுள்ளது. இக்கவிதைகள் மிகவும் சிறப்பானதும் நமது உள்ளத்தை நெகிழச் செய்வதும் நமது சிந்தனையை வளர்ப்பதுமாகும்.

மக்கள் அனைவரும் நல்ல சத்துள்ள சிறந்த உணவு வகைகள் கிடைக்கப் பெற்று உண்டு களித்து, திடகாத்திரமாக இருந்தனர். பழங்களும், பருப்பு வகைகளும், நெய்யும், தயிரும், தேனும் சர்க்கரையும் மற்றும் பல சேர்மானங்களும் நிறைந்த உணவு வகைகளைத்தும் தம் இல்லங்களிலிருந்து தாம் மட்டுமல்லாமல் தாமும் தமது விருந்தினரோடும் தமது சுற்றத்தாரோடும் மற்றும் அந்தணர் முதலியவரோடும் சேர்ந்து கலகலப்போடு அயோத்தி மக்கள் உண்ணும் காட்சியைக் கம்பன் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

ஏராளமான அளவில் நெல்லும் கம்பும் சோளமும் இதர நவதானியங்களும் மற்றும் பலவேறு பொருள்களும் பண்டங்களும் நிறைந்து கோசல நாடு செல்வச் சிறப்புடன் செழிப்புடன் விளங்கியதையும் கம்பன் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

"எள்ளும் ஏனலும், இருங்கும் சாமையும்
கொள்ளும் கொள்ளையில் கொணரும் பண்டியும்
அள்ளல் ஓங்கு அனத்து அமுதின் பண்டியும்
தள்ளும் நீர்மையின் தலை மயங்குமே!"

"உயரும் சார் விலா உயிர்கள் செய்வினைப்
பெயரும் பல் கதிப் பிறக்கும் ஆறு போல்
அயிரும் தேனும் இன்பாகும் ஆயர் ஊர்த்
தயிரும் வேரியும் தலை மயங்குமே!"

"எறி தரும் அரியின் சும்மை எடுத்து வான்
இட்ட போர்கள்,
குறிகொளும் போத்தில் கொல்வார் கொ
ன்ற நெல் குவைகள் செய்வார்
வறியவர்க்கு உதவி மிக்க விருந்துண
மனையில் உய்ப்பார்
நெறிகளும் புதையப் பண்டி நிறைத்து
மண் நெளிய ஊர்வார்!"

"முந்து முக்கனியும் நானா முதிரையும் முழு
த்த நெய்யும்
செந்தயிரோடு, தேன், கண்டம், முதலிய
செறிந்த சோற்றில்
தம்தம் இல் இருந்து தாமும் விருந்தொடும்
தமரி னோடும்
அந்தணர் முதலோர் உண்டி அயல் வுறும்
அமலைத்து எங்கும்."

இத்தகைய உணவு உண்டு களிக்கும் கலகலப்பு குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமல்லாமல் நாடெங்கும் நிறைந்திருந்தது என்று கம்பன் குறிப்பிடுவது சிறப்பாகும்.

குடிமக்களின் வாழ்வு சிறந்து கோன் நிகர் குடிகளாக மக்கள் வாழ்ந்தனர். பல தொழில்களும் தழைத்து ஓங்கியிருந்தன. கலைகள் பலவும் பரவிப் படர்ந்திருந்தன. வாழ்க்கைத் தேவைகள் என்பது வெறும் உணவும் உடையும் நல்ல குடியிருப்புகள் மட்டுமல்ல. அத்துடன் சேர்ந்து கல்வியும், கல்வி அறிவும், ஒழுக்கமும் சிறந்த பொழுது போக்குகளும், ஆடல்களும், பாடல்களும், கவிதையும், மகிழ்ச்சியும், நற்பண்புகளும் நல்லொழுக்கங்களும் ஆன்மீக நெறிகளும் தேவைகளும் சேர்ந்த ஒன்றிணைந்த சமுதாயம் தான் சிறந்த சமுதாயமாகும் என்று நமது முன்னோர்கள் கண்டிருந்த சமுதாயக் கருத்துக்களை வாழையடி வாழையாக அவ்வழியில் அச்சிறந்த மரபில் வந்த கம்பனும் தெளிவுப் படுத்திச் சிறப்பாக எடுத்துக் கூறியிருப்பது நமக்கு மிகுந்த பெருமையளிப்பதாக உள்ளது.

பாண்டிய நாட்டுப் பெரும் புலவர் வெண்பாவிற்கோர் புகழேந்தி தனது நளவெண்பா என்னும் நன்னூலில் நிடத நாட்டைப் பற்றிக் கூறும் போது இல்லாமையும் கல்லாமையும் இல்லாத நாடு என்று குறிப்பிடுகிறார். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று மனித சமத்துவ நிலையைச் சங்க காலச் சான்றோர் எடுத்துக் கூறியுள்ளது நமது பாரத நாட்டின் சீரிய பண்பாட்டுப் பாரம்பரியமாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை"

என்று வள்ளுவப் பேராசான் கூறியிருப்பது நமது பாரம்பரி சிந்தனையின் சிகரமாகும். அந்த வழியில்,

கம்ப நாடர் உச்சத்திற்குச் சென்று "எல்லோரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ" என்று கூறியிருப்பது காலத்தை வென்ற, எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய, நெடிது நோக்கிய மிக உயர்ந்த சிந்தனையாக அமைந்துள்ளது என்பதைக் காண்கிறோம்.

கம்பனுடைய மகாகாவியம் வெறும் கதை மட்டும் கொண்டதல்ல. திருமால் பெருமானின் பூரணரவதாரமான இராமபிரான் மனிதனாகப் பிறந்து வாழ்ந்து வாழ்க்கை நெறிகளை நிறைவேற்றிக் காட்டிய அற்புதக் களஞ்சியமாகும். அதில் அதி நுட்பமான தத்துவ இயல் கருத்துக்களும் அரசியல் பொருளியல் கருத்துக்களும், சமுதாயக் கருத்துக்களும், உயரிய தனி மனித சிந்தனைக் கருத்துக்களும், சமுதாயச் செயல்பாடுகளும் போர் முறைகளும், போர் நெறிகளும் அரசியல் தந்திரங்களும், சூழ்ச்சிகளும் பற்றிய பல சிறந்த கருத்துக்களும் நிறைந்துள்ளன. கம்பனுடைய பாத்திரப் படைப்புகள் மிக அற்புதமானவை. அவை ஒவ்வொன்றும் தனிச் சிறப்பு கொண்டவை. பாரத நாட்டு மக்களின் உள்ளங்களில் ஆழப் பதிந்துள்ள தெய்வீகப் படைப்புகளாகும்.

“உலகில் ஆண்டவனால் படைக்கப் பட்ட அனைத்தும் மனிதனுக்காகவே படைக்கப் பட்டவை” என்று சில ஐரோப்பிய தத்துவங்களும் மேற்கு ஆசிய தத்துவங்களும் சமயக் கருத்துக்களும் கூறுகின்றன. அதனால் உலகில் உள்ள அனைத்துப் பொருள்களையும் மனிதன் எப்படி வேண்டுமானாலும் பயன் படுத்திக் கொள்ளலாம் என்னும் நடைமுறை அங்கு தோன்றி உலகில் பரவியது. ஆனால் அதற்கு மாறாக ஆண்டவனால் படைக்கப் பட்ட மனிதன் உட்பட அனைத்துப் பொருள்களும் உயிர்களும் ஒன்றிணைந்தவை, ஒன்றையொன்று சார்ந்தவை, மனிதனுக்காக எல்லாம், எல்லாவற்றிற்குமாக மனிதன், உலகத்தின் படைப்பெல்லாம் கடவுள் மயம், உலகில் காணும் காட்சியெல்லாம், பிரமாணங்களெல்லாம் பிரத்யட்சங்களெல்லாம் கடவுள் மயமானவை. மனிதனும் அதன் ஒரு பகுதி, உலக நலனே லோக க்ஷேமமே மனிதனின் உயர்ந்த லட்சியமாக இருக்க வேண்டும். எனவே உலகத்தோடு இணைந்து மனிதன் செயல் பட வேண்டும் என்னும் உயர்ந்த தத்துவத்தைக் கொண்டதாகும்.

அந்த உன்னத மரபுகளைத் தொடர்ந்தே, கம்பனும் அவைகளை மேலும் செழுமைப் படுத்தி/ தனது அரசியல் மற்றும் பொருளியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களையும், தத்துவ ஞானக் கருத்துக்களையும் தனி மனித சிந்தனைக் கருத்துக்களையும் எடுத்து விளக்கியுள்ளார். அவை காலத்தைக் கடந்தவை. காலத்தை வென்றவைகளாகும்

கம்பன் கூறும் "எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈது என்னத் தொல்லையில் ஒன்றேயாகித் துறை தொறும் பரந்த சூழ்ச்சிப் பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்தது"என்பதை நாம் மிக விரிந்த பொருளில் காண வேண்டும். கம்பன் கூறும் "பல்பெரும் சமயம் சொல்லும் பொருள்" என்பது இந்தியச் சிந்தனையில் தோன்றி வளர்ந்த பல்பெரும் சமயம் சொல்லும் பொருளாகும். இங்கு கம்பன் கூறும் "பொருள்" என்னும் சொல்லுக்கு மனிதனின் தினசரி வாழ்விற்கு அவசியமான லௌகீக, ஆன்மீகப் பொருள் என்று மட்டும் கூற முடியாது. கம்பன் கூறும் "பொருள்" என்பது'பரம் பொருள்'ஆகும் என்று நமது புலவர்களும் பண்டிதர்கள் சிலரும் பொருள் கூறலாம். ஆனால் பரம்பொருள் என்பதும் கூட, அந்தர் யாமியாக எல்லாவற்றையும் கடந்து தனியாக நிற்கும் தனிப் பொருளாக அல்லாமல், அனைத்து உயிர்ப் பொருள்களிலும் ஜடப் பொருள்களிலும் இன்னும் பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள அனைத்துப் பொருள்களிலும், அவைகளின், சாரத்திலும், இயக்கத்திலும், உணர்விலும், உயிரிலும், செயலிலும் மாற்றங்களிலும், உலகம் யாவிலும் பரந்து இணைந்து பரவி நிற்கும் பொருள் என்னும் விளக்கம் கூறலாம். ஆக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலுமான நிலைகளைக் கொண்டு பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் இடைவிடாத இயக்கத்தில் வளர்ச்சியில் ஒன்றிணைப்பில் செயல் படுவதாக உள்ளது.

கம்பனுடைய சமுதாயக் கருத்துக்கள் உயர்வான தத்துவ நிலை கொண்டவைகளாகும். கம்பன் தனது உயர்ந்த மனித நேய சிந்தனையில் கூற்றம் இல்லாத, சீற்றம் இல்லாத, இழி தகவு இல்லாத, ஆற்றலும் நல்லறமும் நிறைந்த சமுதாயத்தை அடையாளம் கண்டுள்ளார். வன்மை இல்லாத, செறுநர் இல்லாத, உண்மையும் பொய்யுமில்லாத கருமையும் வெண்மையும் இல்லாத ஒரு சமுதாயத்தை அயோத்தியில் கண்டிருக்கிறார்.

கொள்வார்கள் இல்லாமலும் கொடுப்பார்கள் இல்லாமலும் கள்வர்கள் இல்லாமலும், காவல் தேவையில்லாமலும் உள்ள சமுதாயத்தைக் கம்பன் தனது மகா காவியத்தில் காண்பித்துள்ளார். இன்னும் இல்லாமையும் கல்லாமையும் நீங்கி, கல்வியும், செல்வமும் பெருகி, எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் பெற்றுள்ளதால் இல்லாரும் இல்லாத, உடையார்களும் இல்லாத ஒரு உயர்ந்த சமுதாயத்தைக் கல்வி முளைத்து, எண்ணில் கேள்விகள் திண்பனை

போக்கி, அரும் தவத்தின் சாகம் தழைத்து அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து போகம் பழுத்த உன்னதமான ஒரு அரசியலை ஒரு அறநெறியிலான சமுதாயத்தைக் கம்பன் என்னும் மானுடன் மகா கவிஞன் தனது தனிப் பெரும் காவியத்தில் நமக்குப் புலப் படுத்தியுள்ளார்.

கம்பன் தசரதனுடைய அரசைப் பற்றியும் அரசாட்சியைப் பற்றியும் உயர்வான கருத்துக்களைக் கூறுகிறான். அயோத்தி நகரைப் பற்றி,

“தங்குபேர் அருளும் தருமமும் துணையாத்
தம்பகைப் புலன்கள் ஐந்து அவிக்கும்
பொங்கு மாதவமும் ஞானமும் புணர்ந்தோர்
யாவர்க்கும் புகலிடமான
செங்கண் மால் பிறந்து ஆண்டு அளம்பருங் காலம்
திருவில் வீற்றிருந்தமை தெளிந்தால்
அம்கண் மாஞாலத்து இந்நகர் ஒக்கும்
பொன்னகர் அமரர் நாட்டு யாதோ?”

என்று கம்பன் கூறுகிறார்.

தசரதன் தனது நாட்டு மக்களுக்கு அன்பு செலுத்துவதில் தாயைப் போன்றவன். நலம் பயப்பதில் தவத்திற்கு ஒப்பாவான். நோய்க்கு மருந்தாவான். எல்லோருக்கும் உதவும் அறிவை ஒப்பான் என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

பொதுவாக வெள்ளமும், பறவையும், விலங்கும், வேசையர் உள்ளமும் ஒரு நிலையில் நிற்காது. ஒரு திசையில் செல்லாது என்பதை அறிவோம். ஆனால் அவையும் கூட ஒரு வழியில் ஓட நின்றவன், தசரதப் பெயர் வள்ளல் என்று கம்பன் கூறுகிறார்.

“தாய்ஒக்கும் அன்பில், தவம் ஒக்கும்
நலம் பயப்பின்
சேய் ஒக்கும் முன் நின்று ஒரு செல்கதி
உய்க்கும் நீரால்

நோய் ஒக்கும் என்னில் மருந்து ஒக்கும்
நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்
கும் அன்னான்."

என்றும்,

"வெள்ளமும், பறவையும், விலங்கும் வேசையர்
உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன்
தள்ளரும் பெரும் புகழ்த்தயரதப் பெயர்
வள்ளல், வள் உறை அயில் மன்னர் மன்னனே!"

என்பது கம்பனின் கவிதைகளாகும்.

"செயிர் இலா உலகினில் சென்று நின்று வாழ் உயிர் எலாம் உறை வதோர் உடம்புமாயினாள்" என்று கம்பன் கூறுவது காலத்தைத் தாண்டிய புதுமையான அரசியல் கருத்தாகும்.

மன்னராட்சி காலத்தில், குறிப்பாகக் கம்பன் காலத்திலும் மக்களை உடம்பாகவும் மன்னனை உயிராகவும் ஒப்பிட்டுக் கூறி வந்த கருத்தை மாற்றிக் கம்பன் மக்களை உயிர் என்றும் மன்னனை உடம்பென்றும் மக்களுக்கு முதலிடத்தையும் உயர்வான இடத்தையும் கொடுத்துக் கம்பன் தனது காவியத்தில் புதுமை செய்து புதிய கருத்தை எடுத்துக் கூறுகிறான்.

ஒரு எளிய உழவன் தனது சிறிய வயலை எப்படி இரவும் பகலும் கவனித்து பண்படுத்திப் பயிரிட்டுப் பாதுகாத்து வருவாரோ, அதே போல கருத்தோடு கவனத்தோடு இரவும் பகலும் தனது நாட்டை தனது அரசியலை அரசன் காத்து வந்தான் என்று தசரதனுடைய ஆட்சியைக் கம்பன் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

இவ்வாறு கவிச் சக்கரவர்த்தி கம்பன் தனது நுட்பமான அரசியல் கருத்துக்களைத் தனது மகா காவியத்தில் பளிச்சிடும் ஒளிக் கதிர்களாக எடுத்துக் கூறுவதைக் காலமெல்லாம் படித்துப் படித்து இன்புறலாம். நமது அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். நமது வாழ்க்கைக்கும் செயல் பாடுகளுக்கும் வழி காட்டியாகக் கொள்ளலாம். கம்பன் வாழ்க. கம்பனுடைய மகா காவியம் வாழ்க. கம்பன் வளர்த்த தமிழ் வாழ்க.

* * *

# 6. கம்பனும் தமிழும்

கல்வியில் பெரியவன் கம்பன். தமிழில் இராமாயணக் கதையை பெரும் தமிழ்க் காவியமாகப் பாடியுள்ளார் அவர். கம்பன் தமிழ்ப் பற்று மிக்கவர். தமிழ் மொழியை உயர்த்திப் பாடியிருக்கிறார். கம்பனால் தமிழ் வளர்ந்திருக்கிறது. தமிழ் மொழிவளம் பெற்றிருக்கிறது. சொல்வளம், பொருள்வளம் பெற்றிருக்கிறது. கம்பன் தமிழின் சிறப்பை, தமிழ் நாட்டின் சிறப்பை, தமிழகத்தின் தனிச் செல்வமான பொன்னியின் சிறப்பைப் பாடியிருக்கிறார். கம்பன் தனது இராமாவாதாரக் காவியத்தில் கதை முழுவதிலும் பல இடங்களிலும் தமிழையும் தமிழின் பெருமையையும் பல பாடல்களிலும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். கம்பன் தனது இராமனை தென் சொல் (தமிழ்ச் சொல்) கடந்தவனாகப் பாடியுள்ளார்

கம்பன் அயோத்தியைப் பாடும் போதும், மிதிலையைப் பற்றிக் கூறும் போதும், கிட்கிந்தையைக் காட்டும்போதும், சீதையைத் தேடும் போதும் இலங்கையை எரிக்கும் போதும், சஞ்சீவி மலையை (மருத்துவ மாமலையை) எடுக்கச் செல்லும் போதும், தமிழைக் காட்டி, தமிழைக் கூறி, தமிழ் மணத்தைப் பரப்புகிறார். கம்பனுடைய மகா காவியத்தில் தமிழை வளர்த்த அகத்திய மாமுனி மிக்க மரியாதையுடன் சிறப்பித்துக் கூறப்படுகிறார்.

கம்பன் கங்கையின் பெருக்கைக் கூறும் போதும் இராமன் வனத்தில் கடந்து செல்லும் மலைகளையும் காடுகளையும் பற்றிக் கூறும் போதும் தமிழையும் பொன்னியின் சிறப்பையும் சுட்டிக் காட்டிப் பாடுகிறார்.

அகத்திய முனிவரைப் பற்றிக் கூறும் போதும், சேது அணை கட்டுவதைக் கூறும் போதும் கம்பனது தமிழ் உள்ளம் களிப்போடு வெளிப்படுகிறது. கம்பன் காட்டும் அணிகள் எல்லாம் தமிழ் அணிகளாகத் தான் இருக்கின்றன.

அவையடக்கம் கூறுவது தமிழ்க் கவிஞர்களின் மரபாகும். கம்பன் தனது அவையடக்கத்தில் முத்தமிழ் துறையின் முறை போகிய உத்தமர்களுக்கு ஒன்று கூறுகிறான்.

"முத்தமிழ் துறை போகிய
உத்தமக் கவிஞர்க்கு ஒன்று உணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெருபவோ"

முத்தமிழ்த் துறையின் முறை போகியவர்களை உத்தமக் கவிஞர்கள் என்று கம்பன் குறிப்பிட்டிருப்பது, அவர் தமிழுக்குக் கொடுக்கும் சிறப்பாகும். தமிழ் மீதுள்ள தமிழ்ப் பற்றினால் பெரு மதிப்பினால் முத்தமிழ் அறிந்தவர்களை உத்தமக் கவிஞர் என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

கம்பன் தமிழ்ப் பாவினால் இராமாயணத்தை உணர்த்திய பண்பு மிகச் சிறந்த பண்பாகும்.

"தேவ பாடையில் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவினார் உரையின் படி நான் தமிழ்ப்
பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ!"

என்று தமிழைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

கம்பன் கோசல நாட்டின் சரயு நதியின் சிறப்பைப் பற்றிக் கூறும் போது,

"முல்லையைக் குறிஞ்சி யாக்கி
மருதத்தை முல்லையாக்கி
புல்லிய நெய்தல் தன்னைப்
பொரு அறு மருதம் ஆக்கி"

என்று குறிப்பிடுகிறார்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நிலத்தை நால்வகையாகப் பிரித்து அவைகளின் வளத்தையும் வனப்பையும் மக்களையும் அவர்களின் பண்புகளையும் ஆராய்வது தமிழ்ப் பண்பாடாகும், தமிழ் மரபாகும். வால்மீகியில் இது வழக்கமில்லை.

"வரம் பெரம் முத்தம்" என்றும் "பரம்பெலாம் பவளம்" என்றும் கம்பன் கூறும் போதும் முத்துக்களும் பவளங்களும் தமிழ் நாட்டிற்கே உரித்தானது என்பதை நினைத்தே கூறியுள்ளார்.

"முந்து முக்கனியும்" என்று கம்பன் கூறுகிறார். முக்கனி என்பது தமிழ் நாட்டிற்குரிய மா,பலா,வாழையாகும். இதை உணர்த்துவதாகவே கம்பன் முக்கனி என்று குறிப்பிடுள்ளார்.

தாடகை வசித்து வந்த பாலைவனத்திற்கு இராம இலக்குவர்களை அழைத்துச் கொண்டு விசுவாமித்திர மாமுனி வந்தார். அந்த இடத்தின் வரலாற்றைப் பற்றி முனிவன் அரச குமாரர்களிடம் எடுத்துக் கூறுகிறான். அது அகத்தியன் தவம் செய்த இடம். அகத்தியன் சாபத்தால் தாடகையும் அவளுடைய மைந்தர்களும் அரக்கர்களாயினர் இதைப் பற்றிக் கம்பன்

"தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன்
உமிழ் கனல் வழி வழி ஒழுக, உங்கரித்த
அழிவன செய்தலால் அரக்கர் ஆகியே
இழிகென உரைத்தனன் அசரி எஞ்சவே"

என்று கூறுகிறார்.

இதில் தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன் என்று அகத்தியனைப் பற்றிக் கம்பன் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். இங்கு அளவிட முடியாத ஆழமும், அகலமும் காண முடியாத பெருங்கடலைப் போன்ற தமிழ் மொழியையும் அம்மொழிக்கான இலக்கணத்தையும் வகுத்தவன் என்று பெருமையோடு கம்பன் அகத்திய முனியைக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

விஸ்வாமித்திரன் தனது வேள்வியை முடித்துக் கொண்டு இராம இலக்குவர்களைத் தன்னுடன் மிதிலையை நோக்கி அழைத்துச் செல்கிறான். வழியில் கங்கை நதியைக் காண்கின்றனர். கங்கை நதியின் சிறப்பு பற்றி முனிவரிடம் இராமன் கேட்கிறான். கங்கையின் சிறப்பைப் பற்றிக் கூறும் போது அது காவிரியைப் போல இருந்தது என்று முனிவன் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார். இது கம்பருடைய கவிதை வரிகள்.

"அங்கு நின்றெழுந்து அயன் முதல் மூவரும்
அனையார்,
செங்கண் ஏற்றவன் செறி சடைப் பழுவத்
தின் நிறைதேன்
பொங்கு கொன்றை ஈர்த்து ஒழுகலால்
பொன்னியைப் பொருவும்
கங்கை என்னும் அக்கரை பொரு திரு நதி
கண்டார்."

பொன்னியைப் போன்ற கங்கை என்னும் இரு கரை பொருந்திய திருநதியைக் கண்டனர் என்று கம்பர் கூறுகிறார்.

விசுவாமித்திர மாமுனிவர் இராம இலக்குவர்களை அழைத்துக் கொண்டு மிதிலைக்குச் செல்கிறார். மூவரும் மிதிலை நகரை அடைந்தனர். மிதிலை நகரின் அழகைக் காண்கின்றனர். அந்நகரின் மாடவீதிகளையும் அரண்மனை மதில்களையும் கண்டு களிக்கின்றனர். கடை வீதிக்கு வருகின்றனர். அக்கடை வீதி எப்படி இருக்கிறது? அதைக் கம்பன் விரிவு படக் கூறுகிறார். ஏராளமான பொருள்களைக் கொண்ட பல கடைகளும் இருந்தன. அந்தக் கடைகளில் மணிகளும், பொன்னாலான பொருள்களும், ஆரமும் கவரி வாலும் அகிலும் மயில் தோகைகளும் யானைத் தந்தங்களும் மற்ற பொருள்களும் நிறைந்திருந்தன. இந்தக் கடைகள், ஏராளமான பொருள்களை அள்ளிக் கொண்டு வரும் காவிரி நீரிப் பெருக்கைப் போன்றிருந்தது என்று கம்பன் கூறுகிறார். ஆற்றில் புது வெள்ளம் வரும் போது அவ்வெள்ளம் பலவிதமான பொருள்களையும் அள்ளிக் கொண்டு வருமல்லவா? அதை ஒப்பிட்டுக் கம்பன் மிக அழகாகப் பேசுகிறார்.

"வரப்பு அறுமணியும் பொன்னும் ஆரமும்
கவரி வாலும்
சுரத்திடை அகிலும் மஞ்ஞைத் தோகையும்
தும்பிக் கொம்பும்
குரப்பு அணை நிரப்பும் மன்னர் குவிப்புறக்
கரைகள் தோறும்
பரப்பிய பொன்னி அன்ன ஆவணம் பலவும்
கண்டார்"

இவ்வாறு மிதிலை நகரத்துக் கடை வீதிகளுக்குப் பொன்னி நதியின் கரைகளை உவமையாகக் கம்பன் எடுத்துக கூறுகிறார்.

இராமனுக்கு முடிசூட்டுவதற்குத் தசரதன் தீர்மானித்தான். அதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடந்தன. ஆனால் முடிசூட்டு விழா தடை பட்டது. இராமனுக்கு நாடு இல்லை. காடு செல்ல வேண்டும் என்று முடிவாயிற்று. இலக்குவனிடம் இந்தச் செய்தியைக் கூறி இராமன் காட்டுக்குச் செல்லத் தயாராகிறான். இதைக் கேட்ட இலக்குவன் கடும் சீற்றம் கொண்டான். கோபத்துடன் இராமனுடன் வாதாடினான். இலக்குவனை சமாதானப் படுத்த இராமன் பல வாதங்களையும் எடுத்துக் கூறுகிறான்.

> “நன் சொற்கள் தந்தாண்டு எனை நாளும்
> வளர்த்த தாதை
> தன் சொல் கடந்து எற்கு அரசாள்வது
> தக்க தன்றால்
> என் சொல் கடந்தால் உனக்கு யாதுளது
> ஈனம் என்றான்
> தென் சொல் கடந்தான் வட சொற்கலைக்கு
> எல்லை தேர்ந்தான்.”

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இதில் தென் சொல் என்பது தமிழும் வட சொல் என்பது சமஸ்கிருத மொழியுமாகும். இங்கு கம்பன் இராமனைப் பற்றி “தென் சொல் கடந்தான், வட சொற்கலைக்கு எல்லை தேர்ந்தான்” என்று குறிப்பிடுகிறார்.

தந்தை சொல் மீறி அரசாள்வது தக்கதில்லை. தந்தை சொல்லையும் என் சொல்லையும் மீறினால் உனக்கு மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய் விடும், என்று இராமன் தனது தம்பியிடம் நீதிநெறியைப் பற்றிக் கூறும்போது இராமனைப் பற்றித் தென் சொல்லிலும் வட சொல்லிலும் அதாவது தென் மொழியிலும், வட மொழியிலும் தேர்ந்தவன் என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இராமன் தமிழ் மொழி அறிந்தவன் மட்டுமல்ல. அம்மொழியை நன்கு கற்றுக் கரை கடந்தவன். வடமொழி நூல்களையும் ஏராளமாகப்

படித்து அதற்கும் எல்லை கண்டவன் என்று கம்பர் கூறும் போது அதில் கம்பனுக்குத் தமிழ் மொழி மீதுள்ள ஆழ்ந்த பற்றைக் காட்டுகிறது. கம்பன் மொழி வேறு பாடியின்றி தென் மொழி – வடமொழிகளின் ஒற்றுமையை இராமன் மூலம் எடுத்துக் கூறியுள்ளதையும் காணலாம். கம்பன் தமிழையும் (தென் மொழியையும்) சமஸ்கிருதத்தையும் (வட மொழியையும்) நன்கு கற்றவன். கம்பனுடைய இராமனும் இரு மொழிகளிலும் தேர்ந்தவன். இரு மொழிகளிலும் உள்ள அறிவுச் செல்வங்கள் அனைத்தும் இணைந்து நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்கு பயன் பட வேண்டும் என்னும் கொள்கையைக் கம்பன் இராமன் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் சித்திர கூட மலைப் பகுதிக்கு வந்து சேர்ந்தான். அந்த மலைப் பகுதியின் இயற்கைக் காட்சிகளின் அழகை இராமன் சீதைக்கு எடுத்துக் காட்டிப் பேசுகிறான்.

“குழுவு நுண் துளை வேயினும் குறி நரம்பு எறிவுற்று
எழுவு தண் தமிழ் யாழினும் இனிய சொல் கிளியே
முழுவதும் மலர் விரிந்த நாள் முருக்கிடை மிடைந்த
பழுவம் வெம் கனல் கதுவியது ஒப்பன பாராய்! ”

என்று இராமன் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

மிகவும் பொருத்தமான சிறிய துளைகளைக் கொண்ட குழலிலிருந்து வரும் இனிய ஓசையைக் காட்டிலும் குறிப்பிட்ட நரம்புகளைக் கொண்ட தமிழ் யாழிலிருந்து எழும் இனிய இசையைக் காட்டிலும் இனிய குரலுடன் கூடிய சொற்களைக் கொண்ட கிளியைப் போன்ற சீதையே என்று இராமன் குறிப்பிடுவதாக கம்பன் மிக அழகாக வர்ணிக்கிறார். இதில் யாழிசையைப் பற்றிக் குறிப்பிடும் போது அந்த யாழைத் தமிழ்யாழ் என்று கம்பன் குறிப்பிடுவதில் தமிழின் இனிமையைக் கம்பன் சிறப்பித்துக் கூறுகிறார் என்பதையும், அவன் தமிழின் இனிமையைத் தன் உள்ளத்தில் கொண்டிரு–ப்பதையும் காட்டுகிறது. தமிழின் இனிமையைக் கம்ப ராமன் எப்போதும் தன் நினைவில் தன் உள்ளத்தில் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

பரதன் அயோத்திக்குத் திரும்புகிறான். நகரத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், இராமன் காட்டிற்குச் சென்று விட்டச் செய்தியையும் அறிந்தான். அதைக் கேள்வியுற்றுப் பெரும்துயரம் அடைந்து அலறினான், புலம்பினான். இராமனைத் திரும்பவும் அயோத்திக்கு அழைத்து வருவதற்குப் பரதன் தனது பரிவாரங்களுடனும் சேனைகளுடனும் இராமன் இருக்கும் காட்டிற்குப் புறப்படுகிறான். அயோத்தியின் சேனைப் பெருக்கைப் பற்றி அதைத் தமிழ்த் தலைவனுக்கு ஒப்பிட்டுக் கம்பன் கூறுகிறார்.

"அலைநெடும் புனல் அறக்குடித்தலால் புவி
நிலைபெற நிலை நெறி நிறுத்தலால் நெடு
மலையினை மண்ணுற அழுத்தலால் தமிழ்த்
தலைவனை நிகழ்த்தது அத்தயங்கு தானையே."

பரதனுடன் புறப்பட்ட நிறைவான சேனை அகத்திய முனிக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. இங்கு கம்பன் அகத்தியனைத் தமிழ்த் தலைவன் என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

அகத்தியன் அலைகள் நிறைந்த கடலின் (புனலின்) நீர் முழுவதையும் குடித்தான், உலகம் முழுவதையும் ஒரு நிலையில் ஒழுங்கு படுத்தி நிலை நிறுத்தினான், நெடு மலையை மண்ணாகும் படி அழுத்தினான் என்ற அவனுடைய சாதனைகளைப் பற்றி நமது கதைகள் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. அந்தக் குருமுனி அகத்தியர் பெருமான் தமிழைத் தந்தவன், தமிழுக்கு இலக்கணம் தந்தவன். அதனால் அகத்தியர் பெருமானைக் கம்பன் தமிழ்த் தலைவன் என்று குறிப்பிடுகிறார்.

அந்தத் தமிழ்த் தலைவனான அகத்தியன் கடலையும், நிலத்தையும் மலைகளையும் தனது சக்தியால் ஒழுங்கு படுத்தி நிலை நிறுத்தியதைப் போல அத்தலைவனுக்கு ஒப்பாகப் பரதனுடைய பெரும் படைகளும் உலகை நெறிப்படுத்தி நிலை நிறுத்தியது என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

பரதன் தனது படை பரிவாரங்களுடன் கங்கைக் கரையை அடைந்தான். அதைக் கம்பன்,

"பூவிரி பொலன் கழல் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடு ஒரீ இத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்"

என்று கூறுகிறார்.

காவிரி நாட்டைப் போன்ற வயல் வெளிகள் சூழ்ந்த செழிப்பு மிக்க நாட்டைப் போன்ற சிறப்புகளைக் கொண்ட கங்கைக் கரையைப் பரதன் தன் படை பரிவாரங்களுடன் அடைந்தான் என்று கம்பன் கங்கையின் சிறப்புக்கும் செழிப்புக்கும் காவிரியை ஒப்பிடுகிறார்.

இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் தண்டக வனத்தைக் கடந்து அகத்திய முனிவர் உறையும் சோலையை அடைந்தான். இங்கு அகத்தியன் பெருமையைக் கம்பன் சிறப்பாகப் பேசுகிறார்.

## அகத்தியன் பெருமை

ஆரண்ய காண்டத்தில் அகத்தியப் படலத்தில் அகத்தியனுடைய பெருமையுடன் இணைத்துத் தமிழின் பெருமையை மிகவும் சிறப்பாகக் கம்பன் விவரித்துக் கூறுகிறார்.

"ஆண் தகையர் அவ்வயின் அடைந்தமை அறிந்தான்
ஈண்டு வகை வேலை துணை ஏழுலகம் எய்த
மாண்ட வரதன் சரண் வணங்க எதிர் வந்தான்
நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்"

இராம இலக்குவர்கள் அங்கே வருகிறார்கள் என்பதை திருமால் உலகைத் தனது கால்களால் அளந்ததைப் போல உலகைத் தமிழால் அளந்த அகத்தியன் அறிந்து, தன்னை வணங்கும் வகையில் இராமபிரானுக்கு எதிரில் வந்தான் என்று கூறுகிறார் கம்பன்.

திருமால் வாமனாவதாரத்தில் குறுவடிவத்தில் சென்று தானம் பெற்றுப் பெருவடிவம் எடுத்து உலகைத் தனது காலடிகளால்

அளந்தான். அதுபோல குறுமுனி அகத்தியன் தமிழால் தனது தமிழறிவால் உலகை அளந்தவன் என்று கம்பன் குறிப்பிடுகிறார். அத்துடன் நீண்ட தமிழ் என்று கூறும் போது திரி விக்கிரமனுடை வளர்ந்து கொண்டேயிருந்த பெருவடிவம் கொண்டிருந்த காலடிகளைப் போல நீண்டு கொண்டே உள்ள பெருவடிவத்தைக் கொண்ட தமிழ் என்று குறிப்பிட்டு தமிழுக்கு எவ்வளவு பெருமையைத் தறுகிறான் கம்பன் என்பதைக் காணலாம். அத்தகைய தமிழுக்குரியவன் அகத்தியன் என்று கூறி மேலும் கம்பன் கூறுகிறார்.

“உழக்கு மறை நாலினும் உயர்ந்து உலகம் ஓதும்
வழக்கினும் மதிக்க வியினும் மரபின் நாடி
நிழற் பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்,”

“கண்டனன் இராமனை வரக் கருணை கூரப்
புண்டரிக வான் நயனம் நீர் பொழிய நின்றான்
எண் திசையும், ஏழ் உலகும், எவ்வுயிறும் உய்யக்
குண்டிகையினில் பொருவில் காவிரி கொணர்ந்தான்,”

“நின்றவனை வந்த நெடியோன் அடி பணிந்தான்
அன்றவனும் அன்போடு தழீஇ அழுத கண்ணான்
நன்று வரவு என்று பல நல்லுரை பகர்ந்தான்
என்றும் உள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்.”

இவ்வாறு அகத்திய முனிவருடைய தனிப் பெருமைகளைத் தமிழின் பெருமைகளுடன் இணைத்துக் கம்பன் கூறியிருப்பது அவன் தமிழுக்குக் கொடுத்தத் தனிச் சிறப்பாகும்.

சிவபெருமான் நெருப்பின் ஒளி வடிவம் கொண்டவன், நெருப்பைக் கக்கும் சிவந்த நெற்றிக் கண்ணையுடையவன், ஒளி பொருந்திய மழுப்படையைக் கொண்டவன். அப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்ட ஒளிமிக்க சிவபெருமான் அகத்திய முனிவர்

பெருமானுக்குத் தமிழைத் தந்தான். தமிழ் மொழியைப் படைத்தவன் சிவன். அதனால் தமிழ் தெய்வத்தமிழ் என்ற பெயர் பெற்றது. சிவன் தென்னாடுடைய சிவன் என்ற பெயர் பெற்றார். அத்தகைய சிவபெருமான் தமிழை உருவாக்கி, அத்தமிழை அவன் அகத்தியனுக்குச் சொல்லிக் கொடுத்து, அவ்வகத்தியன் அத் தமிழுக்கு இலக்கணம் வகுத்து வளர்த்தான் என்றும் நமது கதைகள் குறிப்பிடுகின்றன. இனி, அவ்வகத்தியன் பெருமை அத்துடன் மட்டுமில்லை, அம்மாமுனி, நான்கு வேதங்களையும் வருந்திக் கற்றவன். நுட்பமாகக் கற்றவன். வேதங்கள் வேதமொழியில் உள்ளன. வேதங்கள் நான்கு. அவைகளை அகத்தியன் மிகவும் கவனமாகக் கற்றுத் தெளிந்தவன். அதனால் அறிவில் வளர்ச்சி பெற்று உயர்ந்தவன். அத்துடன் உலக வாழக்கையை நன்கு அறிந்து அனுபவம் பெற்றவன். மரபு வழியில் கவிபாடும் திறன் கொண்டவன். அப்படிப்பட்ட குறுமுனி அகத்தியருக்குச் சிவபெருமான் சிறந்த தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்தான் என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

இங்கு கம்பன் சாத்திர அறிவையும், நடைமுறை / செயல் பாடுகளின் மூலம் வளர்ந்துள்ள உலக மக்களின் அனுபவ அறிவையும் நாட்டின் உன்னதமாக் மரபுகளின் வழியில் வளர்ந்துள்ள சிறப்பான அறிவுத் திறன்களையும், கவிபாடும் தனித்திறன்களையும் இணைக்கிறார். இவ்வாறாகக் கம்பன் அறிவு, அனுபவம், திறன், மரபு ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு முகப்படுத்தும் காட்சியைப் பல இடங்களிலும் தனது காவியத்தில் காட்டுகிறார். கம்பனுடைய இந்தக் கருத்துக்கள், அறிவின் தத்துவத்தின் உயர்ந்த வளர்ச்சி நிலையாகும்.

அகத்தியன் இராமனைக் கண்டவுடன் மகிழ்ச்சியினால் ஆனந்தக் கண்ணீர் பொங்கினான். இங்கு அகத்தியனின் பெருமையைப் பற்றிக் கூறும் போது அவர் தனது கமண்டலத்தின் மூலம் காவிரியைக் கொண்டு வந்தவர் என்று கம்பன் குறிப்பிடுகிறார். காவிரி தெய்வத் திரு நதியாகும். எண் திசையும் ஏழு உலகங்களும் இவ்வுலகங்களில் உள்ள உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்காக அகத்தியன் தனது கமண்டலத்தின் மூலம் காவிரியைக் கொண்டு வந்தான் என்று காவிரியின் சிறப்பையும் தமிழ் வளர்த்த குறு முனியின் சிறப்பையும் இணைத்துக் கம்பன் மிகவும் சிறப்பாகத் தனது கவிதைகளில் குறிப்பிடுகிறார்.

தமிழ் முனிவன் அகத்தியனை இராமன் வணங்கினான். முனிவனும் இராமனுக்கு நல்வரவு கூறினான். இங்கு அகத்தியனைப் பற்றிக் குறிப்பிடும் போது "என்றும் உள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்று கம்பன் சிறப்பித்துக் கூறுகிறார்.

தமிழ் மொழி என்றும் நிரந்தரமாக நிலை கொண்டுள்ள மொழியாகும். அத்தென் தமிழை இலக்கணத்துடன் இசைத்தவன் அகத்திய முனிவன். தமிழ் மொழியின் இலக்கணத்திற்கு ஒரு தனித் தன்மையும் தனிச் சிறப்பும் உண்டு. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து அங்கங்களையும் கொண்டது தமிழ் இலக்கணமாகும்.

அகத்தியன் இராமனை வரவேற்று நல்வரவு கூறித் தன் சோலையிலேயே தங்கும்படி கூறுகிறான். "இங்கு எல்லா வசதிகளும் உள்ளன. இனிய கனிகளைக் கொடுக்கும் அழகிய வாழை மரங்கள் உள்ளன. போதுமான நெல் விளைகிறது. மலர்கள் நிரம்பியுள்ள பூச்செடிகள் உள்ளன. அதிலிருந்து நல்ல தேன் கிடைக்கும். பொன்னியைப் போன்ற நல்ல நீரையுடைய ஆறு உள்ளது. உன் இன் துணைவி சீதையுடன் மகிழ்ந்து விளையாடுவதற்கு நாரைகளும் அன்னங்களும் இருக்கின்றன" என்று கூறுகிறான். இங்கு ஆற்று வளத்தைப் பற்றிக் கூறும் போது பொன்னியைப் போன்ற நீர் வளம் உள்ள நாடு என்று அகத்தியன் குறிப்பிடுகிறார். கம்பனுக்கும் பொன்னிக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. கம்பன் பொன்னியை எப்போதும் மறப்பதில்லை என்பதை இப்பாடல் காட்டுகிறது.

"கன்னி இள வாழை கனி ஈவ, கதிர் வாலின்
செந்நெல் உள, தேன் ஒழுகு போதும் உள தெய்வப்
பொன்னி எனல் ஆய புனல் ஆறும் உள போதா
அன்னம் உள, பொன் இவளொடு அன்பின் விளையாட"

என்பது கம்பன் கவிதை.

இப்பாடலில் கம்பன் தெய்வப் பொன்னி எனக் குறிப்பிடுவது சிறப்பானதாகும். மேலும் கம்பன் தென்றலைப் பற்றிக் குறிப்பிடும் போது கூட தண்தமிழ்த் தென்றல் என்று ஒரு பாடலில்

குறிப்பிடுவதைக் காண்கிறோம். தமிழ்த் தென்றல் குழுமையானது, இனிமையானது.

இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடிப் பம்பைக் கரையை அடைந்தனர். பம்பையின் சிறப்பைக் கம்பன் கூறுகிறார். அதில்,

"ஆரியம் முதலிய பதினெண் பாடையின்
பூரியர் ஒரு வழிப் புகுந்ததாம் என"

என்று குறிப்பிடுகிறார். கம்பனும் தன் காலத்தில் பாரதத்தில் இருந்த பதினெட்டு பாரத மொழிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்தப் பல மொழிகள் பேசும் மக்களின் ஒற்றுமையைக் குறிப்பிடுகிறார்.

பம்பைப் பொய்கைப் பகுதி மிகவும் அழகுள்ள இடமாகும். இராமனும் இலக்குவனும் அங்கு தங்கியிருந்த போது இராமன் சீதையின் நினைவால் வருந்துகிறான். புலம்புகிறான். அந்தப் புலம்பலிலும் கூடக் கம்பன் தமிழையும் தமிழ்ப் பாட்டையும் குறிப்பிடும் அழகு மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

"பொன் பால் பொருவும் விரை அல்லி புல்லிப்
பொலிந்த பொலந்தாது
தன்பால் தழுவும் குழல் வண்டு தமிழ்ப் பாட்டு
இசைக்கும் தாமரையே!
என்பால் இல்லை, அப்பாலோ இருப்பார்
அல்லர் விருப்புடைய
உன்பால் இல்லை, என்றக் கால் ஒளிப்பா
ரோடும் உறவுண்டோ?"

என்று இராமன் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார். இங்கு தமிழ்ப் பாட்டு என்னும் சொல்லுக்கு இனிமையான பாட்டு என்றும் பொருள் கொள்ளலாம்.

சீதையைத் தேடும் படி சுக்கிரீவன் தன் படைகளுக்கு ஆணையிடுகிறான். மாருதி, அங்கதன், சாம்பவன் முதலியோரைத் தெற்கு நோக்கிச் செல்லுமாறு கூறுகிறான். அவ்வாறு தெற்கு நோக்கிச் செல்லும் போது முதலில் அருந்ததி மலையைக் காண்பீர்கள்.

அருந்ததி மலையைப் பற்றிக் கூறும் போது,

"அரன், அதிகன், உலகளந்த அரி அதிகன்
என்றுரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடை வரிய பரிசே போல்
புகல் அரிய பண்பிற்று ஆமால்"
"சுர நதியின் அயலது, வால் தோய்க் குடுமிச்
சுடர்த் தொகைய தொழு தோர்க் கெல்லாம்,
வரன் அதிகம் தரும் தகைய, அருந்ததி ஆம்
நெடுமலையை வணங்கி அப்பால்"

செல்லுங்கள் என்று சுக்கிரீவன் கூறுகிறான்.

இப்பாடல் மூலம் அரன் அதிகம், அரிஅதிகம் என்று வழக்காடும் சமய வேறுபாட்டைக் கம்பன் கண்டிக்கிறார். அடுத்து நீங்கள் இன்னும் தெற்கே செல்லும் போது திருவேங்கட மலையைக் காண்பீர்கள் என அம்மலையின் பெருமையினைக் கம்பன் மிகச் சிறப்பாகக் கூறுகிறார்.

"வட சொற்கும் தென் சொற்கும் வரம்பாகி
நான் மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட் கெல்லாம் எல்லையாய்
நல்லறிவுக்கு ஈறாய், வேறு
புடை சுற்றும் துணையின்றிப் புகழ் பொதிந்த
மெய்யே போல் பூத்து நின்ற
உடை சுற்றும் தண் சாரல் ஓங்கிய வேங்
கடத்தில் சென்று உறுதிர் மாதோ"

என்று நெஞ்சை அள்ளும் ஒரு அருமையான கவிதை நமக்கு முன் வருகிறது.

திருவேங்கட மலையை வடசொல்லுக்கும் தென் சொல்லுக்கும் எல்லையாகக் கம்பர் குறிப்பிடுகிறார். நான்மறைகள், மற்றும் இதர சாத்திர நூல்கள், இவைகளுக்கிடையில் கூறப் பட்டிருக்கும் அறிவுச் செல்வங்கள் அனைத்திற்கும் எல்லையாக புகழ் பொதிந்த மெய்யே

போல், திருவேங்கட மலை புகழோங்கி நின்றது என்று குறிப்பிட்டு விட்டு, "அங்கே நீங்கள் செல்ல வேண்டாம். அது புண்ணியமான இடம். அங்கு நீங்கள் சென்றால் உங்களுடைய பாவங்கள் நீங்கி மோட்சத்திற்குச் சென்று விடுவீர்கள். அப்போது சீதையைத் தேடும் வேலை நின்று விடும், எனவே அம்மலைக்குச் செல்ல வேண்டாம். அங்கிருந்து தெற்கே செல்லுங்கள்" என்று சுக்கிரீவன் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

திருவேங்கடத்தைக் கடந்து தொண்டை நாடு செல்லும் படியும் அதன் பின்னர் பொன்னி எனும் தெய்வத்திரு நதியின் இரு கரைகளிலும் சீதையைத் தேடுமாறும் சுக்கிரீவன் மாருதிக்கும் மற்றவர்களுக்கும் கூறுவதைக் கம்பன் குறிப்பிடும் போது பொன்னி நதிக்குக் கம்பன் கொடுக்கும் சிறப்பைக் காண்கிறோம்.

"கோடுறுமால் வரை அதனைக் குறு குதிரேல்
 உம் நெடிய கொடுமை நீங்கி
வீடுறுதிர், ஆதலினான் விலங்குதிர், அப்
 புறத்து நீர் மேவு தொண்டை
நாடுறுதிர், உற்றதனை நாடுறுதிர்
 அதன் பின்னை நளிநீர்ப் பொன்னிச்
சேருறு தண் புனல் தெய்வத்திரு நதியின்
 இருகரையும் தெரிதிர் மாதோ!"

என்பதும் கம்பர் பாடல்.

கம்பர் திருவேங்கடத்தை மிகவும் சிறப்பித்துப் பாடுகிறார். அம்மா மலை வட சொற்கும் தென் சொற்கும் எல்லை. நான் மறைக்கும் மற்றை நூலுக்கும் இடை சொற்ற பொருட்கெல்லாம் எல்லை. நல்லறிவுக்கு ஈறு. வேறு புடை சுற்றும் துணையின்றிப் புகழ் பொதிந்த மெய். சூத கற்றும் திருமறையோர் துறையாடும், சுருதித் தொன்னூல் மாதவத்தோர் உறைவிடம். மழை உறங்கும் மணித்தடம். வான மாதர் கீதம் ஒத்த கின்னரங்கள், இன்னரம்பு வருடு தொறும் கிளக்கும் ஓதை கொண்ட இரு சொல்லுக்கும் எல்லையான திருவேங்கடமலை என்று மிக அருமையாகக் கம்பர் தனது கவிதையில் குறிப்பிடுகிறார்.

அந்த மலையை விலக்கி நீர் மேவும் தொண்டை நாடு செல்லுங்கள். அதைக் கடந்து பொன்னி என்னும் சிறப்பு மிக்க தண்புனல் தெய்வத்திரு நதியின் இருகரைகளிலும் சென்று சீதையைத் தேடுங்கள் என்று கூறும் போது காவிரியைத் தண் புனல் தெய்வத்திரு நதியென்று கம்பன் பொன்னியின் சிறப்பை உச்சத்திற்குக் கொண்டு போயிருக்கிறார்.

"துறக்கம் உற்றார் மனமென்னத் துறகெழு நீர்
சோணாடு கடந்தால், தொல்லை
மறக்கம் உற்றார் அதன் அயலே மறைந் துறை வர்
அவ்வழி நீர் வல்லை ஏகி,
உறக்கம் உற்றார் கனவு உற்றார் எனும் உணர்வி
னாடும் ஒதுங்கி மணியார் ஓங்கல்
பிறக்கம் உற்ற மலை நாடு நாடி அகன்
தமிழ் நாட்டில் பெயர் கமாதோ!"

சோழ நாடு சென்று அதைக் கடந்து மலைநாடு நாடி அங்கிருந்து தமிழ்நாடு சேருங்கள் என்று கூறுகிறார். பாண்டிய நாட்டையே கம்பன் இங்கு தமிழ் நாடு என்று குறிப்பிடுகிறார். சங்கம் வளர்த்த காரணத்தால் பாண்டிய நாட்டைத் தமிழ்நாடு என்று கம்பர் பெருமை படக் குறிப்பிடுகிறார் போலும்,

மலைநாட்டைப் பற்றிக் குறிப்பிடும் போது யாரும் தங்கள் தொல்லைகளை மறப்பதற்காக இங்கு வந்து மறைந்து வாழ்வார்கள் என்று குறிப்பிடுகிறார். அத்தனை வளமும் அழகும் சிறப்பும் உள்ள நாடு மலைநாடு என்னும் சேர நாடாகும். அங்கிருந்து பாண்டிய நாடு செல்லவும் என்று குறிப்பிடுகிறார்.

"தென்தமிழ்நாட்டு அகன் பொதியில் திரு முனிவன்
தமிழ் சங்கம் சேர்கிற் பீரேல்
என்றும் அவண் உறை விடமாம் ஆதலினால்
அம்மலையை இறைஞ்சி ஏகிப்
பொன் திணிந்த புனல் பெருகும் பொருநையெனும்
திருநதி பின் பொழிய, நாகக்

கன்று வளர் தடம் சாரல் மயேந்திர மா
நெடுவரையும் கடலும் கண்டீர்"

என்று கம்பன் கவிதை பேசுகிறது.

தென் தமிழ் நாட்டில் உள்ள பொதிகை மலையில் அகத்தியன் தமிழ்ச் சங்கம் வைத்து தமிழ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அங்கு நீங்கள் போனால் தமிழின் இனிமையைக் கேட்டு, அகத்தியனுடைய தமிழ் சங்கத்தின் தமிழைக் கேட்டு, இன்புற்று, அந்த இனிமையில் மயங்கி அங்கேயே தங்கி விடுவீர்கள். சீதையைத் தேடும் பணியை மறந்து விடுவீர்கள். எனவே அப்பொதிகை மலையை நோக்கி ஒரு வணக்கம் செலுத்தி விட்டு அதைக் கடந்து பொன்னும் புனலும் பெருகி ஓடும் பொருனைத் திரு நதியை அடைந்து அதைக் கடந்து மகேந்திர மலையையும் கடலையும் சேரலாம் என்று வழி காட்டிச் சுக்கிரீவன் கூறுவதைக் கம்பன் சிறப்பாக தமிழின் இனிமையை வளத்தைப் பெருமையைக் கம்பன் உச்சத்திற்குக் கொண்டு செல்கிறார்.

சுக்கிரீவன் வழி காட்டியபடி அனுமன் தலைமையிலான வானர வீரர்கள் சீதையைத் தேடித் தென்திசையில் செல்கிறார்கள். இதைத் "தமிழுடைத் தென்திசை" என்று கம்பன் குறிப்பிடுகிறார். தென்திசையில் சென்றுள்ளவர்களின் செயல் திறனை எடுத்துக் கூறுவோம் என்பதற்கு "வண்தமிழுடைத் தென்திசைச் சென்றுளார் திறன் எடுத்து உரை செய்வோம்" என்று கவிஞர் கூறுகிறார்.

"குன்றிசைத்தன வெனக்குலவு தோள் வலியினார்
மின் திசைத்திடும் இடைக் கொடியை நாடினர் விராய்
வன் திசைப் படருமாறு ஒழிய வண் தமிழ் உடைத்
தென்திசைச் சென்றுளார் திறன் எடுத்து உரை செய்வாம்"

என்று கவிதை குறிப்பிடுகிறது.

தென்திசையில் சென்ற மாருதியும் மற்றவர்களும் ஒரு பாதாள நகரை அடைகின்றனர். அந்த நகரின் சிறப்பை வெகு விரிவாகக் கூற வந்த கம்பன் அங்கு ஏராளமான பொன்னும் ஆடைகளும் ஆபரணக் குவியல்களும் அளவில்லாமல் இருந்த வீடுகள் இருந்தன

என்று கூறுகிறார். அந்த வீடுகள் எப்படிப்பட்டவை? "புவி புகழ் சென்னி பேர் அபயன் தோள் புகழ் கவிகள் தன் மனைகள்" போன்றவை என உவமை கூறுகிறார். அபய குலோத்துங்க சோழனுடைய கவிஞர்களின் வீடுகள் அவ்வளவு செல்வம் கொழித்தன என்று உவமையாகக் கம்பன் எடுத்துக் கூறுவது அவனுடைய நாட்டுப் பற்றைக் காட்டுகிறது. இன்னும் அந்தப் பாதாள நகரில் அமிழ்தம் போன்ற சோறு நிறைந்த உணவுப் பொருள்களும் தேன், கள், கனிகள் முதலியனவும் கணக்கற்ற அளவில் குவிந்து கிடந்தன என்று குறிப்பிடும் போது தமிழைப் போன்ற சுவையுள்ள தேன் என்று கவிஞர் பெருமான் குறிப்பிடுவது நேர்த்தி மிக்கதாகும்.

"அமிழ்துறழ் அயினியை அடுத்த உண்டியும்
தமிழ் நிகர் நறவமும் தனித் தண் தேறலும்
இமிழ் கனிப் பிறக்கமும் பிறவும் இன்னன
கமழ்வுறத் தோன்றிய கணக்கில் கோட்பது"

என்பது கம்பன் கவிதையாகும்.

சுக்கிரீவன் குறிப்பிட்ட படி மாருதியும் அவருடன் சென்ற இதர வானர வீரர்களும் தொண்டை மண்டலம், சோழநாடு, தென் தமிழ்நாடு வழியாகச் செல்வதையும், வழியில் அவர்கள் கண்ட அந்த நாடுகளின் சிறப்பையும் கம்பன் கூறுகிறார்.

தொண்டை நல் நாட்டைப் பற்றிக் கம்ப நாடர் குறிப்பிடும் போது,

"செல்வர் என்றும் வடகலை தென் தமிழ்ச்
சொல் வரம் பினர் என்னும் சுமடரைக்
கொல்வர் என்றும் கொடுப்பனர் என்றும் அவ்
இல்வரம் பினர்க்கு ஈதேனும் ஈட்டதே?"

என்று கூறுகிறார். தொண்டை நாட்டில் வடமொழி தென் மொழி ஆகிய இரண்டிலும் வல்லவர்கள் நிறைந்திருந்தனர் எனக் கம்பன் குறிப்பிடுகிறார்.

அடுத்து சோழ நாட்டின் சிறப்பைக் கூறுகிறார்,

"அன்ன தொண்டை நல்நாடு கடந்து அகல்
பொன்னி நாடு பொருவிலர் எய்தினர்
செந்நெலும் கரும்பும் கமுகும் செறிந்து
இன்னல் செய்யும் நெறி அரிது ஏகுவார் "

"தாறு நாறுவ தாழைகள் தாழையின்
சோறு நாறுவ தீம்பிழி மாங்கனி
நாறு நாறுவ நாறு வளர்க்குறும்
சேறு நாறுவ செங்கழு நீர் அரோ! "

இவ்வாறு கம்பன் சோழ நாட்டின் வளத்தைக் குறிப்பிடும் போது அவருடைய தமிழ் சொற்கள் பொங்கி எழுகின்றன. அதையடுத்து தென் தமிழ்நாட்டைப் பற்றிக் கூறும்போது கம்பனுடைய கவிதைகளின் சிறப்பு, தமிழின் தனிச் சிறப்புடன் கலந்து உச்சத்திற்குச் செல்கிறது. அதன் பின்னர் அங்கிருந்து மலைநாடு வழியாக தென் தமிழ்நாடு சென்றனர்.

"அனைய பொன்னி அகன் புனல் நாடு ஒரீஇ
மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம்
வினையின் நீங்கிய பண்பினர் மேயினார்
இனி தென் தமிழ்நாடு சென்று எய்தினார்."

சோழ வள நாட்டிலிருந்து இல்லறத்தின் பெருமை விளங்குகின்ற சேர நாட்டை அடைந்து அங்கிருந்து தென்தமிழ் நாடு அடைந்தனர்.

அந்த தென்தமிழ் நாடு எப்படியிருந்தது?

"அத்திருத் தகு நாட்டினை அண்டர் நாடு
ஒத்திருக்கும் என்றால் உரை ஒக்குமோ?
எத்திறத்தினும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்"

தென் தமிழ்த் திருநாட்டில் முத்தும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் நிறைந்திருப்பதால் எத்திறத்திலும் ஏழுலகும்

புகழ் ஓங்கி நிற்கும். அந்த நாட்டிற்கு ஈடு இணையேயில்லை. தேவலோகம் கூட அதற்கு ஈடாகாது. அதைக் காட்டிலும் சிறந்த நாடு என்று கூறலாம் என்று கம்பன் கூறுவது அவருடைய தமிழ் பற்றை உச்சத்திற்குக் கொண்டு செல்வதைக் காண்கிறோம்.

சீதை அசோக வனத்தில் சிறை வைக்கப் பட்டிருக்கிறாள். அனுமன் சீதையைத் தேடி அவள் இருக்குமிடத்தைக் கண்டு விட்டான். மரத்தின் மீது அமர்ந்து சீதையின் நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தான். அப்போது இராவணன் அங்கு வந்து சீதையைத் தனது விருப்பத்திற்கு இணங்குமாறு கூறிக் கொண்டிருந்தான். சீதை சீற்றம் கொண்டு அவனுக்குத் தக்க பதில் அளித்தாள்.

“தென் தமிழ் உரைத்தோன் முன்னாத் தீது
தீர் முனிவர் யாரும் –
புன் தொழில் அரக்கர்க்கு ஆற்றேம்! நோற்
கிலெம் புகுந்த போதே
கொன்று அருள்! நின்னால் அன்னார்
குறைவது சரதம் கோவே
என்றனர், யானே கேட்டேன், நீ அதற்கு
இயைவன செய்தாய்.”

என்று சீதை இராவணனைக் கடிந்து பேசியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

தென் தமிழுக்கு இலக்கணம் படைத்த அகத்தியன் முன்பு கூறினான். “அரக்கர் தொல்லை அதிகரித்து விட்டது. அவர்களைக் கொன்றொழித்துத் தீதில்லாத முனிவர்களைக் காப்பாற்ற வேண்டும் எனக் கூறினான். உன்னையும் கொன்று அதன் மூலம் அரக்கர் எண்ணிக்கையும் குறையப் போகிறது” என்று கூறுகிறாள். இங்கு தென்தமிழ் உரைத்தோன் கூறியதையும் கவனமான நினைவுடன் கூறுகிறாள்.

சேதுவைக் கட்டி வானரப்படைச் சேது வழியாகக் கடலைக் கடந்து சென்றதைப் பற்றிக் கூறும் போது கம்பன், அப்படையைக் காவிரியின் பெருக்கிற்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

“இரும் கவி கொள் சேனை, மணி ஆரம் இடறித்தன்
மருங்குவளர் தெண் திரை வயங்கு பொழில் மான
ஒருங்கு நனி போயின உயர்ந்த கரை ஊடே
கருங் கடல் புகப் பெருகு காவிரி கடுப்ப.”

காவிரி நீர் பெருக்கு, கடலுக்குள்ளே போனதைப் போல வானரப் படை கடலுக்குள் சேதுவின் மீது சென்றது எனக் கூறுகிறார். இன்னும்,

“ஓதிய குறிஞ்சி முதலாய நிலம் உள்ள
கோதில அருந்துவன, கொள்ளையின் முகந்துற்று
யாதும் ஒழியா வகை சுமந்து கடல் எய்தப்
போதலினும் அன்ன படை பொன்னி எனல் ஆன”

என்று கம்பன் தனது கவிதையில் குறிப்பிடுகிறார்.

குறிஞ்சி முதலிய பலவகை நிலங்களிலுமிருந்து உணவுப் பொருள்களையும் இதர பல பொருள்களையும் வாரிக் கொண்டு பொன்னி நதி கடலுக்கு வருவதைப் போல வானரப்படை, அப்படைக்குத் தேவையான பொருள்களை வாரிக் கொண்டு கடலைக் கடந்தது என்னும் மிக அருமையான உவமைக்குக் கம்பன் பொன்னியை எடுத்துக் கொண்டது அவருக்குத் தமிழ் மீதுள்ள ஆழ்ந்த பற்றினாலாகும்.

மாருதி மருத்துவ மலையைக் கொண்டு வர வடகோடிக்குச் சென்றபோது கம்பன் சுவர்க்கக் காட்சியைக் குறிப்பிட்டுக் கூறும் போது அது பொன்னி நாட்டைப் போல இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

“வன்னி நாட்டிய பொன் மௌலி வானவன்
மலரின் மேலோன்
கன்னி நாள் திருவைச் சேரும் கண்ணனும்
ஆளும் காணி
சென்னி நாள் தெரியல் வீரன் தியாக மா வினோ
தன் தெய்வப்
பொன்னி நாட்டு உவம வைப்பைப்புலன் கொள
நோக்கிப் போனான்”

என்று சுவர்க்க பூமியைப் பொன்னி நாட்டிற்கும் பொன்னி நாட்டை சுவர்க்க பூமிக்கும் ஒப்பிட்டுக் கம்பன் மிகப் பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

இந்திரசித்தன் நடத்திய நிகும்பலை யாகத்தை அழிப்பதற்கு இலக்குவனும் அனுமனும் வீடணனும் செல்லும் போது இராமன் இலக்குவனிடம் தற்காப்புக்கும் தாக்குதலுக்குமான புதிய போர்த் தந்திரங்கள் உத்திகள் பற்றிப்பல ஆலோசனைகளைக் கூறியும் புதிய வில், கவசம், அம்புக் கூடு முதலிய சக்திமிக்க ஆயுதங்களையும் தற்காப்பு சாதனங்களையும், சிவக்கணை, திருமால்கணை நான்முகன் கணை முதலிய தெய்வீகக்கணைப் பற்றியும், அவைகளைப் பிரயோகம் செய்வது பற்றியும் அவைகளிலிருந்துத் தற்காத்துக் கொள்வது பற்றியும் பல விவரங்களையும் கூறுகிறான். ஒரு புதிய சக்தி வாய்ந்த வில்லைக் கொடுத்ததில் அதில் தமிழ் முனி அகத்தியன் கொடுத்த வில் பற்றியும் அதைச் செயல் படுத்துவது பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

"இச்சிலை இயற்கை, மேல்நாள், தமிழ் முனி
இயம்பிற்று எல்லாம்
அச்சு எனக் கேட்டாய் அன்றே? ஆயிர மௌலி
அண்ணல்
மெய்ச்சிலை விரிஞ்சன் மூட்டும் வேள்வியின்
வேட்டுப் பெற்ற
கைச்சிலை கோடி என்று கொடுத்தனன்
கவசத்தோடும்"

என்று கம்பன் குறிப்பிட்டுள்ளார்.

இந்திரசித்தன் இறந்த பின்னர், மூலபலப் படையும் அழிந்த பின்னர் இராவணனே நேரில் போர்க் களத்திற்கு வந்து, முதல் நாளில் இலக்குவனை எதிர்த்துக் கடும் போர் நடத்தி அவனைச் சாய்த்து விட்டுப் போர்க்களத்திலிருந்து மாளிகை திரும்பி மகிழ்ந்திருந்தான். இலக்குவன் மீண்டும் மருந்தால் உயிர் பெற்று எழுந்தான். அதைக் கண்டு வானரப்படை ஆரவாரம் செய்தது. இலக்குவன் மீண்டும் உயிர் பெற்று எழுந்ததை ஒற்றர்கள் கூற இராவணன் முதலில் அதை நம்பவில்லை. பின்னர் நேரிலே

கண்டான். ஆச்சரியப் பட்டான். வானரப்படையின் ஆரவாரங்களை இராவணன் கேட்ட செய்திகளைக் கூறும் பாடல்களில் ஒன்று,

"குமுழி நீரோடும் சோரிக் கனலொடும் கொழிக்
கும் கண்ணான்,
தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை
வழங்கச் சாய்ந்தார்
அமிழ்பெரும் குறுதி வெள்ளம் ஆற்றுவாய்
முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும் வேலை ஓதம் வந்து
உடற்றக் கண்டான்."

என்று வில்லிலிருந்து இடைவிடாத அம்பு மழை பொழிவதை, அதாவது வற்றாத அம்புப் பெருக்கிற்கு அழியாத தமிழ் மரபை உவமையாகக் கம்பன் கூறுகிறார்.

இராமன் போர்க்களத்தில் இராவணனைக் கொன்று போர் முடித்து, வீடணனுக்கு முடிசூட்டிவிட்டு, சீதையை அழைத்துக் கொண்டு, விமானத்தில் அயோத்திக்குத் திரும்பும் போது பிராட்டிக்கு சேதுவையும், தமிழ் முனிவன் வைகும் இயல் தரு குன்றத்தையும் காவிரி முதலிய இதர நதிகளையும் காண்பித்துக் கொண்டு சென்றான். இதில் தமிழ் முனி உறையும் பொதிகை மலையைக் காட்டியதைக் கம்பன் குறிப்பிட்டுக் கூறுவது சிறப்பாகும்.

சேதுவைக் காட்டி அதன் பெருமையை இராமன், சீதைக்குக் கூறுகிறான்.

"மற்று இதன் தூய்மை எண்ணின் மலர் அயன்
தனக்கும் எட்டா
பொற்றொடிக் தெரிவை யான் என் புகலுகேன்
கேட்டி அன்பால்
பெற்ற தாய் தந்தையோடு, தேசிகர்ப் பிழை
த்துச் சூழ்ந்த
சுற்றமும் கெடுத்து ளோரும் எதிர்தரின்
சுரர்கள் ஆவார்."

இந்தச் சேதுவைக் காண்பவர்கள் தாய் தந்தை குரு சுற்றம் முதலியோருக்குத் தீங்கு செய்திருந்தாலும் பாவம் நீங்கிப் புண்ணியம் பெறுவர் என்று கூறுகிறான்.

இன்னும் சேதுவின் பெருமையை மேலும் கூறுகிறான். கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, காவேரி முதலிய தெய்வத்திரு நதிகளிலெல்லாம் நீராடினாலும் போகாத பாவங்களும் கூட சேதுவில் நீராடினால் போகும் என்றும் இராமன் சீதையிடம் கூறுகிறான்.

"கங்கையே, யமுனை, கோதாவரி, நருமதை,
காவேரி,
பொங்கு நீர் நதிகள் யாவும் படிந்து அலால்
புன்மை போகா
சங்கு எறி தரங்க வேலை தட்ட இச்சேது
என்னும்,
இங்கிதின் எதிர்ந்தோர் புன்மையாவும்
நீக்கும் அன்றே!"

என்று இராமன் கூறுகிறான். அத்தகைய புண்ணியமான புனிதமான சேது தீர்த்தம் தமிழகத்தில் உள்ளது என்பதையும் அதன் பெருமையையும் கம்பன் காவியத்தின் மூலம் அறிகிறோம்.

அடுத்து தமிழ் முனிவன் வாழும் மலையையும் திருவேங்கட மலையையும் அனுமன் வாழ்ந்த மலையையும் காண்பிக்கிறான்.

"இது தமிழ் முனிவன் வைகும் இயல் தரு
குன்றம் முன் தோன்று
உது வளர் மணிமால் ஓங்கல் உப்புறத்து
உயர்ந்து தோன்றும்
அது திகழ் அனந்த வேற்பு என்று அருள்தர
அனுமன் தோன்றிற்று
எது என அணங்கை நோக்கி இற்று என
இராமன் சொன்னான்."

இவ்வாறு கம்பன், தமிழையும், அகத்தியனையும், தமிழ் நாட்டையும், பொதிகையையும், காவிரியையும், பொருனையையும் திருவேங்கடத்தையும், சிறப்பு மிக்க சேதுவையும் வாழ்த்தியும், புகழ்ந்தும் நினைவு படுத்தியும், உவமை காட்டியும் தனது மகா காவியத்தில் பல இடங்களிலும் பாடியுள்ளது, அம்மகாகவி தமிழுக்குக் காட்டியுள்ள மதிப்பும் மட்டிலா மரியாதையும் அன்பும் பற்றுமாகும்.

கம்பன் வாழ்க. கன்னித் தமிழ் வாழ்க

கம்பன் : ஒரு சமுதாயப் பார்வை

நூலாசிரியர் : அ.சீனிவாசன்

## நூலாசிரியரைப்பற்றி

இந்நூலாசிரியர் திரு. அ. சீனிவாசன், முன்னாள் இராமநாதபுரம் மாவட்டம், இன்றைய விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்ராப் ஒன்றியம், மகாராஜபுரம் கிராமத்தில் விவசாய குடும்பத்தில் 1925 –ம் ஆண்டில் பிறந்தவர்.

தனது சொந்த கிராமத்திலும், மற்றும் சாத்தூர், வத்ராப், விருதுநகர், மதுரை முதலிய இடங்களில் தனது கல்வியை முடித்து இரண்டாவது உலகப் போர் காலத்தில் 1943 – ம் ஆண்டில் இந்திய விமானப்படையில் சேர்ந்து தொழில் நுட்ப நிபுணராகப் படித்துப் பட்டம் பெற்றுப் பணியாற்றியவர்.

சிறுவயது முதலே இந்திய தேசீய விடுதலை இயக்கம், தொழிலாளர் இயக்கம், சமூக சீர்திருத்த இயக்கம், பகுத்தறிவு இயக்கம், பொதுவுடமை இயக்கம் ஆகியவற்றில் தொடர்பும் ஈடுபாடும் கொண்டு நாட்டுப்பற்றுடன் பணியாற்றியவர்.

1940 –ம் ஆண்டில் யுத்த எதிர்ப்புக் கிளச்சியிலும், 1942 – ம் ஆண்டு ஆகஸ்டு போராட்டத்திலும், பொதுவுடமைக் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்திலும், பல தொழிலாளர், விவசாயிகளின் போராட்டங்களிலும் கைது செய்யப்பட்டு சிறைவாசமும் சித்திரவதையும் அனுபவித்து தியாகத் தழும்புகள் கொண்டவர்.

இராஜபாளையம் தளவாய்புரம், சிவகாசி, விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, சென்னை துறைமுகம், ஆவடி டாங்க் தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம் முதலிய இடங்களில் தொழிற்கங்கத் தலைவராகப் பணியாற்றியவர்.

இராஜபாளையம் நகரசபை உறுப்பினராகவும், சென்னை கப்பல் கூடத் தொழிலாளர் வாரிய உறுப்பினராகவும் பணியாற்றியவர். 1984 மற்றும் 1991 – ம் ஆண்டில் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் சிவகாசி

தொகுதியில் போட்டியிட்டார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் அனுதாப அலை அவருக்கு எதிராக இருந்தது. எனவே அவர் வெற்றி பெறவில்லை. இரண்டு தடவைகளிலும் இரண்டரை லட்சம் வாக்குகளுக்கு மேல் பெற்றும், மிகவும் குறைவான வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ஜனசக்தி வார இதழ், நாளிதழ், மார்க்சீய ஒளி மாத இதழ் ஆகிய பத்திரிகைகளில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர். அத்துடன் சாந்தி, ஆர்பர் தொழிலாளி, தொழிற் சங்கச் செய்தி முதலிய பத்திரிகைகளிலும் பளியாற்றியவர். இப்போதும் சுதந்திரமான பத்திகையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

திரு. அ. சீனிவாசன் தனது இளம் வயது முதலே தனது தாய் தந்தையர் மூலம், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், இராமாயணம், மகாபாரதம் நளவெண்பா முதலிய நூல்களிலும் மற்றும் பாகவதம் முதலிய வைணவ இலக்கியங்களிலும் அறிமுகமாகியவர். விடுதலை இயக்கத்தின் தொடர்பு காரணமாக மகாகவி சுப்ரமணிய பாரதியின் கவிதைகள், கட்டுரைகள் மீது ஆழ்ந்த பற்று கொண்டு இலக்கியப்படிப்பில் ஈடுபட்டவர்.

காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்சீய – லெனினியத் தத்துவ ஞானத்தின் அடிப்படைகள், அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள், வரலாற்றியல் பொருள் முதல்வாதம், மார்க்சீய தத்துவம், மார்க்சீயமும் பகவத் கீதையும், ஐக்கிய முன்னணித் தந்திரம், முதலிய முக்கியமான பெரிய ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்தவர்.

மார்க்சீயப் பொருளாதார தத்துவம், கீழை நாட்டு விடுதலை இயக்கம், ஜீவாவின் தமிழ்ப்பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி முதலிய மூல நுல்கள் எழுதியவர்.

தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம், சமூகவியல் பற்றிய காரல் மார்க்சின் நூல்களையும், இந்திய இலக்கியங்களையும் சாத்திரங்களையும் தமிழ் இலக்கியங்களையும் படித்துப் பத்திரிகைகளில் பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவர் “ஜனசக்தி” நாளிதழின் தலைமை ஆசிரியராக இருந்தபோது பாரதி

நூற்றாண்டு விழா மலரையும் (1982) காரல் மார்க்ஸ் மறைந்த நூற்றாண்டு அஞ்சலி மலரையும் (1983) சிறப்பாகத் தயாரித்தார். இந்த இரண்டு சிறப்பு மலர்களும் தமிழ் நாட்டில் பலராலும் நன்கு பாராட்டப்பட்டன.

திரு. அ. சீனிவாசன் அக்காலத்தில் எழுதிய மூல நூல்களுக்கு பேராசிரியர் வானமாமலை, பேராசிரியர் சஞ்சீவி, பேராசிரியர் நா. தருமராசன் ஆகியோர் சிறப்பாக முன்னுரை எழுதியுள்ளார்கள்.

இவர் அன்றைய சோவியத் யூனியன் (ரஷ்யா, ஆர்மீனியா, அஜர்பைஜான்) பல்கேரியா, செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளில் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்துள்ளார். திரு. அ. சீனிவாசன் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளையும் நன்கு அறிந்தவர், அத்துடன் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளும் அறிந்தவர்.

இவர், "Denied oppurtunities for the young workers in Developing countries with particular reference to India" என்னும் தலைப்பில் உலக இளைஞர் சம்மேளன மாநாட்டிலும், " Inter secteral Relations between public sector and Private sector in India," என்னும் தலைப்பில் புது டில்லியில் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்து அவை, அந்த அனைத்து நாட்டு அமைப்புகளில் பதிவாகியுள்ளன.

திரு. அ. சீனிவாசன் தனது சிறந்த எழுத்துப் பணிகளுக்காக சோவியத் நாடு நேரு விருதும், சிறந்தப் பத்திரிகையாளர் பணிக்காக சர்வதேச கௌரவப்பட்டயமும் பெற்றுள்ளார்.

இவர், தற்சமயம், பாரதி, கம்பன், இளங்கோவடிகள், திருவள்ளுவர், ஆழ்வார்கள் முதலியோர்களைப்பற்றியும் அவர்கள் எழுதியுள்ள நூல்கள் பற்றியும் ஆய்வுகள் செய்தும் பல நூல்களை எழுதி வெளியிட்டு வருகிறார்.

தமிழக அரசின், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் சிறந்த நூல்களுக்கு உதவித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு, "பாரதப்பண்பாட்டு தளத்தில் பாரதி", "பாரதியின் புதிய ஆத்திசூடி

ஒரு விளக்கவுரை" சிலப்பதிகாரத்தில் வைதீக் கருத்துக்கள் என்னும் நூல்களையும் எழுதி புதிப்பித்து வெளியிட்டுள்ளார். இந்த நூல்களைப்பற்றிப் பத்திரிகைகளிலும் மதிப்புரை வந்துள்ளது.

இவை தவிர "ஆழ்வார்களும் பாரதியும்", "சிலப்பதிகாரமும் நாலாயிரத் திவ்யப்பிர பந்தமும்", "பௌத்தம்–ஒரு புதிய பார்வை" என்னும் நூல்களும் எழுதி முடிக்கப்பட்டு அச்சுக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

"கம்பன் – ஒரு சமுதாயப் பார்வை" என்னும் இந்த நூல் உங்கள் கையில் இருக்கிறது. மேலும், பாரதி, கம்பன் பற்றிய புதிய ஆய்வுகளும் செய்து வருகிறார்.

திரு. அ. சீனிவாசன் அண்மையில் "மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட "பாரதியின் உரைநடை" பற்றிய இலக்கிய ஆய்வில் பாரதியின் உரைநடை – மொழி என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு முதல் பரிசும் பாராட்டுப் பத்திரமும் கிடைத்துள்ளது. இவர் அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள "பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி" என்னும் நூலுக்கு அமரர் கே.ஆர் வாசுதேவன் நினைவு இலக்கியப் போட்டியின் பரிசும் சான்றிதழும் கிடைத்துள்ளது.

திரு. அ. சீனிவாசன் இப்போது பாரதீய ஜனதாக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு, அதன் தமிழ் மாநில செயற்குழு பொருப்பிலும், ஒரே நாடு பத்திரிகையில் ஆசிரியர் குழு உறுப்பினர் பொறுப்பிலும் இருந்து பாரத அன்னையின் திருப்பணியில் ஈடுபட்டு பணியாற்றி வருகிறார்.

அரசியல், பொருளாராம், தத்துவ ஞானம், மற்றும் பாரதி, கம்பன் தமிழ் இலக்கியம் தொடர்பான மேலும் சில நூல்கள் எழுதுவதற்கும் திட்டமிட்டுள்ளார். எழுதிக் கொண்டுமிருக்கிறார்.